Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 125 • 31.12.2017




## வாகனம் வைத்திருப்பவர்கள் கட்டாயம் படியுங்கள்!



## யாழ்ப்பாணத்தில் தவறான வேட்புமனு ஏற்கப்பட்டது!

## உடைகிறது உதயசூரியன் கூட்டணி!



## அழகியின் பின்னால் பதுங்கியிருந்த இரகசிய ஏஜெண்ட்!

## 2018 - உங்கள் ராசி பலனும் பரிகாரமும்

# கல்யாணத்தில் கொடுத்த வாக்கை கடைசிவரை காப்பாற்றிய பிரபாகரன்!




மெல்பேன் அவுஸ்திரேலியாவிலிருந்து ஒலிபரப்பாகும் உலகத் தமிழர்களின் அபிமான வானொலி சங்கநாதம்
பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் கேட்கத் தவறாதீர்கள்,

சங்கநாதம் SANGANATHAM.NET.AU

யாழ் நேயர்களுக்காக நேயர் விருப்பம், பிறந்த நாள் வாழ்த்துக்கள் மற்றும் திருமண வாழத்துக்கள் என்பன இலவசமாக ஒலிபரப்பாகும். மெல்பேன் நேயர்கள் 97.1FM மற்றும் அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபன (24 மணி) ஒலிபரப்பு சேவையூடாகவும் சர்வதேச நேயர்கள் WWW.SNAGANATHAM .NET.AU மற்றும் 3MDR.COM.AU ஊடாகவும் கேட்டு மகிழலாம்.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு



# Cosy

## HOTEL & RESTAURANT

North Indian, Punjabi, Chinese
&
Jaffna Foods



Free Home Delivery (Limited Area)
**Hotlines: 021 222 7100 / 021 222 5899**

Open Daily : 11.00 a.m. to 11.00 p.m.
272, Stanley Road, Jaffna.
15, Sirambiyadi Lane, Jaffna.

**We Accept all credit cards**

www.cosylanka.com
info@cosylanka.com
www.facebook.com/cosy.cosy.167

| COSY HOTEL & RESTAURANT | Non A/C | A/C |
|---|---|---|
| Single bed | Rs. 2,000 | Rs. 2,500 |
| Double bed | Rs. 3,000 | Rs. 3,500 |
| Triple bed | Rs. 4,000 | Rs. 4,500 |
| Four bed | Rs. 4,500 | Rs. 5,000 |

10% Service charge will be added

Restaurant / party Hall
Roof Top Beer Garden
Ample Parking
Generator Backup
Wi - Fi Facilities
24 Hrs Security Service

*Gift Vouchers* Rs. 1,000 Rs. 2,000 Rs. 500
**Available here**

TOPAZ Mall
TOPAZ
No.01 Shop in Jaffna

ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்



We are Specialist in
Wedding suits, Wedding Sarees , Party Sarees, Wedding Frocks, Party Frocks and all kinds of Items

| TOPAZ | TOPAZ TAILORING | TOPAZ MALL |
|---|---|---|
| No 72, Grand Bazaar Jaffna | No 80/24, Kasthuriyar Road Jaffna | No 195, Power House Road Jaffna |
| Tel 021 222 4743 | Tel 021 222 4643 | Tel 021 222 4933 |
| Fax 021 222 7645 | Email : topazagn@gmail.com | 021 221 9933 |

coustomer is king



# Eye Care Optical

ஐ கெயார் ஒப்டிக்கல்

கணனி மூலம்
கண் பரிசோதிக்கப்பட்டு
கண்ணாடி வழங்கப்படும்

55,Bus stand Kandy Road, Vavuniya
49, Bus stand complex, Vavuniya
Shop.T.P No 0244905334
Hotline 0775717676

புது வருட வாழ்த்துக்கள்

பழைய, புதிய பாடல்களை ஒலிப்பதிவு
செய்து கொள்ளவும், அனைத்து பழைய,
புதிய திரைப்பட CDகளையும் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்



MAXCEL CD LAND

T.P: 021 222 3594
077 738 7083
No 281, Clock Tower Road, Jaffna

கே.ராகோத்தமன்

எனவே ரயில் எப்படியும் போபால் வரைதான் சென்றிருக்கும் என்று முடிவு செய்து, போபாலில் உள்ள சி.பி.ஐ அதிகாரிகளைத் தொடர்பு கொண்டோம்.

நாக்பூரிலும் தகவல் சொல்லி, டெல்லி செல்லும் ஜி.டி. எக்ஸ்பிரஸில், இன்ன கோச்சில் இன்ன பெயர் கொண்ட பயணி இருக்கிறாரா, அவர் யார், எப்படி இருக்கிறார் என்று கவனியுங்கள், நடவடிக்கைகளைக் கண்காணியுங்கள் என்று கேட்டுக்கொண்டோம்.

ரயில்வே சார்ட்டில் ஆதிரை, கனகசபாபதி என்கிற பெயர்களிலேயே டிக்கெட் பதிவு செய்யப்பட்டிருந்தபடியால், அடையாளம் காண்பது எங்களுக்கு எளிதாக இருந்தது.

விரைவில் நாக்பூர் அதிகாரிகள் எங்களைத் தொடர்பு கொண்டு விட்டார்கள். தகவலில் பிழையில்லை. ஆதிரை என்கிற பெண்ணும் கனகசபாபதி என்கிற முதியவர் ஒருவரும் டெல்லிக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

அவர்களை என்ன செய்யலாம்? ரயிலில் ஒன்றும் செய்ய வேண்டாம். கவனமாகப் பின்தொடருங்கள்.

இடத்தில் இருந்து, இல்லாமல் போயிருக்க வேண்டியவள் அவள்!

மனித வெடிகுண்டாகத்தான் இந்தியாவுக்குள் காலடி எடுத்து வைத்தாள். அவளது நேரம், அச்செயலில் இருந்து அவள் தற்செயலாக விடுவிக்கப்பட்டு, சி.பி.ஐ வசம் சிக்க வைத்திருந்தது.

ஆதிரை என்கிற சோனியாவின் மூலம் எங்களுக்குக் கிடைத்த தகவல்களுள் மிக முக்கியமானது, சின்ன சாந்தனின் இருப்பிடம் பற்றியது. சிவராசனின் வலக்கரமான சின்ன சாந்தன். அவனைத்தான் தேடு தேடென்று தேடிக்கொண்டிருந்தோம். அவன் பழவந்தாங்கலில் இருப்பதாக ஆதிரை சொன்னாள்.

ஆனால் அவளுக்கு முகவரி சரியாகத் தெரியவில்லை. பிரவுன் கலர் யூனிஃபாரம் போடும் குழந்தைகள் படிக்கும் பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்து வீடு என்று ஒரு மாதிரி அடையாளம் சொன்னாள்.

சின்ன சாந்தன் தங்கியிருந்த வீட்டை இரவுப் பொழுதில் முற்றுகையிட்டோம். மாட்டிக்கொண்ட விவரம் அறிந்ததும் சாந்தன், சயனைட் அருந்தி உயிர்விட முயற்சி செய்தான்.

ஆனால் அவனைக் காப்பாற்றி, இருந்தவர்களுடன் பேசியும் பழகியும் வந்தது.

பின்னால் இதே உத்தியைத்தான், மரகதம் சந்திரசேகரைச் சந்தித்து, அவரது மகனை நட்பாக்கிக் கொண்டு, ராஜீவ் காந்திக்கு மாலையிட அனுமதி பெற்றபோது சிவராசனும் பின்பற்றினார் என்பது அடுத்த வியப்பு. தாங்கள் திட்டமிட்ட பணி தடையில்லாமல் நடைபெற, தங்களுடைய ஜென்ம விரோதிகளின் அடையாளத்தைக் கூடத் தாற்காலிகமாக ஏந்தலாம் என்பது அவர்களுடைய கருத்தாக இருந்திருக்கிறது!

சுதேந்திர ராஜா (சுதந்திர ராஜா அல்ல) என்கிற மகேந்திரன் என்கிற சாந்தன் என்கிற ராஜு என்கிற சின்ன சாந்தனுக்குச் சிறு வயது முதல் சிவராசனைத் தெரியும்.

சிவராசன் என்கிற ரகுவரனின் நிஜப்பெயர் பாக்கியச்சந்திரன் என்பதைத் தொடக்கம் முதலே அறிந்த மிகச் சிலருள் அவரும் ஒருவர்.

சின்ன சாந்தன், சிவராசனின் தம்பியுடன் ஒன்றாகப் படித்தவர்.

அந்த வகையில் அறிமுகம். விடுதலைப் புலிகள் இயக்கத்



# லொட்ஜில் மடக்கிப்பிடிக்கப்பட்ட பெண் தற்கொலை போராளி...

## ராஜீவ் மர்மத்தை உடைத்தது!

டெல்லிவரை சென்றபின் மறு உத்தரவு வரும் என்று சொன்னோம். அவர்கள் டெல்லியில் இறங்கியதும் பழைய கிருஷ்ணா லொட்ஜிலேயே அறை எடுத்துத் தங்கிய விவரம் கிடைத்தது. உடனே அங்கு சென்று கைது செய்யச் சொன்னோம்.

ஆதிரையைக் கைது செய்து சென்னைக்குக் கொண்டு வந்ததும் சதித்திட்டத்தின் வேறு சில பக்கங்களும் பரிமாணங்களும் எங்களுக்குக் கிடைக்கத் தொடங்கின.

அவளை இந்தியாவுக்கு அனுப்பியது பொட்டு அம்மான்.

டெல்லிக்குச் சென்று தங்க வைத்தது சிவராசன். ஆனால் ராஜீவ் படுகொலை தமிழகத்தில் நிகழ்த்தத் தீர்மானிக்கப்பட்டதால், அவள் வந்த வேலைக்கு அவசியம் ஏற்படவில்லை.

தப்பித்து நேபாளம் வழியே வெளியேற முடிவு செய்து போனபோது பிடிபட்டாள். ஒரு வகையில் தணுவின்



**ராஜீவ் காந்தி கொலை எப்படி... என்ன நடந்தது? 15**

கைது செய்து மல்லிகைக்கு அழைத்துச் சென்றுவிட்டோம். சின்ன சாந்தனின் கைது, ராஜீவ் கொலை வழக்குக்கு உதவி செய்ததைக் காட்டிலும், அதற்குமுன் விடுதலைப் புலிகள் தமிழ் நாட்டில் நிகழ்த்திய மிக பயங்கரமான நடவடிக்கையான பத்மநாபா கொலையில் பல சந்தேக முடிச்சுகளை அவிழ்க்கப் பேருதவி செய்தது.

இதில் வியப்புக்குரிய விஷயம் என்னவென்றால், விடுதலைப் புலி உறுப்பினரான சின்ன சாந்தன், பத்மநாபாவைத் தீர்த்துக் கட்டுவதற்காக மனப்பூர்வமாகத் தன்னை ஒரு ஈ.பி.ஆர்.எல். எஃப் ஆதரவாளனாக இனம் காட்டிக்கொண்டு சூளைமேடு ஈ.பி.ஆர்.எல்.எஃப் அலுவலகத்தில்

தைப் பற்றியும் அதில் சிவராசனின் செயல்பாடுகள் பற்றியும் சின்ன சாந்தனுக்கு நன்கு தெரியும். ஆனால் அவர் அப்போது இயக்கத்தில் இல்லை.

1988 பெப்ரவரியில் சிவராசன் திடீரென்று ஒருநாள் சின்ன சாந்தனைக் கூப்பிட்டு, 'உனக்கு சென்னைக்குச் சென்று படிக்க விருப்பமா? இயக்கம் அதற்கு ஏற்பாடு செய்யும். நான் பார்த்துக்கொள்வேன்' என்று சொல்லியிருக்கிறார்.

இது நடந்து சரியாக இரண்டு வருடங்கள் கழித்து, 1990ம் ஆண்டு பெப்ரவரியில் சிவராசன், சின்ன சாந்தனை அழைத்துக்கொண்டு சென்னை வந்தார். வடபழனி கங்கையம்மன் கோயில் தெருவில் வசித்து வந்த நாகராஜன் என்கிற இலங்கைத் தமிழர் ஒருவர் வீட்டுக்கு அவர்கள் சென்றார்கள்.

நாகராஜன், தொழில்முறையில் ஒரு கடத்தல்காரர். சிவராசனுக்குப் பல காலமாகப் பழக்கமானவர். அவரிடம் சின்ன சாந்தன் சென்னைக்குப் படிக்க வந்திருக்கும் விஷயத்தைச் சொல்ல, அன்றைய தினமே நாகராஜனும் சிவராசனும் சாந்தனை எம்.ஐ.ஈ.டி.க்கு (Madras Institute of Engineering Technology) அழைத்துச் சென்று சேர்த்து விட்டார்கள்.

கையோடு அவரை அழைத்துக் கொண்டு பாண்டிபஜாருக்குச் சென்று வேண்டிய துணிமணிகள், இதர பொருள்களையும் சிவராசன் வாங்கிக் கொடுத்து, எம்.ஐ.ஈ.டியிலேயே ஹொஸ்டலில் தங்கிக்கொண்டு, கல்லூரிக்குச் சென்று படிக்கும்படியும் தாம் அவ்வப்போது வந்து பார்த்துக் கொள்வதாகவும் சொல்லிவிட்டுச் சென்றார்.

படிக்கவும் வைத்து, வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்து யார் இப்படித் தன்னை கவனிப்பார்கள் என்று சின்ன சாந்தனுக்கு சிவராசன் மீது மிகுந்த மதிப்பும் விசுவாசமும் உண்டாயிற்று.

பதினைந்து நாள்கள் ஒழுங்காகக் கல்லூரிக்குச் சென்று வந்துகொண்டிருந்தார். அதன்பின் ஒருநாள் வள்ளுவர் கோட்டத்தில் சிவராசனைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தபோது, சிவராசன் ஈ.பி.ஆர்.எல்.எஃப் இயக்கத்தைப் பற்றியும் பத்மநாபாவைப் பற்றியும் சின்ன சாந்தனிடம் சிறிது நேரம் பேசினார்.

'அது ஒரு சமூக விரோத இயக்கம். இந்திய அமைதிப்படையிடம் விடுதலைப் புலிகளைக் காட்டிக் கொடுப்பதே அவர்கள்தான். நீ அவர்களைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும்'


(தொடரும்)



ஈழப்போரில் உயிர்நீத்த தியாகிகளின் குடும்பங்களைச் சந்தித்து ஆறுதல் வழங்கியபோது...

# ‘எங்களது சமாதியிலிருந்து சுரேஷ் பிரேமச்சந்திரன் சாம்ராஜ்யத்தை அமைக்க முயல்கிறார்’

## விரைவில் உடைகிறது உதயசூரியன் கூட்டணி



**கருடன் பக்கம்**

கருடன்

கையில் பெரிய காகித கட்டுக்களுடன் வந்தார் கருடர். என்னவென விசாரிக்க, கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் என்றார். அவற்றை சரி பார்த்தவர், “ஒரு கூட்டணியின் விஞ்ஞாபனம் மட்டும்தான் மிஸ்ஸிங்” என்றார்.

“யாருடையது?”

“ஆனந்தசங்கரி, சுரேஷ் பிரேமச்சந்திரன் கூட்டில் உருவான தமிழ் தேசிய விடுதலை முன்னணியின் விஞ்ஞாபனம் மட்டும் கிடைக்கவில்லை. உடைகின்ற கூட்டுத்தானே என்றோ என்னவோ விஞ்ஞாபனம் தயாரிக்காமல் விட்டு விட்டார்கள் போல” என குண்டை தூக்கிப்போட்டார்.

“உதயசூரியன் கூட்டு உடையப் போகிறதா? இப்பொழுதுதானே உதயசூரியன் சின்னத்தை கைப்பற்றவே தவிர, தன்னை ஒரு மாற்று அரசியல் தலைமையாக கருதவில்லையென நிச்சயமாக நம்ப தொடங்கிவிட்டார்.

கூட்டணியின் நடவடிக்கைகளை சுரேஷ் பிரேமச்சந்திரனின் இஸ்டத்திற்கு இதுவரை ஆனந்தசங்கரி விட்டிருந்தார். அவரது கட்சிக்குள்ளும் இதற்கு கடுமையான எதிர்ப்பு கிளம்பியுள்ளது. ‘இத்தனை நாள் பாடுபட்ட எங்களிடமிருந்து கட்சியின் பெயரையும், சின்னத்தையும் சுரேஷ் பிரேமச்சந்திரன் எடுத்துக்கொண்டு போவதை அனுமதிக்கிறீர்கள்’ என கட்சி முக்கியஸ்தர்கள் ஆனந்தசங்கரியிடம் நேரிலேயே குற்றம்சாட்டியுள்ளனர்.

‘தமிழ் தேசிய கூட்டமைப்பின் மீது உங்களிற்கு கோபம் இருக்கலாம். சுரேசும் அதிலிருந்து முரண்பட்டுக்கொண்டு என்பதையும் உணர்கிறார். இந்த கூட்டணிக்கு சங்கரியார் சம்மதித்ததற்கு, இதுவரையான அரசியல் அவமானங்களிற்கெல்லாம் ஒரு முடிவுகட்டி தன்னை நிரூபிக்க வேண்டுமென அவர் நினைத்ததுதான் காரணம். அதனால், தொகுதி பங்கீடு, வேட்பாளர் தெரிவு போன்ற விடயங்களில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இற்கு விட்டுகொடுத்து தாராளமாக நடந்து கொண்டார். மீண்டும் ஒரு அரசியல் பலம் பெறுவதுதான் அவரது நோக்கமாக இருந்தது.

ஆனால் அது சாத்தியமில்லையென்பது அவருக்கு புரிந்துவிட்டது. அதனால் மிக சோர்வாக இருக்கிறார். தமிழ் தேசிய மக்கள் முன்னணியையும் சேர்த்து பலமான கூட்டணியமைக்கலாமென முதலில் தமிழரசுக்கட்சியின் மீது சுரேஷ் பிரேமச்சந்திரன் என்ன குற்றச்சாட்டுக்களை சுமத்தினாரோ, இப்போது அதே குற்றச்சாட்டை ஈ.பி.ஆர்.எல்.எவ் மீது தமிழர் விடுதலைக் கூட்டணி சுமத்துகிறது. ஆசனப்பங்கீட்டில் ஈ.பி.ஆர்.எல்.எவ் தன்னிச்சையாக முடிவெடுத்துள்ளது. இதனால் ஏமாற்றப்பட்ட உணர்வே தமிழர் விடுதலை கூட்டணி பிரமுகர்களிடம் உள்ளது.

வேட்பாளர் தெரிவு விசயத்தில் சுரேஷ் பிரேமச்சந்திரன் அதிகாரத்தை கையிலெடுத்து விட்டார். கடந்த தேர்தல்களில் தமிழர் விடுதலை கூட்டணியின் நிலைமை கழுதை தேய்ந்து கட்டெறுமையான நிலைமைதான். இதனால் அவர்களிடம் பேரம் பேசும் சக்தியிருக்கவில்லை. அதைவிட,



ஆனந்தசங்கரி - சுரேஷ் பிரேமச்சந்திரன் - சிவசக்தி ஆனந்தன்

உருவாகியது”

“ம்...கூட்டணிகள் இயல்பாக உருவாக வேண்டும். பின்னணியில் யாராலும் இயக்கப்பட்டோ, உள்நோக்கம் கருதியோ கூட்டணிகள் உருவாகினால் என்ன நடக்குமென்பதற்கு உதயசூரியன் ஒரு உதாரணம். இந்த அரசியல் விளையாட்டில் அதிகம் பாதிக்கப்பட்டது ஆனந்தசங்கரிதான்”

“பூடகம் போடாமல் விபரமாக சொல்லும் கருடரே”

உடைகிறது உதயசூரியன்!

“தமிழ் தேசிய விடுதலை கூட்டணி உருவாக்கப்பட்டபோதே நிறைய விமர்சனங்கள் வந்தன. இந்தியாவின் பின்னணியில் இந்த முயற்சி நடக்கிறதென நினைத்த தமிழ் தேசிய மக்கள் முன்னணி இதில் இணைய விரும்பவில்லை. உதயசூரியன் சின்னத்தை பெறுவதற்காகவே சுரேஷ் பிரேமச்சந்திரன் இந்த கூட்டணிக்குள் வந்தார் என்ற விமரசனங்களும் வந்தன.

இப்பொழுது உண்மையிலேயே ஆனந்தசங்கரி, இரண்டாவது விமர்சனத்தை நம்ப தொடங்கி விட்டார். சுரேஷ் பிரேமச்சந்திரன் தன்னுடன் கூட்டணி அமைத்தது, வந்திருக்கலாம். ஆனால் இந்த இணைவு அதிருப்தியாளர்களிற்கிடையிலான சம அந்தஸ்துள்ள இணைவல்ல. உங்களை சும்மா இருக்க சொல்லிவிட்டு, ஈ.பி.ஆர்.எல்.எவ். அனைத்து முடிவுகளையும் எடுக்கிறது. விரைவில் கட்சியின் சின்னம் அவர்களிடம் போவதற்கும் வாய்ப்புண்டு’ என்றும் எச்சரித்துள்ளனர்.

கட்சிக்குள் கிடைத்த எச்சரிக்கையை மெய்ப்பிப்பதை போலவே ஈ.பி.ஆர். எல்.எவ் உம் நடந்து கொள்ள, ஆனந்தசங்கரி பயங்கர அதிருப்தியில் இருக்கிறார். இப்பொழுது எதுவும் கதைத்தால் தேர்தலில் எதிரொலித்து விடலாம் என்பதற்காக மௌனமாக இருக்கிறார். தேர்தல் முடிந்ததும் நிச்சயம் கதைப்பார்”

“என்ன சொல்லப்போகிறார்?”

“ஆனந்தசங்கரி எப்படி நினைக்கிறாரோ, அப்படியே சொல்லவா?”

“சொல்லுங்கள்”

“தமிழர் விடுதலைக்கூட்டணி ஒரு பாரம்பரியமான கட்சி. தமிழரசுக் கட்சிக்கு எதிராக சங்கரியார் நீண்ட போராட்டத்தை நடத்தி வந்தவர். அதெல்லாம் கைவிட்டு செல்கிறதென உணரத்தொடங்கிவிட்டார். இந்த போராட்டத்தில் தான் தோற்கிறேன் நினைத்தார். அது நடக்கவில்லை. யாழ் மாநகரசபை தேர்தலில் நிறைய கட்சிகளும், சுயேட்சைகளும் போட்டியிடுவது தமக்கு பாதகமென நினைக்கிறார். அதைவிட, உதயசூரியனின் மாநகரசபை வேட்பு மனுவில் பல நிராகரிக்கப்பட்டு விட்டன.

இதையெல்லாம் விட, சுரேஷ் பிரேமச்சந்திரன் சின்னத்தை கைப்பற்றவே தம்முடன் இணைந்திருக்கிறார், இப்பொழுது தம்மை பலவீனப்படுத்தும் காரியங்களில் ஈடுபட்டுள்ளார் என ஆனந்தசங்கரி நினைக்கிறார். சங்கரியார் எப்படி நினைக்கிறார் என மிக சரியாக சொன்னால் ‘எங்களது சமாதியில் இருந்து சுரேஷ் பிரேமச்சந்திரன் தனது சாம்ராஜ்யத்தை உருவாக்க முயல்கிறார்’ என நினைக்கிறார். இதை அவரது ஆதரவாளர்களிடமும் சொல்லியுள்ளார்”

“உதயசூரியன் கூட்டணிக்குள் இத்தனை சிக்கலா?”

விரக்தியுடன் வெளியேறிய ஆனந்தசங்கரி!

“ம்... ஆசனப்பங்கீட்டிலும் நிறைய சிக்கல் நீடிக்கிறது. தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் இருந்தவரை தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு எதிராக தமது பலத்தை நிரூபித்து காட்டியே தீர வேண்டிய நெருக்கடி இரண்டு கட்சிகளிற்கும். ஆகவே, வேட்பாளர் தெரிவை ஈ.பி.ஆர். எல்.எவ் விடமே தமிழர் விடுதலை கூட்டணி விட்டுக்கொடுத்துவிட்டு, தமது வேட்பாளர் பட்டியலை மட்டும் கொடுத்தார்கள்.

ஆனால், அவர்களின் பட்டியல்கள் குப்பைக்கூடைக்குள்தான் சென்றன. இதுதான் தமிழர் விடுதலை கூட்டணிக்குள் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது. தமிழர் விடுதலை கூட்டணியை ஒரு பொருட்டாகவே ஈ.பி.ஆர்.எல்.எவ் மதிக்கவில்லை. த.வி.கூ கொடுத்த பெரும்பாலான வேட்பாளர்களின் பெயர் வெட்டப்பட்டு விட்டது. சில சபைகளில் ஒரு வேட்பாளரை கூட களமிறக்க முடியாமல் ஏமாற்றத்துடன் இருக்கிறது த.வி.கூ.

வவுனியா நகரசபை வேட்பாளர் தெரிவில் கொஞ்சம் இழுபறியிருந்தது. அங்குள்ள சில த.வி.கூ பிரமுகர்கள் களமிறங்க விரும்பியிருக்கிறார்கள். வவுனியா விவகாரத்தை சிவசக்தி ஆனந்தன் எம்.பிதான் கையாண்டார். தமது

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

வேட்பாளர்களிற்கு இடமளிக்குமாறு ஆனந்தசங்கரி தொலைபேசியில் பேசியிருக்கிறார். அதற்கு சிவசக்தி ஆனந்தன் இணங்கவில்லை. பின்னர் வவுனியாவிற்கு சென்று சிவசக்தி ஆனந்தனை நேரில் சந்தித்து பேசியிருக்கிறார் ஆனந்தசங்கரி. ஒரு வேட்பாளர் பட்டியலுடன் போனவர், இறுதியில் ஒரேயொரு வேட்பாளருக்காவது இடமளிக்குமாறு கேட்டிருக்கிறார். ஈ.பி.ஆர்.எல்.எவ் மறுத்துவிட்டது.ஒரு ஆசனத்தையாவது தருமாறு இரண்டரை மணி நேரமாக கேட்டிருக்கிறார். பலனில்லை. இறுதியில் 'கொஞ்சமாவது மனச்சாட்சியுடன் நடவுங்கள்' எனகூறிவிட்டு ஆனந்தசங்கரி எழுந்து வந்துவிட்டார். இந்த கூட்டணி வெற்றியளிக்காதென்ற முடிவிற்கு த.வி.கூ வந்துவிட்டது. தேர்தலில் ஓரளவாவது வெற்றி கிடைக்குமென்றும் நம்புவதாக தெரியவில்லை. ஆனால் தேர்தல் முடியும்வரை எதையும் பேசாமல் இருப்பதென முடிவெடுத்துள்ளனர். தேர்தலின் பின்னர் த.வி.கூ இதைப்பற்றி பகிரங்கமாக பேசும். அப்படி பேசும்போது இந்த கூட்டணி நீடிக்குமென சொல்ல முடியாது"

"தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் என்ன செய்திகள் வைத்திருக்கிறீர்கள்?"

"அங்கும் சில செய்திகள் இருக்கின்றன. முதலாவதாக கடந்த 24ம் திகதி யாழ்ப்பாணத்தில் ரெலோ கட்சியின் யாழ்ப்பாண, கிளிநொச்சி மாவட்ட மத்தியகுழு உறுப்பினர்கள் ஒன்றுகூடி சில தீர்மானங்கள் எடுத்துள்ளனர். தமக்கான ஆசனங்களை தமிழரசுக்கட்சி தராத இடங்


அழிக்கப்பட்ட வில்பத்து சரணாலயம்.

களான யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் பங்காளி கட்சிகளுடன் இணைந்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதில்லையென முடிவெடுத்துள்ளனர்.

ஆனால் இந்த முடிவை எவ்வளவு சீரியஸாக எடுக்கலாமென தெரியவில்லை. ஏனெனில் கட்சிக்குள் செயற்குழு ஒரு முடிவை அறிவிப்பதும், தலைவர் செல்வம் அடைக்கலநாதன் வேறுவிதமாக செயற்படுவதும் வழக்கமாகிவிட்டது. தமிழரசுக் கட்சியுடன் இனி தேர்தல் கூட்டணியே இல்லையென செயற்குழு முன்னர் முடிவெடுத்து, பின்னர் மாற்றிக்கொள்ளப்பட்டது.

வில்பத்து காடழிப்பு சட்டவிரோதமே!

ரெலோ சம்பந்தப்பட்ட இன்னொரு செய்தியும் உள்ளது. வவுனியா, மன்னாரில் சில சபைகளிற்கு தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து முஸ்லிம் காங்கிரசும் போட்டியிடுவது பற்றி பேச்சு நடத்த மு.க செயலாளர் நிசாம் காரியப்பர் மன்னாரிற்கு வந்தார், அவரை கூட்டமைப்பின் பிரமுகர்கள் யாரும் சந்திக்கவில்லையென ஒரு செய்தி வெளியாகியிருந்ததல்லா. இந்த பகுதி வேட்பாளர் தெரிவை செல்வம் அடைக்கலநாதனே கவனித்தார். மன்னாரில் வேட்பாளர் தெரிவை கவனித்தவர் சார்ள்ஸ் நிர்மலநாதன். பங்காளி கட்சிகளை கவனத்தில் கொள்ளாமல் குட்டிராஜாவை போல செயற்பட, அங்கு பெரும் குழப்பம் நிலவியது. இந்த சமயத்தில்தான் நிசாம் காரியப்பர் வந்து, சந்திக்க முடியாமல் திரும்பி சென்றார்.

சார்ள்ஸ் நிர்மலநாதனுடன் ஆசனப்பங்கீட்டில் வில்லங்கப்பட்டு கொண்டிருந்ததில் வேறு ஒன்றையும் கவனிக்க முடியவில்லை என நிசாம் காரியப்பரை சந்திக்காததற்கு செல்வம் அடைக்கலநாதன் கட்சிக்குள் ஒரு விளக்கம் கொடுத்திருக்கிறார்".

"வேறு என்ன செய்திகள் வைத்திருக்கிறீர்கள்?"

"வில்பத்தில் சட்டவிரோதமாக காடழிப்பு நடந்திருக்கிறது என ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் விசாரணைக்குழு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறது. மக்களின் மீள்குடியேற்றம் என்ற பெயரில் பெருமளவு காடுகள் அங்கு அழிக்கப்பட்டுவிட்டன. வனபாதுகாப்பு திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட பகுதியும் அழிக்கப்பட்டுள்ளது. அதெல்லாவற்றையும் விட அதிர்ச்சியானது, காடழிக்கப்பட்ட பகுதியில் வெறும் 20 வீதமானவற்றில் மட்டுமே வீடுகள் அமைக்கப்பட்டு மக்கள் குடியிருக்கிறார்கள். புத்தளம் மாவட்டத்தில் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டவர்களிற்கும் இங்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மன்னார், வவுனியா மாவட்டங்களில் ரிசாட் பதியுதீன் அமைத்த வீடுகள் பலவற்றில் மக்கள் வாழ்வதில்லையென்ற குற்றச்சாட்டுள்ள நிலையில், இந்த அறிக்கை வெளியாகியுள்ளது. ஒன்று மட்டும் தெளிவாகிறது. இலங்கையில் மக்களின் தேவைகளிற்கு ஏற்ப வளங்கள் பங்கிடப்படுவதில்லை" என்றபடி பறந்து சென்றார்.

## வட்டிக்கு விடும் வன்னி எம்.பி!

வன்னியிலுள்ள எம்.பியொருவரின் பலமான சிபாரிசில் கந்து வட்டிக்காரர் ஒருவர் உள்ளூராட்சி தேர்தலில் வேட்பாளராக களமிறக்கப்பட்டுள்ளார். கந்து வட்டிக்காரரின் கிடுக்குப்பிடியில் ஒருவர் தற்கொலை செய்துள்ளார். பலர் ஊரைவிட்டே தலைமறைவாகி விட்டனர். கந்து வட்டிக்காரரை பற்றி ஊரில் நல்ல அபிப்பிராயம் இல்லை. தேர்தலை குறிவைத்து கடந்த சில மாதங்களாக திடீர் சமூகசேவகராக அவர் மாறியிருந்தாலும், உள்ளூர்வாசிகள் விபரமாக இருக்கிறார்கள். கந்துவட்டிக்காரரை ஏன் எம்.பி பலமாக சிபாரிசு செய்ய வேண்டுமென கேட்டால், எம்.பியின் பணம் ஐந்து வீதத்திற்கு கந்து வட்டிக்காரனிற்கு வந்து, பதினொரு வீதமாக வெளியில் வருகிறது என்கிறார்கள்!

## தூக்கிறோம்!


பாதுகாப்பு தரப்பினரின் பின்னணியில் இயங்குகிறார்கள் என விமர்சிக்கப்படும் ஜனநாயக போராளிகள் கட்சி தமிழரசுக்கட்சியின் பங்காளிக்கட்சியாகியுள்ளது. தமிழரசுக்கட்சியின் பங்காளிகள் என்றாலும், கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளின் ஆசனங்கள் சிலதையும் எடுத்து ஜனநாயக போராளிகளிற்கு வழங்கியுள்ளது தமிழரசுக்கட்சி. வட்டார வேட்பாளர்களாக ஜனநாயக போராளிகளின் ஐந்து வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். கட்சியின் தலைவர், விகிதாசார பிரதிநிதிகள் பட்டியலில் முதலாவதாக பெயரிடப்பட்டுள்ளார். இந்த கூட்டணிக்குள் ஒரு இரகசிய உடன்பாடு உள்ளது. ஒரு முக்கியஸ்தரை விரைவில் ஜனநாயக போராளிகள் கட்சியிலிருந்து சந்தடியில்லாமல் அகற்றவுள்ளனர். பாதுகாப்பு தரப்புடன் அவருக்குத்தான் தொடர்புள்ளதாம்!

## வேட்பாளரை மட்டையாக்கிய கில்லாடிகள்!

நல்லூர் பிரதேசசபை தேர்தலில் போட்டியிடும் சுயேட்சைக்குழு வித்தியாசமான அனுபவத்தை சந்தித்துள்ளது. உள்ளூரில் பிரபலமான ஒருவரை பலத்த முயற்சியின் பின் வேட்பாளராக களமிறங்க சம்மதிக்க வைத்துள்ளார்கள். அந்த வேட்பாளரை இன்னொரு கட்சியும் குறிவைத்திருந்தது. ஆனால் சுயேட்சைகுழு முந்தி விட்டது. இதனால் கட்சிக்காரர்கள் ஆத்திரத்தில் இருந்துள்ளார்கள். வேட்பாளர்கள் வேட்புமனுவில் கையெழுத்திட வேண்டிய இறுதிநாளன்று, குறிப்பிட்ட வேட்பாளரையும் அழைத்து மதுபான விருந்து வைத்துள்ளனர் சிலர். வேட்பாளரை நன்றாக மது அருந்த வைத்து, நிதானமிழக்க வைத்துள்ளார்கள். அவர் நிதானமிழந்ததும் அவரது தொலைபேசியையும் நிறுத்தி வைத்து விட்டார்கள். வேட்பாளரை தொடர்புகொள்ள முடியாமல் சுயேட்சைகுழு திண்டாடி, இறுதியில் வேறொருவரை வேட்பாளராக குறிப்பிட்டு வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். மறுநாள்தான் வேட்பாளர் சாதாரண நிலைமைக்கு வந்திருக்கிறார். யார் அந்த திடீர் நண்பர்கள் என அதற்கு பின்னர் விசாரித்தபோதுதான், கட்சியின் ஏற்பாட்டில் நடந்ததை தெரிந்து கொண்டிருக்கிறார்!

## தமிழரசுக்கட்சியின் குட்டிராஜாக்கள்!

தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் ஆசன பங்கீட்டு சச்சரவுகள் எழுந்தது தெரிந்ததே. இந்த சிக்கலிற்கு இரண்டாம் மட்ட தலைவர்கள்தான் காரணமாக இருந்துள்ளனர். ஒவ்வொரு பிரதேசத்திலும் வேட்பாளர் தெரிவிற்கு பொறுப்பாக தமிழரசுக்கட்சியை சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் எடுத்த முடிவுகளே சிக்கலை ஏற்படுத்தியுள்ளன. கிளிநொச்சியில் 60:40 என பங்கீடு செய்வதென கூட்டமைப்பின் தலைமை முடிவெடுத்திருந்தது. ஆனால், பங்காளி கட்சிகளின் வேட்பாளர்களை வெட்டிவிட்டு, தனி தமிழரசுக்கட்சி வேட்பாளர் பட்டியலை சிறிதரன் எம்.பி சமர்ப்பித்தார். இது தமிழரசுக்கட்சி தலைமைக்கும் பிடிக்கவில்லை. தமது அதிருப்தியை சிறிதரனுக்கும் தெரியப்படுத்தியுள்ளனர். துணுக்காய் பிரதேசசபைக்கும் 60:40 உடன்பாடு எட்டப்பட்டிருந்தது. அந்த பகுதி வேட்பாளர் தெரிவிற்கு பொறுப்பாக இருந்த சாந்தி சிறிஸ்கந்தராசா, பங்காளி கட்சிகளை வெட்டிவிட்டார். வவுனியா தேர்விற்கு மாகாணசபை உறுப்பினர் சத்தியலிங்கம் பொறுப்பாக இருந்தார். அங்கு ரெலோவின் வேட்பாளர்களை வெட்டிவிட்டார். அதுபோல திருகோணமலையிலும் பங்காளி கட்சிகளின் வேட்பாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இவர்களை தான் தமிழரசுக்கட்சிக்குள் உள்ள குட்டிராஜாக்கள் என பங்காளி கட்சிகள் விமர்சித்தன.




## சுதந்திரக் கட்சியின் சிக்கலான வேட்புமனு!

யாழ் மாவட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி சமர்ப்பித்த வேட்புமனுவில் வழு இருந்தும் அது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி தேர்தல் வேட்புமனுக்கள் 21ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. சிறிலங்கா சுதந்திரக்கட்சி 21ம் திகதி யாழ் மாவட்ட செயலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்தது. 21ம் திகதி நண்பகலுடன் வேட்புமனு தாக்கல் செய்வது முடிவடைந்து 1.30 மணித்தியாலயம் ஆட்சேபனை தெரிவிப்பதற்கான நேரமாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதன்பின்னர் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ஏற்றுக்கொள்ளப்பட்ட, நிராகரிக்கப்பட்ட வேட்புமனு விபரங்களை வெளியிடுவார் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், யாழ்ப்பாணத்தில் இந்த விபரங்கள் அறிவிக்கப்பட்டபோது மாலையாகிவிட்டது. இது தொடர்பில் ஆராய்ந்தபோது சில தகவல்கள் வெளியாகியுள்ளன. சிறிலங்கா சுதந்திரக்கட்சி சமர்ப்பித்த வேட்புமனுவில் வழு காணப்பட்டுள்ளது. கட்சி செயலாளர் கையொப்பமிட வேண்டிய இடத்தில், கட்சியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. சமாதான நீதிவானொருவரிற்கு முன்பாக அந்த கையொப்பமிடப்பட வேண்டும். குறித்த நபர் எனக்கு முன்பாக கையெழுத்திட்டார் என்பதை சமாதான நீதிவான் உறுதிசெய்ய வேண்டும். சிறிலங்கா சுதந்திரக்கட்சி சமர்ப்பித்த வேட்புமனுவின்படி, சமாதான நீதிவானின் முன்பாக சுதந்திரக்கட்சி கையெழுத்திட்டது என்பதே அர்த்தம்.

நிராகரிக்கப்படக்கூடிய வாய்ப்பிருந்தும், யாழ் மாவட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வேட்புமனுவை ஏற்பதா இல்லையா என்பதில் நீண்ட இழுபறியும் ஏற்பட்டிருக்கிறது. தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டு உயர்மட்ட கலந்துரையாடல்களின் பின்னரே வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த இழுபறிகளினாலேயே, யாழ்மாவட்ட வேட்புமனு விபரங்கள் அறிவிக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டதாக நம்பப்படுகிறது.

இது தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆட்சேபனை தெரிவித்தபோதும், அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

# நடன அழகியின் பின்னால் மறைந்திருந்த இரகசிய ஏஜென்ட்!

## இரண்டு அழகிகளை வைத்து சிரிய உளவுத்துறை ஆடிய இரகசிய ஆட்டம்




"மத்திய கிழக்கு பெண்களை விட உலகத்தில் அழகான பெண்கள் கிடையாதென்பது" மொஹமட் பைபாஸின் எண்ணம். இதை PLOவினர் தெரிந்து, மத்திய கிழக்கு அழகிகளை திரட்டி, அல்ஜீரியா துறைமுகத்தில் நிற்கும் கப்பலொன்றில் பெரிய பார்ட்டி வைக்க திட்டமிட்டனர்.

துருக்கியில் தங்கியிருந்த மொசாட் அதிகாரியின் சங்கேத பெயர் டபிள் அல்பா (AA) என்பதையும், சிரிய உளவுத்துறையின் இன்போர்மராக பணியாற்றிக் கொண்டிருந்த விபசார அழகியொருவரின் வலையில், மொசாட் இன்போர்மர் ஒருவர் மாட்டினார் என்பதையும் கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தோம். யூதப் பெண்ணாண எலிஷிபாவின் சிரிய உளவுத்துறையில் பணியாற்றிக் கொண்டிருந்தவர் புகைப்படம் ஒன்று AAtவின் கைக்கு சென்றிருந்தது.

எலிஷிபாவின் புகைப்படத்தை AAவின் கைக்கு செல்ல வைத்தது சிரிய உளவுத்துறைதான். அது எப்படியென்பதை குறிப்பிடுகிறோம்.

இன்ஷூரன்ஸ் ஆள் சிரிய உளவுத்துறை இன்போர்மரான விபச்சார அழகியிடம் செல்லத் தொடங்கி, அவரை தமது இன்போர் மராக்கிய பின்னர் அவரை அதிகமாக நம்ப ஆரம்பித்து விட்டார். உளவுத் துறை இன்போர்மர்கள் இவ்வளவு இலகுவில் யாருடனும் நெருக்கமாக பழகுவதில்லையென்பது உண்மை தான். அதற்காக எல்லாவித உறவுகளுடனும் கறாராக இருக்க மாட்டார்கள். அவர்களின் பலவீன மான புள்ளியொன்றை கண்டுபிடித்து கவிழ்ப்பதும் உளவுத்துறைகளின் இரகசிய விளையாட்டுக்களில் ஒன்று. இந்த இன்ஸூரன்ஸ்காரரின் விவகாரம் சிரிய உளவுத்துறைக்கு அதிர்ஸ்டவசமாக அமைந்த ஒன்று.

AA யிடம் இந்த அழகியை இன்ஷூரன்ஸ் ஆள் அழைத்து சென்று அறிமுகத்தை ஏற்படுத்தி வைத்திருக்கிறார். இன்ஷூரன்ஸ் ஆள் சாதாரண தொடர்பாளர், AA தான் பிரதான ஆள் என்பதை அந்த பெண் ஊகித்துவிட்டார். இதன்பின்னர் AA யுடனேயே நெருக்கத்தை பேணினார்.

அப்பொழுது அல்ஜீரியாவில் மொஹமட் பைபாஸ் என்ற ஒரு கறுப்புச்சந்தை வியாபாரி இருந்தான். மேற்கு ஆபிரிக்கா இவனது கோட்டை. கொலம்பிய ஹெரோயின் ஏஜெண்டுகளுடனும், பல நாட்டு ஆயுத இயக்கங்கங்களுடனும் தொடர்பு வைத்திருந்தான். புதிதாக பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடனும் தொடர்பில் இருந்தான். பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டதென்பது பலர் அறியாத விசயம். நிதித்தேவையை சமாளிப்பதற்காக அதை செய்தார்கள். மேற்கு ஐரோப்பியா, மத்திய கிழக்கு நாடுகள், ஆபிரிக்க நாடுகள்தான் PLOவின் பிஸ்னஸ் ஏரியா. இது மொசாட்டிற்கும் தெரியும்.

PLOவின் நிதி ஆதாரத்தை உடைக்க விரும்பியது மொசாட். PLOவின் ஹெரோயின் நெற்வேர்க்கிற்குள் நுழைய பொருத்தமானவர்களை தேடிக் கொண்டிருந்தார்கள். அல்ஜீரிய, துருக்கி விசயங்களை கவனித்துக் கொண்டிருந்த AA யிடம் தான் அந்த பொறுப்பும் இருந்தது.

இரண்டு மூன்று பிஸ்னஸ் டீல் மொஹமட் பைபாஸ் குறூப்புடன் வெற்றிகரமாக அமைந்ததில் PLOவினர் மகிழ்ச்சியாக இருந்தனர். போதைப்பொருள் வர்த்தகம், ஆயுத கறுப்பு சந்தைகளை பற்றி அறிந்தவர் களிற்கு தெரியும் அங்கு பெண்கள் எப்படி நடத்தப்படுவார்கள் என்பது. அதை பற்றி மேலோட்டமாக சொல்லி விடுகிறோம். ஒரு டீல் பேசுவதற்கு போகின்றவர் கொண்டு செல்லும் அதிகபட்ச விலையுயர்ந்த பொருள் அழகிய பெண்தான். இந்தவகையான வியாபாரத்தில் கொடிகட்டி பறப்பவர்கள் ஒரு சில வருடத்திலேயே ஏழுழு ஜென்மத்திற்கான சொத்தை சம்பாதித்து விடுவார்கள். தங்கம், வைரம் பாதிரியான விலையுயர்ந்த பரிசுகள் அங்கு வேலைக்காகாது. உதாரணத்திற்கு மிஸ்டர் எக்ஸ் என்பவரை எடுத்தால், அவரிடம் டீல் பேச போகிறவர்கள் அவரது பலவீனத்தை அறிந்துகொள்வார்கள். இந்தவகையான அண்டகிரவுண்ட் பிஸ்னஸ் செய்பவர்கள் எல்லோருக்கும் பெண்கள்தான் பொழுதுபோக்கு. மிஸ்டர் எக்ஸிற்கு ஆசிய பெண்கள் பிடிக்குமா, ஐரோப்பிய பெண்கள் பிடிக்குமா என்பதை பார்த்து, ஆசிய மார்க்கெட்டில் உள்ள ஒருவரிடம் அழகிய பெண் வேண்டும் என்பார். அவரை அழைத்துக்கொண்டு போய், "இந்தாருங்கள் என பரிசு" என கொடுப்பார். ஒரு சில நாட்கள் மகிழ்ச்சியாக இருந்துவிட்டு, விலை யுயர்ந்த பரிசுகள் கொடுத்து அழகியை அனுப்பிவைப்பார். இது அண்டகிறவுண்ட் டீல் செய்பவர் களிடமுள்ள வழக்கம்.

PLOவினர் தமது டீல் நன்றாக போனதில் மகிழ்ந்து, மொஹமட் பைபாஸ் குறூப்பிற்கு ஒரு பார்ட்டி வைக்க விரும்பினார்கள். "மத்திய கிழக்கு பெண்களை விட உலகத்தில் அழகானபெண்கள்கிடையாதென்பது" மொஹமட் பைபாஸின் எண்ணம். இதை PLOவினர் தெரிந்து, மத்திய கிழக்கு அழகிகள் உட்பட அழகிகளை திரட்டி, அல்ஜீரியா துறைமுகத்திற்கு பக்கத்தில் தரித்து நிற்கும் கப்பலொன்றில் பெரிய பார்ட்டி வைக்க திட்டமிட்டனர். (PLOவின் இந்த பார்ட்டி வைக்கும் ஆட்களிற்கும் சிரிய உளவுத்துறையுடன் வேலை செய்யும் PLO ஆட்களிற்குமிடையில் எந்த தொடர்புமில்லை)

துருக்கியில் நடனக்குழுவொன்றை வைத்திருந்தஒருவரிடம்தான் இதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அழகிகளின் நடனமும் இருந்தது. இதையெல்லாம் மொசாட்டும் அறிந்து வைத்திருந்தது. சில மத்திய கிழக்கு அழகிகளை அந்த நடனக்குழு ஆளிடம் அனுப்பிவைப்பதே மொசாட்டின் நோக்கம்.

AA இதை அந்த விபசார அழகியிடம் கூறியிருக்கிறார். தனக்கு தெரிந்த நடனம் ஆடக்கூடிய ஒருவர் இருக்கிறார் என எலிஷிபாவின் புகைப்படத்தை, அந்த பெண் ஒப்படைத்தார். சிரிய உளவுத்துறை ஆட்கள்தான் பின்னணியில் இருந்து இதை செய்வித்தனர். எலிஷிபா பொழுதுபோக்காக நடனம் ஆடுவதில் ஆர்வம் உள்ளவர், துருக்கி கிளப்கள் சிலவற்றில் ஆடியுமிருக்கிறார் என்பது இந்த நாடகத்திற்கு வாய்ப்பாகி விட்டது.

ஆனால், PLOவினரின் பார்ட்டியில் எலிஷிபா நடனம் ஆடுவாரா என்பதை சிரிய உளவுத்துறை அறியாமலேதான் படத்தை அனுப்பினார்கள். அந்த பார்ட்டிகளில் நடனத்திற்கு செல்வதென்பது, தனியே நடனத்திற்கு செல்வதல்ல. அது பெண்களிற்கும் தெரிந்திருக்கும்.

AA யிடம் எலிஷிபாவின் புகைப்படம் கிடைத்த பின்னர்தான், சிரிய உளவுத்துறை அவரிடம் விசயத்தை சொன்னது. இந்த விசயத்தை வெளியில் கசியாமல் வைத்திருக்கலாம், நிறைய பணம் தரலாமென பேசி, அவரை சம்மதிக்க வைத்து தயார்படுத் தினார்கள். உடனடியாக எலிஷிபாவின் அடையாளத்தை மாற்றி, அனிசிலியா என்ற துருக்கி அடையாளத்தை ஏற்படுத்தினார்கள்.

இஸ்தான்புல்லில் உள்ள பிரபல்மான இரவுநேர கேளிக்கை விடுதியொன்றில் அனிசிலியா என்ற எலிஷிபாவை ஒருநாள் ஆடவைத்தார்கள். இந்த தகவல் AA இற்கும் அறிவிக்கப்பட, அங்குதான் முதன்முதலாக அனிசி லியாவை பார்க்க வந்தார். முதல் பார்வையிலேயே அவருக்கு அனிசிலியாவை பிடித்துவிட, அவரை, PLO பார்ட்டிக்கு அனுப்புவதென அந்த இடத்திலேயே முடிவெடுத்தார். இதுதான் அனிசிலியா (எலிஷிபா) மொசாத் இன்போர்மரான கதை!

அனிசிலியாவிற்கும், தேர்ந்தெடுக் கப்பட்ட மற்ற மூன்று பெண்களிற்கும் துருக்கியிலுள்ள மலைப்பகுதி பங்களா ஒன்றில் சில புலனாய்வு பயிற்சி, துப்பாக்கி கையாள்தல் என்பன மொசாட்டால் பயற்சியளிக் கப்பட்டது. பார்ட்டிக்கு கிட்டவான நாளில் அனிசிலியாவிற்கு மட்டும் அம்மை போன்ற ஒரு தோல் வியாதி ஏற்பட்டது. (இதுவும் சிரிய உளவுப்பிரிவின் வேலைதான். ஊசி மருந்தொன்றின் மூலம் தோல் அலர்ஜியை ஏற்படுத்தினார்கள்) இதனால் அவரை தவிர மற்றைய மூவரும் பார்ட்டிக்கு சென்றனர். ஆனாலும் AA இற்கு பிடித்து போனதால், மொசாட் நெற்வேர்க்கில் இயங்கிக்கொண்டிருந்தார்.

அனிசிலியாவின் துறுதுறுப்பு உளவுத்துறை வேலைகளிற்கு நன்றாக பயன்படுமென AA கருதியதால், PLOவின் ஹெரோயின் நெற்வேர்க்கிற்கு எதிரான நடவடிக்கையில் தொடர்ந்தும் வைத்திருந்தார்.

மொசாட் ஆட்களின் நம்பிக்கையை அனிசிலியாவும், விபசார அழகியும் பெற்றுக்கொள்ள, சிரிய உளவு நெற்வேர்க்கில் கீழ் நிலையில் உள்ள சிலரை மாட்ட வைத்தார்கள்.

PLOவின் நெற்வேர்க்கிற்கு எதிரான

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

நடவடிக்கையில் துருக்கு உளவுப் பிரிவும், மொசாட்டிற்கு உதவியாக இருந்தது. மொசாட்டின் நடவடிக் கைகளிற்கு சட்டச்சிக்கல் வராமல், தகவல்களை பாஸ் செய்து உதவிக் கொண்டிருந்தார்கள். சில இரகசிய சோதனைகளில் துருக்கு உளவுப் பிரிவுடன், மொசாட் உளவாளிகளும் இணைந்து செயற்பட்டனர்.

யூத வம்சாவளியை சேர்ந்த மைமன் என்பவர் காய்கறி, பழங்கள் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் செய்பவர். அவர் வசித்தது மொரொக்கோவில். அது ஆபிரிக்க நாடு. மொரெக்கோ, தன்சானியா, சாட், நைஜர், புருணை போன்ற நாடுகளின் மரக்கறி மார்க்கெட்டை தீர்மானிப்பவராக அப்பொழுது மைமனே இருந்தார். (ஒரு உபரி தகவல். நைஜீரியாவின் தலைநகரை அண்டிய பகுதிகளில் மரக்கறி மார்க்கெட்டில் விலையை தீர்மானிப்பவராக இருப்பவர் யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒரு ஈழத்தமிழர். புலிகளின் வெளிநாட்டு நெற்வேர்க்கில் வேலை செய்தவர். ஆயுத பேரங்களில் ஈடுபடுவதும், மரக்கறி இறக்குமதி செய்வதுமாக இருந்தார். இந்த சமயத்தில் நாட்டின் உயர்அரச தலைவர்களுடனும் நெருக்கமாகிவிட்டார். இப்பொழுது நைஜீரியாவிலேயே வசிக்கிறார்)

துருக்கிக்கான காய்கறி இறக்குமதியிலும் மைமன் கவனத்தை திருப்பியிருந்தார். மொசாட் உளவாளியொருவர் இஸ்தான்புல்லில் உள்ள, காய்கறி ஏஜெண்டைபோல நடித்து, மைமனிடமிருந்து வாங்கி சப்ளை செய்துகொண்டிருந்தார். உளவுத் துறைகள் மார்க்கெட்டில் எப்பொழுதும் ஆட்களை இறக்கி வைத்திருப்பார்கள். மார்க்கெட்டில் வாங்கும் பொருட்களை வைத்து, வீடுகளில் உள்ளவர்களின் எண்ணிக்கையை கணக்கிட்டு வைத்திருப்பார்கள். தொடர்ச்சியாக ஒரு இடத்தில் அதிகளவில் காய்கறி கொள்வனவு செய்யப்பட்டால், அதைபற்றி கிளியர் பண்ணி கொள்வார்கள். சில உளவுத் துறை முடிச்சுக்களை மரக்கறி மார்க்கெட்டில் அவிழ்த்த சம்பவங்களும் உள்ளன.

அப்போது அல்ஜீரியாவில் பாலஸ்தீன போராட்டத்திற்கு கணிசமான ஆதரவிருந்தது. அரச உயர் மட்டத்தினரும் பாலஸ்தீனத்திற்கு மறைமுக ஆதரவளித்து வந்தனர். மொரக்கோவும் அப்படித்தான். ஒரு உளவுத்துறை ஒப்ரேஷனிற்காக மொரக்கோவில் தங்கியிருந்த மொசாட் ஆட்களை 1985 ஜூனில் மொரக்கோ பொலிசார் சுற்றிவளைத்து கைது செய்துவிட்டனர். யாரோ அடையாளம் தெரியாத கும்பலொன்று மறைந்திருப்பதாகத்தான் பொலிசாருக்கு தகவல் வந்தது. தீவிரவாத கும்பலாக இருக்கலாமென்ற சந்தேகத்தில்தான் மொசாட் ஆட்களை சுற்றிவளைத்து கைது செய்தனர். அவர்களை கைது செய்து அழைத்து வரும்போது, உள்ளூர் பத்திரிகையாளர்கள் அதை புகைப்படமும் எடுத்து விட்டனர். பின்னர் இது மொசாட்டின் வேலையென மொரக்கோ கண்டுபிடித்தாலும், உளவுத்துறை விசயங்களை காதோடு காதாக மறைத்து விட்டார்கள்.

மொரக்கோவிற்கும் ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும். அல்ஜீரியாவையும் கவனிக்க வேண்டும் என மொசாட் தீட்டிய திட்டத்தில்தான் மைமன் சிக்கினார். மொரக்கோவை சேர்ந்த மைமன், அல்ஜீரியாவில் தங்கியிருந்து தொழில் செய்கிறார். இது போதாதா!

துருக்கி, மத்திய கிழக்கு நாடுகளில் தனது ஏற்றுமதியை மைமன் விஸ்தரித்தபோது, துருக்கியில் ஒரு அலுவலகம் திறந்தார். அங்கு பகுதிநேரமாக பணியாற்ற விபசார அழகியை மொசாட் அனுப்பியது. மைமனின் துருக்கி அலுவலக மனேஜரை கவிழ்த்து, கைக்குள் போட்டுக்கொள்ளுமாறுதான் மொசாட் சொல்லியிருந்தது. அதை அந்தபெண் செய்தார். அவர் வேலைக்கு சென்ற ஆரம்பத்திலேயே மனேஜரை வளைத்து விட்டார்.

அனிசிலியாவிற்கு மொசாட் பெரிய புரஜெக்ட் கொடுத்திருந்தது. அது அல்ஜீரியாவில்.

அல்ஜீரியாவில் உள்ள மொரக்கோ தூதரகத்தின் இரண்டாம் நிலை அதிகாரியொருவர் சில மொசாட் ஏஜெண்டுகளுடன் பழக்கமாக இருந்தார். தன்னுடன் நெருக்கமாக பழகுபவர்கள் மொசாட் உளவாளிகள் என்ற விசயம் தூதரக அதிகாரிக்கு தெரியாது. ஆயுத வியாபாரிகள் என்றுதான் தம்மை அடையாளப்படுத்தியிருந்தனர் மொசாட் உளவாளிகள். அவர்கள் சில ஆயுத டீல்களையும் செய்திருந்தனர். எதியோப்பிய உள்நாட்டு போரில், மொரக்கோவின் ஆதரவு எரித்திரிய போராளிகளிற்கு இருந்தது. எரித்திரிய போராளிகளிற்காக ஆயுத வியாபாரிகளை கண்டுபிடித்து மொரக்கோ உதவியிருந்தது. அந்த சமயத்தில் மொசாட் ஆட்களின் தொடர்பு எரித்திரிய போராளிகளிற்கு சென்றது. போராளிகளிற்கு கொஞ்ச ஆயுதமும் வாங்கிக்கொடுப்பதை போல நடித்தார்கள். (அது இஸ்ரேல் ஆயுதங்கள்)

அந்த தூதரக அதிகாரியை தூக்குவதென முடிவெடுத்தது மொசாட்!



அல்ஜர்ஸில் இருந்த பேர்ள் ஹொட்டல் நடன நிகழ்வொன்றில் அனிசிலியா நடனமாடினார். நிகழ்ச்சியின் இறுதியில், மொரக்கோவின் நாடோடி பாடலொன்றை புதிய மெட்டில் பாடி, அனிசிலியா நடனமாடியிருந்தார். அது தூதரக அதிகாரியை ஈர்த்துவிட்டது.

அல்ஜர்ஸில் இருந்த பேர்ள் ஹொட்டல் நடன நிகழ்வொன்றில் அனிசிலியா நடனமாடினார். அந்த நிகழ்வில் தூதரக அதிகாரி, மொசாட் ஆட்களும் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியின் இறுதியில், மொரக்கோவின் நாடோடி பாடலொன்றை (அது தாயை காணாமல் தவிக்கும் பெண்பிள்ளை பாடுவதை போன்றது) புதிய மெட்டில் பாடி, அனிசிலியா நடனமாடியிருந்தார். அது தூதரக அதிகாரியை ஈர்த்துவிட்டது. அனிசிலியாவிடம் சென்று ஹலோ சொல்லி கைகுலுக்கினார். மொரக்கோ தாயைசின்னவயதில் பிரிந்துவிட்டதாக ஒரு வாழ்க்கை சரித்திரம் சொன்னார் அனிசிலியா. எந்த வேளையிலும் உதவ தயாராக இருப்பதாக விசிட்டிங் கார்டை அதிகாரி கொடுத்தார். அடுத்த இரண்டு மாதமும் சில பல தொலைபேசி அழைப்புக்களின் மூலம் தூதரக அதிகாரியுடன் நெருக்கமாகி விட்டார் அனசிலியா.

தூதரக அதிகாரியும் ஒரு மனிதன் தானே, அழகான பெண்ணொருவர் தானாகவந்துஒட்டிக்கொள்ளும்போது, எதற்கு பேசாமலிருக்க வேண்டுமென நினைத்தார். ஆனால் அனசிலியா பிடி கொடுக்கவில்லை. சாதாரணமாக எங்காவது ஹொட்டலில் உணவருந்துவதுடன் நிறுத்திக்கொண்டு விட்டார். அல்ஜீரியாவிற்குள் அதிகாரியுடன் ஹொட்டலில் தங்க அவர் தயாராக இல்லையென்பதை சொல்லிவிட்டார்.

அப்படியானால் எந்த இடத்தை அனிசிலியா விரும்பினார்?

அது துருக்கி. அல்ஜீரியாவில் இருந்து ஒரு நாட்டு தூதரக அதிகாரியை கடத்திக் கொண்டு செல்வதை விட, துருக்கியிலிருந்து கடத்தி செல்வது ரிஸ்க் இல்லையென மொசாட் நினைத்தது. ஏனெனில் துருக்கி உளவுத்துறைஇந்த மொசாட் ஒப்ரேஷனை விரும்பியது.அதனால் நிச்சயம் உதவி செய்யுமென மொசாட் நினைத்தது. அப்துல்லா ஒக்கலானின் குர்திஷ் விடுதலை இயக்கத்திற்கு அல்ஜீரியா இரகசிய ஆதரவு கொடுத்து வருவதில துருக்கி கோபமாக இருந்தது.

1985 கிறிஸ்மஸ் கொண்டாட்ட சமயம். அல்ஜீரியாவில் இருந்து துருக்கிக்கு விமானத்தில் தூதரக அதிகாரியும், அனசிலியாவும் புறப்பட்டனர். அங்காராவில் உள்ள விடுதியொன்றில் அவர்கள் அறை முன்பதிவு செய்திருந்தனர். ஒரு வார உல்லாச பயணம் அது. துருக்கியில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் தூதரக அதிகாரி கடத்தப்படுவார் என்பது அனசிலியாவிற்கும் தெரியும். அனசிலியாவின் ஒத்துழைப்புடன்தான் அவர் கடத்தப்படுவார். அப்படியென்றால் தான் யாருக்கும் சந்தேகம் இல்லாமல் ஒப்ரேஷனை முடிக்கலாம்!

மொரக்கோ அதிகாரி ஒப்ரேஷனை முடிக்க, ஏழு பேர் கொண்ட மொசாட் அணியொன்று துருக்கிக்கு சென்றது. இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த சிரிய உளவுத்துறையும் தனது அணியொன்றை துருக்கிக்கு அனுப்பியது. இந்த முக்கோண புள்ளிகளிற்குமிடையிலான இரகசிய மோதலில் என்னென்ன நடந்தது? முடிவு எப்படியிருந்தது என்பதை அறிய அடுத்த வாரம் வரை காத்திருங்கள்.

(தொடரும்)



"உங்க கல்யாணத்துல கேமராமேனையே வைக்கலையா?"

"எல்லாரையும் செல்ஃபி எடுத்துட்டு இருந்தாரே அவர்தான் கேமராமேன்!"



"பொண்ணு வீட்ல ஓ.கே சொல்லிட்டாங்களா... உனக்கு எப்படித் தெரியும்?"

"அவங்க ஃபேமிலி வாட்ஸ்அப் குரூப்ல என்னைச் சேர்த்துட்டாங்களே!"



"நம்ம தலைவர் எப்படியாவது ஒரு கூட்டணி சேர்க்கணும்னு துடியாத் துடிக்கிறார்?"

"ஏன்?"

"தேர்தலுக்குப் பிறகு ஒரு கட்சிக்கு ஒரு கட்சி ஆறுதல் சொல்ல வசதியா இருக்கும்னுதான்!"

பிஸ்னஸ் செய்ய முடிவெடுத்ததும், அடுத்து எழும் கேள்வி என்ன பிஸ்னஸ் என்பதுதான். எல்லா பிஸ்னஸையும் எல்லோரும் செய்துவிட முடியாது. நமக்கான பிஸ்னஸ் எது என்பதை கண்டுபிடிக்க வேண்டும். அதற்கு நம்மை நாம் முழுமையாகத் தெரிந்துகொள்ள வேண்டும். நம் பலம் என்ன, பலவீனம் என்ன? நம்மிடம் உள்ள திறமை என்ன? நாம் என்ன படித்திருக்கிறோம்? நம் ஆர்வம் எதில் இருக்கிறது? இவற்றை எல்லாம் நாம் தெரிந்துகொண்டால்தான் நம்முடைய பிஸ்னஸ் பாதையை நம்மால் சரியாகக் கண்டுபிடிக்க முடியும்.

எந்தத் துறையில் பிசினஸ் செய்ய விரும்புகிறீர்களோ, அது சார்ந்த அறிவும், அனுபவமும் அவசியம் தேவை. அப்போதுதான் அவற்றை நீங்கள் திட்டமிட்டு செயல்படுத்த முடியும். முன்பின் அனுபவமில்லாத துறையாக இருந்தால், அதற்குத் தேவையான அடிப்படைகளைக் கற்றுக்கொண்ட பிறகே அந்த பிஸ்னஸில் ஈடுபடுவது நல்லது.

பொதுவாக, பிஸ்னஸில் உற்பத்தியாளர், விற்பனையாளர், வாடிக்கையாளர் ஆகிய மூன்று பேரையும், மூலதனம், பொருள், தொழில்நுட்பம்,




**நீங்களும் முன்னணி businessman ஆக முடியும். ஒரேயொரு தடையை கடந்தால், உங்களால் அது முடியும். அந்த தடையை கடக்க வைத்து, உங்களையும் வெற்றியாளராக்குகிறோம். ஒவ்வொரு வாரமும் இந்த தொடரை படியுங்கள்.**

# நீங்களும் பிஸ்னஸ் புள்ளி ஆகலாம்!

மனிதவளம் ஆகிய நான்கு விஷயங்களையும் உள்ளடக்கியதாக இருக்கும். இவற்றில் எதை வேண்டுமானாலும் ஒருவர் தனது பிஸ்னஸாகத் தேர்வு செய்யலாம்.

ஆனால், அதற்கு உங்களது துறை சார்ந்த திறமை உங்களுக்கு எவ்வளவு இருக்கிறது? எந்தத் துறையை நீங்கள் தேர்ந்தெடுக்க விரும்புகிறீர்கள் என்பதை நீங்கள் முடிவு செய்தாக வேண்டும்.

1. ஒரு பொருளைத் தயாரிக்கத் தேவையான தொழில்நுட்ப அறிவும் அனுபவமும், அந்தப் பொருளை மேலும் சிறப்பாக தயாரிக்க புதிய யோசனைகளும் உங்களிடம் உள்ளனவா?

2. ஒரு பொருளை விற்பதில் நீங்கள் சிறப்பாகச் செயல்படுபவரா? உங்களுடைய பொருட்களுக்கான வாடிக்கையாளரை சரியாகக் கண்டு பிடித்து விற்கக்கூடியவரா?

3. பணியாளர்களைக் கையாள்வதும், அவர்களிடம் இருந்து வேலை வாங்குவதும் உங்களுக்குக் கைவந்த கலையா?

4. கணினி, இணையம், ஆப்ஸ் போன்ற தொழில்நுட்பங்களில் புகுந்து விளையாடும் அபாரமான திறமை உங்களுக்கு உண்டா?

இந்த நான்கு கேள்விகளையும் பல முறை உங்களுக்கு நீங்களே கேட்டுப் பாருங்கள்.

முதல் கேள்விக்கான திறமை உங்களிடம் இருந்தால், உற்பத்தித் துறையில் நீங்கள் தாராளமாக பிசினஸைத் தொடங்கலாம். ஆனால், அடுத்த மூன்று திறமைகளையும் கொண்டவர்களை உங்களுடன் வைத்துக்கொள்ள வேண்டும்.

இரண்டாவது கேள்விக்கான திறமை உங்களிடம் இருந்தால், உற்பத்தியாளரிடம் பொருளை வாங்கி விற்கும் வர்த்தக பிஸ்னஸில் நீங்கள் தாராளமாக ஈடுபடலாம். ஆனால், மூன்றாவது, நான்காவது திறமைகளைக் கொண்டவர்களை உங்களுடன் வைத்துக்கொள்வது பிஸ்னஸ் வளர்ச்சிக்கு உதவும். உங்களுடன் வைத்துக்கொள்ள முடியாவிட்டாலும் அவர்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மூன்றாவது திறமை கொண்டவராக நீங்கள் இருந்தால், உங்களால் சேவைத் துறையில் பிஸ்னஸ் செய்ய முடியும். உங்கள் திறமையை வைத்து மற்றவர்களிடம் பணி புரிவதைக் காட்டிலும் அதையே பிஸ்னஸாக செய்யலாம். தனியாக ஒரு ஏஜென்சி அமைத்து நிறுவனங்களுக்கு சேவையாக வழங்கலாம்.

நான்காவது திறமை உங்களிடம் இருந்தால், மற்ற திறமைகள் உள்ள அனைவருக்கும் நீங்கள் நிச்சயம் தேவைப்படுவீர்கள். சரியான பிசினஸ் மொடலுடன் களமிறங்கினால் நிச்சயம் உங்களுக்கான சந்தையைப் பிடித்துவிடலாம். உங்களுக்கான துறையை நீங்கள் தேர்ந்தெடுத்துவிட்டீர்களா? பிஸ்னஸைத் தொடங்கும் நடைமுறைகளை அடுத்த இதழில் பார்க்கும் முன் வெற்றிகரமான பிஸ்னஸுக்குத் தேவைப்படும் மூன்று மனேஜ்மென்ட் விஷயங்களையும் தெரிந்துகொள்ளுங்கள்.

**இடர் நிர்வாகம் (Risk Management)**

பிஸ்னஸ் என்பது எப்போதும் ரிஸ்க்குகள் நிறைந்தது என்பதை முதலில் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ரிஸ்க் எடுக்காமல் எந்த பிஸ்னஸ் முடிவையும் எடுக்க முடியாது என்றாலும் நீங்கள் எடுக்கும் ரிஸ்க் என்பது உங்களுக்கு தரும் லாபத்தையும், நஷ்டத்தையும் பொறுத்தே முடிவு செய்யப்பட வேண்டும். நாம் எடுக்கும் ரிஸ்க் எந்தளவுக்கு ஈடானது (Worth) என்பதில் தெளிவாக இருக்க வேண்டும். ரிஸ்க் எடுக்கும் போது, அதன் பின்விளைவுகளையும் யோசிக்க வேண்டும்.

**கால நிர்வாகம் (Time Management)**

பிஸ்னஸுக்கு நேர மேலாண்மை மிக முக்கியம். நம் ஒவ்வொரு நாளையும் திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும். சிறு சிறு வாய்ப்புகளையும் தவறவிடக் கூடாது. இரவு 1.30 மணிக்கு அமெரிக்காவில் உள்ள ஒரு வாடிக்கையாளரிடம் பிஸ்னஸ் குறித்து பேச வேண்டும் என்றாலும், அதனைத் தவறவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நீங்கள் தவறவிடும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்க வேண்டிய பல வாய்ப்புகளை முடக்கிவிடும். அதே போல், ஓர்டர் டெலிவரி, பேமென்ட் விஷயங்களையும் சொன்ன நேரத்தில் முடித்துத் தந்துவிட வேண்டும்.

**மனிதவளம் (Human Resource)**

நல்ல பணியாளர்களால்தான் ஒரு நல்ல பிஸ்னஸை நிறுவ முடியும். அதனால் நம் பணியாளர்களைத் திறமையாகக் கையாள வேண்டும். அவர்களின் பிரச்னைகளைக் கேட்பது, ஆலோசனைகளைக் கேட்பது, தேவையான வசதிகளைத் தருவது போன்றவற்றை நம் பிஸ்னஸுக்கேற்ப திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும்.

**வாழ்க்கை நிர்வாகம் (Life Management)**

வாழ்க்கையையும் பிஸ்னஸையும் பிரச்னை இல்லாமல் கொண்டு செல்ல வேண்டும். ஏனெனில் பிஸ்னஸ் செய்பவர்களுக்கு குடும்பச் சூழ்நிலை என்பது பெரிய தடையாக இருக்கும். பிஸ்னஸ் செய்யக் குடும்பத்தினரின் ஆதரவும், ஒத்துழைப்பும் அவசியம் தேவை. அது கிடைக்காமல்தான் பிஸ்னஸ் செய்ய விரும்பும் பலர் திண்டாடுகிறார்கள்.

இனி பிஸ்னஸைத் தொடங்கத் தேவையான நடைமுறைகளை பார்க்கத் தொடங்குவோம்.

ஒரு தொழில்முனைவோர் என்பவர், தனது தொழிலைத் தொடங்குவதற்கு முன் கவனத்தில் கொள்ள வேண்டிய மூன்று விஷயங்கள் உள்ளன.

1. செய்யப் போகிற தொழில் என்ன வகையைச் சேர்ந்தது?

2. நாம் செய்யப்போகிற தொழிலை எப்படிப் பதிவு செய்வது?

3. நமது நிறுவனத்தை எப்படிக் கட்டமைப்பது?

இந்த மூன்று விஷயங்களையும் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும். இந்தப் பகுதியில் தொழிலின் வகைகளைப் பற்றியும் அவற்றைப் பதிவு செய்வது பற்றியும் இப்போது பார்ப்போம்.

**தொழில் வகைகள்!**

நாம் செய்யப் போகும் தொழிலுக்கான பொருளைப் பொறுத்து, தொழிலை இரண்டு விதமாக வகைப்படுத்தலாம். வீட்டுக்குத் தேவையான பொருட்கள், தொழிற்சாலை மற்றும் நிறுவனங்களுக்குத் தேவையான பொருட்கள். இந்த இரண்டில் எந்தப் பொருளை வைத்து நாம் தொழில் செய்யப் போகிறோம் என்பதை முடிவு செய்தபிறகுதான் பதிவுசெய்வது பற்றி முடிவு செய்ய முடியும்.

வீட்டுக்குத் தேவையான பொருட்கள் உணவு, வீட்டு உபயோகப் பொருட்கள் என பல விதங்களில் உள்ளன. ஒரு குடும்பம் ஒரு நாளைக்கு காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு மற்றும் தேநீர் நேரம் என பல வகைகளில் உணவுப் பொருட்களை நுகர்கிறது.

உணவு பொருட்களும், உபகரணங்களும் இல்லாமல் இட்லி மற்றும் சட்னியை செய்ய முடியாது. மேலும், ஸ்பூன், தட்டு, கரண்டி, டம்ளர், டேபிள் மேட் போன்ற பொருட்களும் தேவைப்படுகின்றன. ஒரு நாளைக்கு 25க்கும் மேலான உணவு பொருட்களையும் ஏராளமான வீட்டு உபயோகப் பொருட்களையும் பயன்படுத்துகிறோம். இதில் எந்தப் பொருளை வேண்டுமானாலும் நமது தொழிலுக்கான பொருளாகத் தேர்வு செய்யலாம். இவை இல்லாமல், அழகு சாதனங்கள், குழந்தைகளுக்கான பொருட்கள், பெண்களுக்கான பொருட்கள் என்று அடுக்கிக்கொண்டே போகலாம்.

தொழிற்சாலை மற்றும் நிறு

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

# தீபம்

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்

தொடர்புகளிற்கு

ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563

அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562

செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com


வனங்கள் என்று வரும்போது, உற்பத்தி இயந்திரங்கள், உதிரிப் பாகங்கள், இன்டீரியர் பொருட்கள், டேபிள், கணினி உள்ளிட்ட பொருட்கள், ஸ்டேஷனரி பொருட்கள் உள்ளிட்ட பல பொருட்களையும் நம்முடைய தொழிலுக்கான பொருளாகத் தேர்வு செய்யலாம். இப்படி நாம் செய்யப் போகும் தொழிலுக்கான பொருளைத் தேர்ந்தெடுத்து, பிறரிடம் இருந்து வாங்கியோ அல்லது அவற்றை நாமே உற்பத்தி செய்தோ பிஸ்னஸ் செய்யலாம்.

எந்தப் பொருளாக இருந்தாலும், சந்தையில்செய்யப்படும்பிஸ்னஸ்களை நான்கு வகைகளாப் பிரிக்கலாம். ஒன்று, மூலப்பொருளாகவே உற்பத்தி செய்தோ அல்லது வாங்கியோ விற்பது; இரண்டு, பொருளை உற்பத்தியாளரிடம் வாங்கி, நம்முடைய பிராண்டின் பேரில் ரீபேக்கிங் செய்து விற்பது; மூன்றாவதாக, மூலப் பொருளை மதிப்பு கூட்டு பொருளாக்கி விற்பது; நான்காவதாக, பிரபல பிராண்ட் பொருளை வாங்கி அந்த பிராண்டின் பெயரிலேயே விற்பது ஆகியவைதான் அந்த நான்கு வகை பிஸ்னஸ்கள்.


### கப்பிட்டல் மற்றும் டெக்னோலஜி பிஸ்னஸ்!

இவற்றில் கிடைக்கும் லாபத்தை வைத்து வரிசைப்படுத்தினால், முதலில் மதிப்புக் கூட்டு பொருட்கள் வரும். இரண்டாவது ரீபேக்கிங் பிஸ்னஸ், மூன்றாவதாகமூலப்பொருளாகவிற்கும் பிஸ்னஸ், இறுதியாகத்தான் பிரபல பிராண்டாக உள்ள பொருட்கள் வரும்.

நம்முடைய பிஸ்னஸின் நடைமுறைகளைப் பொறுத்து, பிஸ்னஸை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். கபிட்டல் பிஸ்னஸ், டெக்னோலஜி பிஸ்னஸ். மூலதனம் போட்டு, இடம்பிடித்து பொருட்கள் வாங்கி வைத்து, வாடிக்கையாளர்களை நம்முடைய இடத்துக்கு வரவழைத்தோ அல்லது அவர்களுக்கு டெலிவரி செய்வதன் மூலமோ செய்யப்படும் தொழில் கபிட்டல் பிஸ்னஸ். கணினியும் இன்டர்நெட்டும், மென்பொருள் துறையில் நிபுணத்துவம் கொண்டவர்களையும் மட்டுமே வைத்து செய்யும் பிஸ்னஸ்கள் இகொமர்ஸ், மொபைல் கொமர்ஸ் ஆகும். இதற்கு லொஜிஸ்டிக்ஸ் மிக முக்கியம். கபிட்டல் பிஸ்னஸ் என்பது மக்கள் தேடி வரும் இடம். டெக்னோலஜி பிஸ்னஸில் நாம்தான் மக்களிடம் போக வேண்டும். ஃபேஸ்புக், வட்ஸ்அப் போன்றவற்றை வைத்து இப்போது நிறைய பேர் பிஸ்னஸ் செய்து வருகிறார்கள்.

### தனியாகவா அல்லது கூட்டாகவா?

அடுத்ததாக, நம்முடைய பிஸ்னஸை தனியாக செய்யப் போகிறோமா, அல்லது கூட்டு சேர்ந்து ஜொயின்ட் பிஸ்னஸாக செய்யப் போகிறோமா என்பதை முதலில் முடிவு செய்ய வேண்டும். தனியாக செய்வதாக இருந்தால், கையில் பிஸ்னஸ் செய்வதற்கான திட்டமும், மூலதனமும் இருந்தால் போதும். இதன் உரிமையாளர் 'சோல் புரோப்பரேட்டர்' எனப்படுவார். பிஸ்னஸ் தொடங்க சொந்தப் பணம் இல்லாதபட்சத்தில் கடன் வாங்க வேண்டியிருக்கும்.




ஜொயின்ட் பிசினஸில் இரண்டு வகை உண்டு. ஒன்று, பிரைவேட் லிமிடெட், இரண்டாவது பார்ட்னர்ஷிப். இதில் பார்ட்னர்ஷிப் பிஸ்னஸ் என்னும்போது, நாம் குடும்பத்தினரோடு சேர்ந்து செய்யலாம் அல்லது ஏற்கெனவே பிஸ்னஸ் பற்றிய அறிவுகொண்ட பிஸ்னஸ்மேனுடன் சேர்ந்து செய்யலாம் அல்லது ஆர்வமுள்ள நண்பர்களுடன் சேர்ந்து செய்யலாம். இவற்றில் கவனமாக இருக்கவேண்டிய சில விஷயங்கள் உள்ளன. யார் முதலீடு செய்யப் போகிறார், யார் வொர்க்கிங் கபிட்டல் எனப்படும் உழைப்பை முதலீடு செய்யப் போகிறார், யாருக்கு எவ்வளவு பங்கு என்பதையும் குறிப்பிட வேண்டும். ஒவ்வொருவருடைய பொறுப்பு மற்றும் வேலை என்ன? பணம் தருவது, பெறுவது தொடர்பாக யார் கையெழுத்து போடப் போகிறீர்கள். ஒருவர் மட்டுமா, பார்ட்னர்கள் இருவரும் கையெழுத்திட வேண்டுமா என்பதை பார்ட்னர்ஷிப் டீட் என்னும் ஒப்பந்தப் பத்திரத்தில் குறிப்பிட வேண்டும்.

பதிவு விசயத்தில் மிக கவனமாக இருக்க வேண்டும். பதிவு செய்யாமல் செய்ய முயல வேண்டாம். பதிவு செய்வது தொடர்பாக ஒரு முறையான கணக்காளரை தொடர்பு கொண்டு, விபரத்தை அறிந்து கொள்ளுங்கள்.

(தொடரும்)




"எங்கள் கூட்டணிக்கு `தலைவரே' கிடையாது!"

"எங்கள் கூட்டணிக்கு `வாக்காளரே' கிடையாது!"

"தலைவர் ஏன் கோபமா இருக்கார்?"

"அவசரமாக கட்சி மாற, அணுகவேண்டிய தொலைபேசி எண்ணு அவர் ரூம்ல யாரோ எழுதிப்போட்டிருக்காங்க!"





"நம் மன்னர் எந்தத் தைரியத்தில் பிக் பாஸில் கலந்துகொள்ளப் போகிறார்?"

"வருஷத்தில் முக்கால்வாசி நாள் பதுங்குகுழியில் இருந்த அனுபவத்தில்தான்!"

# கல்யாணத்தின் போது கொடுத்த வாக்கை கடைசிவரை காப்பாற்றிய பிரபாகரன்!

## இந்தியாவின் திட்டத்தை நிராகரித்ததற்கு கல்யாண வாக்குறுதியும் காரணம்!!



இந்த நீச்சல்குளம் அமைந்துள்ள முகாமில்தான் இந்திய சமரச முயற்சி பற்றிய சந்திப்பு நடந்தது

இந்தியா கொடுத்த புரபோஷல் 4

பீஷ்மர்

அமெரிக்க பேராசிரியர் ஒருவரின் ஊடாக இந்திய மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்தை நடேசன் தொடர்பு கொண்டார் என்பதை கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தேன். புலிகளின் தகவலையடுத்து ப.சிதம்பரம் உடனடியாகவே புலிகளிற்கு தொடர்பாளர்கள் மூலம் ஒரு தகவல் அனுப்பினார். அது "மக்கள் கொல்லப்படுகிறார்கள். புலிகளும் நெருக்கடியை சந்திக்கிறார்கள். இந்த சமயத்தில் நாம் (இந்தியா) தலையிடுவதென்றால் சில விசயங்களில் தெளிவான அபிப்பிராயத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். நீங்கள் (புலிகள்) தனிஈழக் கோரிக்கையை வைத்திருக்கும் வரை இந்தியாவால் உங்களிற்கு உதவ முடியாது. நீங்கள் தனிஈழ கோரிக்கையை கைவிட தயாரா?" என்பதே.

இது நடந்தது 2009 ஜனவரி மத்தியில். அப்பொழுது கிளிநொச்சி முழுமையாக வீழ்ச்சிடைந்து விட்டது. தமது ராஜதந்திர நகரத்தை வைத்து புலிகளால் பேரம் பேச முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது. கிளிநொச்சியை இழந்த பின்னர் புலிகள் பேரம் பேச முடியாது, நமது ஆலோசனைகளை கேட்டு நடக்க வேண்டும் என்ற தொனி ப.சிதம்பரம் அனுப்பிய தகவலில் தெரிந்தது. இது புலிகளிற்கு தெரியாதது அல்ல. ஆனாலும், அவர்களால் எதுவும் செய்ய முடியாத நிலைமை. காரணம், இந்திய தகவல் புலிகளிற்கு கிடைத்த சமயத்தில் தர்மபுரத்தை இராணுவம் கைப்பற்றியிருந்தது.

ப.சிதம்பரத்தின் தகவல் பிரபாகரனிற்கும் உடனடியாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் அந்த தகவல் கிடைத்ததை போலவே காட்டிக் கொள்ளவில்லை. இந்த வகையான சரணடைவு, கொள்கையில் விட்டுக்கொடுக்கும் பேச்சுக்கள் பிரபாகரனிற்கு பிடிப்பதில்லை. ஆயுதத்தை தூக்கிய . பின்னர் தனது கொள்கையிலிருந்து பிரபாகரன் விலகியதில்லை. விட்டுக்கொடுத்ததுமில்லை. பிரபாகரனது திருமண சமயத்தில் புலிகளிற்குள் ஒரு குழப்பம் ஏற்பட்டது. அதுவரை, புலிகளிற்குள் யாரும் திருமணம் செய்யக் கூடாதென்ற இறுக்கமான விதி இருந்தது. உமாமகேஸ்வரன், ஊர்மிளாவுடன் நெருக்கமாக பழகினார் என்பதற்காகவே புலிகளை விட்டு வெளியேற்றப்பட்டிருந்தார். இப்படியான நிலையில் பிரபாகரன் திருமணம் செய்வதை அமைப்பிற்குள் ஏற்பார்களா?



பதிவு திருமணத்தை முடித்துக் கொண்டு வெளியில் வரும் பிரபாகரன் தம்பதி

இல்லை. ஏற்கவில்லை. தளபதிகள், போராளிகளிற்குள் பெரும் குழப்பம் ஏற்பட்டது. அன்ரன் பாலசிங்கம், பொன்னம்மான், விக்டர் ஆகியோர் பிரபாகரனின் திருமணத்தை ஆதரித்தார்கள். மாத்தையா, சந்தோசம், குமரப்பா போன்ற ஏனைய மத்திய குழு உறுப்பினர்கள் இதை ஆதரிக்கவில்லை. அப்பொழுது தமிழகத்திலும், இலங்கையிலும் போராளிகள் முகாமைத்து தங்கியிருந்தனர். இரண்டு இடங்களிலுமுள்ளவர்களை சமரசப்படுத்த வேண்டும்.

தமிழகத்தில் இருந்த மூத்த போராளிகளுடன் முதலில் அன்ரன் பாலசிங்கம் பேசினார். பின்னர் ஒவ்வொரு முகாமாக பொன்னம்மான் சென்று, போராளிகளுடன் பேசினார். பிரபாகரன் பேசி ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒலிநாடா ஒன்றை போராளிகள் மத்தியில் ஒளிபரப்பினார்கள். அந்த ஒலிநாடாவில் பிரபாகரனின் பேச்சு இப்படித்தான் முடிந்தது "நான் திருமணம் செய்வதால், தமிழீழ கோரிக்கைக்கோ, இயக்கத்திற்கோ துரோகம் செய்யமாட்டேன். இந்த இரண்டில் ஏதாவது ஒன்றிலிருந்தாவது நான் விலகினாலும், அமைப்பிலுள்ள யாராவது என்னை சுடலாம்".

இன்னொரு சம்பவத்தையும் குறிப்பிட வேண்டும். இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன தொடரில் இதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தாலும், புதிய வாசகர்களிற்காக மீண்டும் குறிப்பிடுகிறேன்.

2007 இல் நடந்தது. சமாதான பேச்சுக்கள் குழம்பி மீண்டும் யுத்தம் ஆரம்பித்திருந்தது. புலிகளின் முக்கியஸ்தரான பாலகுமாரன் ஒரு கடிதம் பிரபாகரனிற்கு அனுப்பியிருந்தார். அதில் யுத்தத்தை நிறுத்தி சமாதான பேச்சு மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த கடிதத்திற்கு பிரபாகரன் பதிலளிக்கவில்லை. தான் அனுப்பிய கடிதம் பிரபாகரனிற்கு போய் சேர்ந்ததா, படித்தாரா இல்லையா என ஒன்றும் தெரியாமல் பாலகுமாரன் திண்டாடிக் கொண்டிருந்தார். பாலகுமாரன் புலிகளின் முக்கியஸ்தர் என்று அழைக்கப்பட்டாலும், முடிவெடுக்கும் வட்டத்திற்குள்ளோ, பிரபாகரனிற்கு நெருக்கமாகவோ இருக்கவில்லை. அதனால் எந்த தகவலையும் நினைத்த வேகத்தில் பிரபாகரனிடம் அவரால் சேர்ப்பிக்க முடியாது.

உண்மையில் அந்த கடிதம் பிரபாகரனிடம் உடனே சேர்ப்பிக்கப்பட்டு விட்டது. அதை படித்த பின்னர், வேண்டுமென்றே பாலகுமாரனுடனான தொடர்பை பிரபாகரன் துண்டித்திருந்தார். பாலகுமாரனுடன் தொலைதொடர்பு சாதனங்களில் பேசிக்கொள்ளும் அளவிற்கு நெருங்கிய வட்டத்திற்குள் பிரபாகரன்


தொடர்ச்சி அடுத்தபக்கம்...

வைத்திருக்கவில்லை. எங்காவது நிகழ்வுகள், அரசியல்துறை சந்திப்புக் களிலேயே பேசிக்கொள்வார். அது யுத்த சமயம் என்பதாலோ என்னவோ, பாலகுமாரனும் பிரபாகரனும் நீண்ட நாட்களாக நேரில் சந்தித்து கொள்ள வில்லை. இது பாலகுமாரனிற்கு சங்கடத்தை கொடுத்தது. வேண்டு மென்றேதான் பிரபாகரன் தன்னை சந்திப்பதை தவிர்க்கிறார் என நினைத்தார்.

இந்த சம்பவங்கள் நடந்த சில மாதங்களின் பின்னர் வட்டக்கச்சியில் சாள்ஸ் அன்ரனி படையணியின் ஆண்டு நிறைவு விழா நடந்தது. புலிகளின் முக்கியஸ்தர்கள் எல்லோ ரும் கலந்து கொண்ட நிகழ்வில் பிரபாகரனும் கலந்து கொண்டார். பிரபாகரனிற்கு அருகில் உட்காரும் வாய்ப்பு பாலகுமாரனிற்கு கிடைக்க வில்லை. பாலகுமாரனை கண்டதை போல, பிரபாகரனும் காட்டிக்கொள்ள வில்லை.

நிகழ்வின் இறுதியில் பிரபாகரன் புறப்பட்டார். பாலகுமாரனை அவர் கணக்கெடுக்கவேயில்லை. பிரபாகர னிற்கு முன்னால் சென்ற பாலகு மாரன் "தம்பி... ஒரு கடிதம் அனுப்பி யிருந்தனான். கிடைத்ததா?" என்றார். அப்பொழுதுதான் பாலகு மாரனை பார்பவரைபோல பார்த்து சிரித்துவிட்டு, பார்த்து "பாலகுமாரண் ணைக்கு ஒரு சி.டி கொடுத்து விடுங்கள்" என்றுவிட்டு போய் விட்டார்.

உதவியாளர் ஒரு சிடி கொடுத்தார். ஏதாவது சமரச திட்ட எழுத்து


சரணடைந்த பின்னரென கருதப்படும் நிலையில் பாலகுமாரனும், மகனும்

வடிவங்களாக இருக்குமோ என்றும் பாலகுமாரன் யோசித்தார். வீட்டுக்கு சென்று, சிடியை போட்டால், அது ஒரு திரைப்படம்!

படத்தின் டைட்டிலை பார்த்ததுமே, பாலகுமாரனிற்கு முகம் இருண்டது. பாலகுமாரனது யோசனைக்கு பிரபாகரன் ஒரு திரைப்படத்தின் மூலம் பதிலளித்திருக்கிறார், அது சாகப் பயந்தவர்களின் யோசனை என்பதை போன்ற செய்தியை சொல்லும் திரைப்படம் அது.

அந்த திரைப்படம் முன்னூறு வீரர்கள் ஸ்பாட்டன்ஸ்!

பிரபாகரனிற்கு மிக பிடித்தமான திரைப்படம். தமது அமைப்பிலிருக்கும் ஒவ்வொரு போராளியும் இந்த திரைப் படத்தை பார்த்திருக்க வேண்டுமென விரும்பினார்.அது புலிகளால் தமிழாக்கம் செய்யப்பட்டது. இந்த திரைப்படத்தை பல பத்து தடவை களிற்கு மேல் பிரபாகரன் பார்த்து விட்டார். கிரேக்க வரலாற்று கதையே இந்த திரைப்படம்.

இந்தியா புலிகளை சரணடைய வைக்க தயாரித்த திட்டம் குறித்த கட்டுரையில், இந்த இரண்டு சம்பவங்களையும் குறிப்பிட்டதற்கு காரணம் உள்ளது. பிரபாகரனின் மனநிலையை தெரிந்துகொள்ளாமல், இந்தியா இந்த விடயத்தை கையாண்டது, அதனால்தான் இந்திய யோசனை வெற்றியடையவில்லை என்பதை குறிப்பிடவே அவற்றை சொன்னேன்.

ப.சிதம்பரத்தின் செய்தி கிடைத்த பின்னரும், பிரபாகரன் எந்த ரியாக்ஷனும் இல்லாமல் இருந்தது நடேசனிற்கு சங்கடமாக இருந்தது. பிரபாகரனுடன் பேசிவிட்டு, விரைவில் பதில் தருகிறேன் என தொடர்பாளர்களிடம் கூறிவிட்டு, பிரபாகரனை தொடர்பு கொள்ள முடியாமல் இருப்பது நல்லதல்ல என யோசித்துவிட்டு,ஒருநாள் பிரபாகரனை நேரில் சந்தித்து, சிதம்பரத்தில் செய்தி தொடர்பாக பேசினார். மறுநாள், புதுக்குடியிருப்பில் இதைப்பற்றி ஆராயலாம் என்றார் பிரபாகரன்.

2009 ஜனவரி மத்தி. புதுக்குடி யிருப்பில் (மிகச்சரியாக சொன்னால் புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியில் கிழக்கு பக்கம் அமைந்திருந்த கணினி பிரிவின் முகாமில் நடந்தது. அந்த முகாமில்தான் நீச்சல் தடாகம் இருந்தது. பிரபாகரன், பாலசந்திரன் நீச்சல் தடாகத்தில் உள்ள படம் இணைத்துள்ளோம். இந்த முகாமில் தான் எடுக்கப்பட்டது. புதுக்குடி யிருப்பு ஒட்டுசுட்டான் வீதியின் மேற்கு பக்கமாக இருந்த நிலக்கீழ் பதுங்குகுழியை கொண்ட பிரபாகர னின் முகாம் மக்கள் பார்வைக்காக முன்னர் திறந்து விடப்பட்டிருந்தது. இந்த சந்திப்பு நடந்த முகாமை மக்கள் பார்வைக்காக இராணுவம் திறந்து விடவில்லை)

பிரபாகரன், பொட்டம்மான், நடேசன், சூசை, பானு, கஸ்ரோ, தமிழேந்தி ஆகிய ஏழுபேர் கலந்து கொண்ட உயர்மட்ட கலந்துரையாடல் நடந்தது. இந்த சந்திப்பில் பிரபாகரன் மிக கடினமாக கதைத்தார். "இராணு வத்தின் முன்னகர்வை தடுத்து நிறுத்த முடியாவிட்டால்; இயக்கத்தின் அழிவை யாராலும் தடுக்க முடியாது, என்னிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதென யாரும் நினைக்காதீர்கள். என்னிடம் எந்த திட்டமும் இல்லை. நீங்கள் ஏதாவது செய்யதால்தான் உண்டு" என வெளிப்படையாக பேசினார்.

உடனடியாக தேவைப்படும் ஆயுதங்கள் கிடைக்காமல் இராணு வத்தை தடுத்து நிறுத்துவது சிரமம் என்ற கள யதார்த்தத்தை உடைக்க, ஏதாவது செய்ய வேண்டுமென சூசை, கஸ்ரோவிடம் மற்ற தளபதிகள் கேட்டு கொண்டனர். அதாவது வெளிநாட்டில் இருந்து கப்பலில் ஆயுதங்கள் கொண்டுவர வேண்டும். இனி அதற்கான வாய்ப்பு கிட்டத் தட்ட இல்லையென சூசை வெளிப்படையாகவே சொன்னார்.

கள யதார்த்தத்தை கூட்டிக்கழித்து பார்த்து, தமிழீழ கோரிக்கையை கைவிட நாம் தயாராக இருக்கிறோம் என்ற செய்தியை இந்தியாவிற்கு அறிவிப்பதென முடிவெடுக்கப்பட்டது.

புலிகளின் தனி ஈழ கோரிக்கை சமரச முயற்சிகளின்போது நெருக்கடியை ஏற்படுத்துவதுண்டு. பேச்சுக்கு வரும் அரசாங்கம், புலிகளின் தனி ஈழ கோரிக்கையை ஏற்றுக்கொண்டு விட்டதென தெற்கில் எதிர்கட்சிகள் பிரசாரத்தை ஆரம்பிப்பார்கள். இந்த சிக்கலை தவிர்க்க, பேச்சுக்கு முன்னரே அரசும் புலிகளும் ஒரு புரிந்துணர்வு வேலை செய்வார்கள். 2002 சமாதான பேச்சுசமயம்நினைவிலுள்ளவர்களிற்கு நாம் சொல்வது புரியும். அப்போதைய வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பாங்கொங்கில் பேச்சுவார்த்தைக்கு முன்னர் சொன்னார் "புலிகள் தமிழீழ கோரிக்கையை கைவிட்டால்தான் பேச்சை ஆரம்பிக்கலாம். நாட்டை பிரித்து கொடுக்க நாம் பேச்சுவார்த் தைக்கு வரவில்லை" என.

புலிகளின் பேச்சு குழுவிற்குதலைமை தாங்கி சென்ற அன்ரன் பாலசிங்கம் அதற்கு பதிலளித்தார். "தமிழ் மக்களின் பல தசாப்தகால அரசியல் அபிலாசைகளை தீர்க்க வேண்டு மென்றுதான் பேச்சிற்கு வந்திருக்கி றோம். பேச்சின் முன்னரே நாம் நிபந்தனைகளை விதிக்கவில்லை. சுயாட்சி அடிப்படையிலான நிலை யான தீர்வு கிடைத்தால் அதையும் பரிசீலிக்க தயாராகவே இருக்கிறோம்" என்றார். இந்த பேச்சுக்களின் தொடர்ச் சியாக "தமிழீழ கோரிக்கையையும் கைவிடலாம். ஆனால் பொருத்தமான மாற்று தீர்வொன்று கிடைத்தால்" என சொல்லியிருந்தார். இப்படியான இராஜதந்திர நகர்வொன்றை செய்ய லாமென அன்றைய சந்திப்பில் முடிவெடுக்கப்பட்டது. ஏனெனில், இராணுவத்தின் நகர்வை நிறுத்தியே ஆக வேண்டும். சிறிய இடைவெளி கிடைத்தால்தான் அமைப்பை மீள ஒழுங்கமைக்கலாம்.

இந்த தொடரின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட வட இந்திய ஊடக வியலாளரையும் இந்த சமரச திட்டத்திற்குள் களமிறக்க புலிகள் விரும்பினார்கள். அதற்கு காரணம், கனிமொழி சமரச முயற்சியில் ஈடுபாட்டுடன் நடக்கமாட்டார் என பிரபாகரன் நினைத்தார். ஏற்கனவே இந்தியாவில் இருந்த சமயத்தில் கருணாநிதியுடன் புலிகளிற்கு ஆரம் பத்தில் தொடர்பிருந்தது. கருணா நிதியின் அணுகுமுறை பிரபாகரனிற்கு பிடிக்கவில்லை. கருணாநிதியின் இயல்பு பிரபாகரனிற்கு தெரியும். கருணாநிதியின் ஆலோசனைகளை புறந்தள்ளி கனிமொழி நடப்பார் என்பதை பிரபாகரன் நம்பவில்லை. ஆனால் நடேசனிற்கு கனிமொழியில் நம்பிக்கையிருந்தது. என்றாலும் பிரபாகரனின் அபிப்பிராயப்படி வடஇந்திய பத்திரிகையாளரும் இந்த புரஸஷில் சம்மந்தப்பட்டார்.

சிதம்பரத்தை டில்லியில் நேரில சந்தித்து பேச்சு நடத்தினார். "புலிகள் எப்படியான தீர்வு முயற்சிக்கு சம்மதிப்பார்கள்? இப்பொழுது யுத்தத்தை நிறுத்துவதென்றால் இலங்கை கடுமையான நிபந்தனை களை விதிக்கும். புலிகளை காப்பாற்று வதாக நமது முயற்சி இருக்காது. புலிகளை முழுமையாக ஆயுத நீக்கம் செய்தால்தான் இந்த பிராந்தியம் அமைதியாக இருக்குமென்பதே இந்தியாவின் நிலைப்பாடு. இந்தி யாவின் நிலைப்பாடு, இலங்கையின் எதிர்பார்ப்புக்களை ஈடுசெய்வதாகவே இந்தியாவின் திட்டம் இருக்கும். அதற்கு சம்மதித்தால் மட்டுமே புலிகள் இந்த நெருக்கடியிலிருந்து மீளலாம். எந்த விட்டுக்கொடுப்பிற்கும் தயாராக இருக்கிறார்களா என்பதை புலிகளிடம் கேட்டு சொல்லுங்கள்" என வடஇந்திய பத்திரிகையாளரிடம் சிதம்பரம் கூறினார்.


பிரபாகரனிற்கு பிடித்த 300 ஸ்பாட்டன்ஸ் படத்திலிருந்து

அன்றே இந்த தகவல் புதுக்குடி யிருப்பில் இருந்த நடேசனிற்கு வந்தது. நடேசன் இதுபற்றி கலந்துரையாடிய ஒரே ஆள் கே.பி. எப்படியான பதில் சொல்லலாமென இருவரும் ஆலோசித்துவிட்டு அனுப்பிய பதில் "ஆம். யுத்தத்தை நிறுத்த விட்டுக்கொடுப்பின் எல்லைவரை செல்ல நாம் தயார்"!

மறுநாள் புலிகளின் பதில்,ப.சிதம்பரத் திடம் சேர்ப்பிக்கப்பட்டது. புலிகள் விட்டுக்கொடுப்பிற்கு தயாராக இருந்த விவகாரத்தை சிதம்பரம் ஆச்சரிய மாகத்தான் கேட்டார். எப்படியோ புலிகளை பலமிழக்க செய்ய கிடைத்த வாய்ப்பை தவறவிட அவர் தயாராக இல்லை. உடனே காரியத்தை ஆரம்பித்தார். யுத்தத்தை நிறுத்த புலிகள் என்ன செய்ய வேண்டுமென்ற ஒரு சமரச புரபோஷலை தயாரித்து அனுப்பலாமென முடிவு செய்தார். இந்த தகவலும் புலிகளிடம் போனது. நடேசனும் சம்மதித்தார்.

இந்த புரபோஷலை தயாரிக்க சிதம்பரம் யாரை அணுகினார் தெரியுமா? அதை அடுத்தவாரம் குறிப்பிடுகிறேன். (தொடரும்)



எம்.ஜி.ஆர் **100** நெடுந்தொடர் 88

# கலைஞருக்கெல்லாம் வள்ளல்!

ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்.** புகைப்படக் கலையில் ஆர்வம் கொண்டவர். கமராவை கையாள்வதில் நிபுணர். புகைப்படம் எடுக்கும்போது படம்எடுப்பவர்களுக்கு அருமையாக போஸ் கொடுத்து ஒத்துழைப்பு அளிப்பதுடன், அவர்களின் நடைமுறைசிரமங்களையும் அறிந்தவர். ஸ்டில் கமரா மட்டுமின்றி, படப்பிடிப்பு கமராக்களின் கோணங்களையும் பெரும்பாலும் அவரே முடிவு செய்வார். அதனால்தான், எம்.ஜி.ஆரின் திரைப்படங்களைப் போலவே அவரது புகைப்படங்களும் ரசிக்க வைக்கின்றன!

பொதுவாக, தலைவர்களுடன் தொண்டர்கள் புகைப்படம் எடுத்துக் கொள்வது வழக்கமான ஒன்று. அந்த நேரத்தில் ஆர்வமாக எடுத்துக் கொள்வார்களே தவிர, தலைவரைப் பார்த்த மகிழ்ச்சியில் தங்களைப் புகைப்படம் எடுத்தது யார் என்றுகூட தெரியாமல் சென்றுவிடுவார்கள். ஒரே நேரத்தில் அடுத்தடுத்து பல பேரை படம் எடுத்துவிட்டு, தலைவர்களுடனேயே புறப்பட்டுவிடும் புகைப்படக் கலைஞர்களும் யார், யாரை படம் எடுத்தோம்? யாரிடம் புகைப் படங்களைக் கொடுப்பது என்று தெரியாமல் தவிப்பார்கள். இது போன்று, புகைப்படக் கலைஞர்களிடம் கேட்பாரின்றி ஏராளமான புகைப்படங்கள் இருக்கும்.

ஒருமுறை தேர்தல் பிரசாரத்தின் போது மதுரைக்குச் சென்ற எம்.ஜி.ஆர், அங்கு தங்கியிருந்தார். அவரைப் பார்க்க கட்சியினரும் தொண்டர்களும் குவிந்தனர். காலையில் எம்.ஜி.ஆர் சுற்றுப் பயணத்துக்கு புறப்படும்முன், தொண்டர்கள் குழுக்களாக அவர் இருந்த அறைக்குச் சென்று சந்தித்தனர். ஒரு குழுவினர் அவரோடு புகைப்படம் எடுத்துக் கொள்ள ஆசைப்பட்டு அவரிடம் தெரிவித்தனர்.

அப்போது, அந்த அறையில் இருந்த புகைப்படக் கலைஞரிடம் எம்.ஜி.ஆர் படம் எடுக்கச் சொன்னார். படம் எடுத்து முடித்தபின் சுற்றுப் பயணம் செல்வதற்காக அறையில் இருந்து வெளியே வந்தார். அவருடன் கூடவே பிரசார நிகழ்ச்சிகளைப் படம் எடுப்பதற்காக புகைப்படக் கலைஞரும் புறப்பட்டார். தொண்டர்களும் எம்.ஜி.ஆரை வழியனுப்ப வந்தனர்.

காரில் ஏறப்போகும் சமயம். புகைப்படக் கலைஞரைப் பார்த்து எம்.ஜி.ஆர், "படம் எடுத்துக் கொண்டவர்களை உங்களுக்குத் தெரியுமா?" என்றார். "தெரியாது" என்று பதில் வந்தது. அதேபோல, தொண்டர்களைப் பார்த்து, "உங்களை படம் எடுத்த இந்த போட்டோகிராபரின் அட்ரஸ் தெரியுமா?" என்றார். திருதிருவென அவர்கள் முழித்தபடியே 'தெரியாது' என்ற பதிலைச் சொன்னது. புரிந்து கொண்ட எம்.ஜி.ஆர், புகைப்படக் கலைஞரிடம் அவரது விசிட்டிங் கார்டை படம் எடுத்துக் கொண்டவர்களிடம் கொடுக்கச் சொன்னார். அவரது சமயோசிதத்தை அறிந்து தொண்டர்கள் வாழ்த்து கோஷம் எழுப்பினர். அவர்களைக் கையமர்த்திய எம்.ஜி.ஆர், "மறக்காமல் புகைப்படங்களுக்கு உரிய பணத்தைக் கொடுத்து வாங்கிக்கொள்ளுங்கள்" என்று சொன்னதும் எழுந்த சிரிப்பொலி அந்தப் பகுதி முழுவதும் எதிரொலித்தது!

தலைவர்களுக்கு மாலை போடும் போது, மாலை அணிவிப்பவரின் கைகள் தலைவர்களின் முகத்தை மறைத்தபடி இருக்கும். அந்த நிலையில், படம் எடுக்க முடியாமல் புகைப்படக் கலைஞர்கள் தவிப்பார்கள். இதை எம்.ஜி.ஆர் அறிந்திருந்தார். அதனால், தனக்கு யாராவது மாலை போட்டால் தன் முகத்தை மறைக்காதபடி, அவரது கைகளை இறுகப் பிடித்துக் கொள்வார். புகைப்படக் கலைஞர்கள் திருப்தியாக படம் எடுத்து முடிந்த பிறகே மாலை போட்டவரின் கைகளை விடுவார்.

சந்தையில் எந்த புதிய கமரா வந்தாலும் எம்.ஜி.ஆர் வாங்கி விடுவார். படப்பிடிப்பின் போது இயற்கை காட்சிகளை படம் பிடிப்பார். புகைப்படம் நன்றாக அமைந்தால்தான், அதை எடுத்த கலைஞர்களுக்கும் நல்ல பெயர். பார்ப்பவர்களையும் படம் கவரும். எந்தக் கோணத்தில் எப்படி எடுத்தால் படம் நன்றாக இருக்கும்? தான் எப்படி போஸ் கொடுக்க வேண்டும் என்பதெல்லாம் எம்.ஜி.ஆருக்கு அத்துபடி. பெரும்பாலும் கைகளை வெறுமனே தொங்கவிட்டபடி நிற்க மாட்டார். அது பார்க்க நன்றாக இருக்காது என்பதால், கைகளில் ஏதாவது பொருட்களையோ, பேப்பரையோ ஸ்டைலாக வைத்துக் கொண்டோ, தொண்டர்களை அணைத்தபடியோதான் போஸ் கொடுப்பார்.

எம்.ஜி.ஆரின் ஆஸ்தான புகைப் படக் கலைஞர் ஆர்.என். நாகராஜ ராவ். அவரது பெரும்பாலான படங்களுக்கு நாகராஜ ராவ்தான் ஸ்டில் போட்டோகிராபராக பணியாற்றியுள்ளார். முதல்முறை தமிழக முதல்வராக பதவியேற்றபின், தலைமைச் செயலகத்தில் முதல்வர் நாற்காலியில் எம்.ஜி.ஆர் அமர்ந்ததும் அவரது விருப்பப்படி முதலில் புகைப்படம் எடுத்தவர் நாகராஜ ராவ்!

'நாடோடி மன்னன்' திரைப்படம் எடுத்து முடிந்தபின், அதன் சிறப்புக் காட்சிக்கு நாகராஜ ராவையும் எம்.ஜி.ஆர் அழைத்திருந்தார். அப்போது, நாகராஜ ராவ் எம்.ஜி.ஆரிடம், "படம் நிச்சயம் அமோக வெற்றி பெற்று நூறு நாட்களுக்கு மேல் ஓடும்" என்றார். எம்.ஜி.ஆரும் மகிழ்ச்சியுடன், "நீங்கள் சொன்னது நடந்தால் ஆயிரம் ரூபாய் பரிசளிக்கிறேன்" என்றார். படம் பிரம்மாண்ட வெற்றிபெற்றது. தான் சொன்னதை நாகராஜ ராவே மறந்துவிட்டார். ஆனாலும், எம்.ஜி.ஆர் அவருக்கு நினைவுபடுத்தி ஆயிரம் ரூபாயை பரிசளித்தார். அந்த காலகட்டத்தில் பவுன் விலை ஏறத்தாழ நூறு ரூபாய்!

எம்.ஜி.ஆர் நடித்த 'அரசகட்டளை' படத்துக்கும் நாகராஜ ராவ்தான் புகைப் படக் கலைஞராக பணியாற்றினார். அந்தப் படத்தில் இடம் பெற்ற 'என்னைப் பாட வைத்தவன் ஒருவன்' பாடலில் எம்.ஜி.ஆரைப் புகழ்ந்து எழுதப்பட்ட வரிகள் இவை:

'அவன் கலைகளுக்கெல்லாம் மன்னன்;
நல்ல கலைஞருக்கெல்லாம் வள்ளல், வள்ளல்!'

தொடரும்...

'எங்க வீட்டுப் பிள்ளை' படத்தின் விளம்பரத்துக்காக சாட்டையைச் சுழற்றுவது போல, அடிப்பது போல, சாட்டையை உடலைச் சுற்றி பிடித்தபடி என, இந்தத் தொடரின் 'லோகோ'வில் இடம்பெற்றுள்ள படம் உட்பட விதவிதமாக எம்.ஜி.ஆர் போஸ் கொடுக்க, அந்தப் படங்களை எடுத்தவர் நாகராஜ ராவ். இதில் ஒரு விசேஷம், எம்.ஜி.ஆர் தனக்குத் தோன்றிய விதங்களில் தானாகவே யோசித்து கொடுத்த அட்டகாசமான போஸ்கள் அவை!





# அளவுக்கு மீறினால் மாத்திரையும் நஞ்சு!



'பொலிபார்மசி' (Polypharmacy அதிக மாத்திரைகளை உட்கொள்ளுதல்), 'செல்ஃப் மெடிக்கேஷன்' (சுய மருத்துவம்), 'அன்டிபயோட்டிக் ரெசிஸ்டன்ஸ்'..! இந்த மூன்று பிரச்னைகளும் இன்றைய மருத்துவ உலகம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால்களாக முன்னிற்பவை. நோய்களின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது மட்டும்தான் இந்த பிரச்னைகளுக்கான முக்கியக் காரணமா?

'வளர்ந்த நாடுகளில் Rx (மருத்துவரின் பரிந்துரையின்பேரில் மட்டும்) மதிப்பீடு உள்ள மருந்துகள் பலவும் இலங்கையில் ஓ.டி.சி பிரிவில் (Over-the-Counter - மருந்துச் சீட்டின்றி) மருந்தகங்களிலேயே எளிதாகக் கிடைப்பதும், மருந்துகள் பற்றிய போதுமான விழிப்புஉணர்வு இல்லாமல், தவறான மருந்து எடுத்துக் கொள்ளும் முறையும்தான் இவற்றுக்கெல்லாம் முக்கியக் காரணங்கள்.

சூப்பர் மார்க்கெட்டில் ஷொப்பிங் செய்வதைப் போல மாறி வருகிறது, மருந்தகங்களில் இன்று மாத்திரைகள் வாங்கும் கலாசாரம். காய்ச்சலுக்கு பாரசிட்டமோல், கை கால் வலிக்கு பெயின் கில்லர், அசதிக்கு சத்து மாத்திரைகள் தொடங்கி, சாதாரண சளிக்கே தீவிரமான அன்டிபயோட்டிக்ஸ் எனக் கையில் கிடைப்பதையெல்லாம் வாயில் போட்டுக்கொள்வது சரிதானா? அதிகமான மாத்திரைகளை உட்கொள்வதால் என்னென்ன பிரச்னைகள் ஏற்படும், அவை ஏன் ஏற்படுகின்றன என்பன பற்றி சற்றே ஆழ்ந்து யோசிக்கவேண்டிய நேரம் இது.

இலங்கையில் 50 சதவிகிதத்துக்கும் மேலான பெண்கள் 'ஆர்த்ரைட்டிஸ்' என்கிற மூட்டுவலியால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், இவர்களில் 10 சதவிகிதம் பேர்கூட அதற்கான மருந்துகளை எடுத்துக்கொள்வதில்லை. உடம்புவலி எனக் கூறி வலி நிவாரணிகளுக்கு அடிமையாகி, இறுதியில் மருத்துவமனைகளில் மூட்டுவலியுடன் சிறுநீரகச் செயலிழப்புக்கும் சேர்த்து அனுமதிக்கப்படுபவர்கள்தான் அதிகம். இம்மாதிரியான மருத்துவ அறியாமை நீங்க வேண்டுமானால், அதிகமான மாத்திரைகள் உட்கொள்வதால் ஏற்படும் பாதிப்புகளை அறிவதோடு அதற்கான காரணங்களையும் அறிவதுதான் சரியான தீர்வாக அமையும்.

### காய்ச்சல் பாராசிட்டமோல்

மிக அதிகமான காய்ச்சல் உள்ள நோயாளிக்கு, ஒரு நாளைக்கு அதிகபட்சமாக 4,000 மி.கி வரை இந்த மாத்திரையை மருத்துவர்கள் பரிந்துரைக்கலாம். ஆனால், மருத்துவர்கள் அதிகபட்சமாக 2,000 மி.கி வரையிலும்கூட பரிந்துரைப்பார்கள். அதாவது, 650 அல்லது 500 மில்லி கிராம்களில் கிடைக்கும் இந்த மாத்திரையை அதிகமான காய்ச்சலின் போதும் மூன்று அல்லது நான்கு மாத்திரைகள் எடுத்துக்கொண்டாலே போதுமானது என்பதுதான் மருத்துவர்களின் அறிவுரை. ஏனெனில், அதிகபட்ச அளவு என்பது ஒவ்வொருவரின் உடலைப் பொறுத்துப் மாறுபடும். இந்த மாத்திரையை ஒரே நாளில் 4,000 மில்லி கிராமுக்கு அதிகமாக எடுக்கும்போதோ அல்லது தொடர்ச்சியாக எடுத்து வரும்போதோ பராசிட்டமோலில் உள்ள 'அசிட்டமினோஃபென்' (Acetaminophen) என்ற வேதிப்பொருள் அதிகப்படியாக வளர்சிதை மாற்றம் அடைந்து கல்லீரலுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நச்சுப்பொருளாக மாறுவதற்கு வாய்ப்புகள் அதிகம். ஆரம்பத்தில் பசியின்மை, வாந்தி, வியர்த்துப்போதல், கண்கள் மஞ்சள் நிறமாகுதலில் தொடங்கி இறுதியில் கல்லீரல் அழற்சியில் முடிந்துவிடும்.

### வலி நிவாரணிகள்

உடலின் எந்த உறுப்பில் பாதிப்பு ஏற்பட்டாலும், அந்த உறுப்பில் ஏற்படும் வலிதான் நோயின் முதல் அறிகுறி. தலைவலி என்பது மைக்ரேன், கண்ணின் குறைபாடு, உயர் ரத்த அழுத்தம் இப்படி எதன் அறிகுறியாகவும் இருக்கலாம். நாம் எடுத்துக் கொள்ளும் வலி நிவாரணிகள் தற்காலிகமாக வலிக்கு நிவாரணத்தை அளித்து, மருத்துவ மனைக்குச் செல்வதை மறக்கச் செய்து, நோயின் தீவிரத்தை அதிகப்படுத்தி விடுகின்றன. அதிக பட்சமாக மூன்று நாள்களுக்கு மேல் வலி நிவாரணிகளைப் பரிந்துரைக்காமல் தொடர்வலி இருக்கும் போது நோயாளிகளுக்கு அடுத்த கட்டப் பரிசோதனையைப் பரிந்துரைப்பதும் இதனால்தான். இந்த வலி நிவாரணிகளை அதிக அளவில் உட்கொள்ளும்போது இவை உள்ளுறுப்புகளில் ரத்தக் கசிவை ஏற்படுத்தக்கூடும். அதிகப்படியான வலி நிவாரணிகள் சிறுநீரகத்துக்குச் செல்லும் ரத்த ஓட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதால், சிறுநீரகம் செயலிழப்பதற்கான வாய்ப்புகளும் அதிகம். இதயப் பாதிப்புக்காக அஸ்பிரின் மாத்திரை உட்கொள்பவர்கள், வலி நிவாரணிகளை அதிக அளவில் எடுக்கும்போது, அவை அஸ்பிரினின் செயல்பாட்டைக் குறையச்செய்து ரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் அதிகம்.

### சாதாரண சளிக்கு அன்டிபயோட்டிக்ஸ்

சளி, சாதாரணமானதாகவும் இருக்கலாம் அல்லது நுரையீரல் தொற்றின் அறிகுறியாகவும் இருக்கலாம். சாதாரண சளியாக இருந்தால், எந்தவித மாத்திரைகளும் இன்றி ஒரே வாரத்தில் தானாகவே குணமாகிவிடும். ஆனால், கடைகளில் சென்று சளி, இருமல் எனச் சொல்லி அன்டிபயோட்டிக் மாத்திரைகளை வாங்கிப் போடுவது பிரச்னையை அதிகமாக்கும். மருந்துக் கடைகளில் கொடுக்கப்படும் அன்டிபக்டீரியல் மாத்திரைகள், வைரஸை அழிப்பதில்லை. மாறாக, நமது உடலில் இருக்கும் தேவையான சில நுண்ணுயிரிகளை அழித்து, உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியைக் குறைக்கச் செய்து விடுகின்றன. அதிக நாள்கள் சளிப் பிரச்னை நீடித்தால், மருத்துவமனைக்குச் சென்று கிருமிக்கான பரிசோதனையைச் செய்து அதற்கேற்ற அன்டிபயோட்டிக்ஸ் எடுத்துக் கொள்வதுதான் சரி. அன்டிபயோட்டிக்ஸ் எடுக்கும்போது அன்டிபயோட்டிக்ஸ் ரெசிஸ்டன்ஸ் உருவாகி, அந்த மருந்தானது நமது உடலுக்கு அவசியமாகத் தேவைப்படும் நேரத்தில் இந்த மாத்திரைகளால் செயல்பட முடியாமல் போகலாம்.

### அன்டிஹிஸ்டமைன் (antihistamine) மருந்துகள்

சளிக்குக் கொடுக்கப்படும் ரொனிக், அலெர்ஜிக்கு அளிக்கப்படும் மாத்திரை அனைத்தும் இந்த வகையைச் சேர்ந்தவைதான். இதில் இருக்கும் முக்கியப் பிரச்னை இந்த மருந்துகளுக்குத் தூக்கத்தை ஏற்படுத்தும் தன்மை இருப்பதுதான். குழந்தைகளுக்கு சளிக்கு மட்டுமின்றி தூங்குவதற்காகவும் தற்போது இந்த மருந்துகள் அதிக அளவில் பெற்றோர்களால் பயன்படுத்தப்படுகின்றன. சிறு வயதிலேயே குழந்தைக்கு ஒரு போதையை ஏற்படுத்துவது போன்றதுதான் இதுவும். அன்டிஹிஸ்டமைன் மருந்துகளுக்கு உடலின் சுரப்பைக் கட்டுப்படுத்தும் தன்மை உண்டு. இந்த மருந்துகளை அளவுக்கு அதிகமாக எடுக்கும்போது வாயில் வறட்சியை ஏற்படுத்துவதுடன், குழந்தைகளுக்கு ஒருவித மந்தத்தன்மையையும் ஏற்படுத்திவிடும்.

### அளவுக்கு அதிகமான தூக்க மாத்திரைகள்


தூக்கப் பிரச்னைகளுக்காக மருத்துவரின் ஆலோசனையின்பேரில் தூக்க மாத்திரையைப் பயன்படுத்துகிறவர்களைத் தவிர, மற்றவர்கள் கண்டிப்பாக தூக்க மாத்திரைகளை உபயோகிக்கக் கூடாது. இவை, நமது மூளையின் செயல்பாட்டை அமைதிப்படுத்தி, கட்டுப்படுத்தக் கூடியவை. தேவையின்றி இவற்றை உட்கொள்ளும்போது ஒருவித போதையை ஏற்படுவதோடு, மன அழுத்தம் போன்ற பிரச்னையும் ஏற்படும்.

### கார்டிகோஸ்டீராய்ட்ஸ் (Corticosteroids)

இவை ஆஸ்துமா நோயாளிகளுக்குப் பரிந்துரைக்கப்படுபவை. அதிக நாட்களுக்கு கார்டிகோஸ்டீரோய்ட் மருந்தைப் பயன்படுத்தும் ஆஸ்துமா நோயாளிகள், மாத்திரைகளைவிட இன்ஹேலர்களைப் பயன்படுத்துவதுதான் நல்லது. அதிக அளவில் பக்க விளைவுகளை ஏற்படுத்தும் மருந்துகளில் கார்டி கோஸ்டீரோய்டுகளுக்கு முக்கிய இடம் உண்டு. மாத்திரைகளாக எடுக்கும்போது, ஸ்டீரோய்டு உடலில் அதிக அளவில் உறிஞ்சப்படுவதால் சர்க்கரைநோய், நோய் எதிர்ப்புச் சக்திக் குறைபாடு, கண்களில் உயர் அழுத்தம் (Glaucoma) போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தும்.

### பக்க விளைவிலிருந்து பாதுகாத்துக்கொள்ள...

- உடனடி தீர்வுக்காக ஓவர் டோசேஜ் எடுக்கக் கூடாது.
- எதையுமே இன்ஸ்டன்ட்டாக எதிர்பார்ப்பவர்கள், நோய்களுக்கும் உடனடித் தீர்வு எதிர்பார்த்து ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு மருத்துவரிடம் செல்வார்கள். இது தவறு.
- அலோபதி அல்லாமல் இயற்கை மருத்துவமாகவே இருந்தாலும், அதிலும் ஒரு கட்டுப்பாடு அவசியம். ஹோமியோபதி, சித்தா, ஆயுர்வேதம் எனக் கலவை மருத்துவத்தைத் தவிர்க்கலாம்.
- 40 வயதில் இருப்பவருக்கு இரண்டு மாத்திரை என்றால் 20 வயதுடையவருக்கு ஒரு மாத்திரை தரலாம் என நாமே முடிவுசெய்து ஒருவருக்கு வாங்கும் மருந்தை இன்னொருவருக்கு பகிரக் கூடாது. அறிகுறிகள் ஒரே மாதிரி தோன்றினாலும், நோய் உடலுக்கு உடல் மாறுபடும்.
- மருந்து டப்பாக்களில் அவற்றைப் பற்றிக் கொடுத்திருக்கும் விவரங்களைச் சரியாகப் படித்து அல்லது படிக்கச் சொல்லிப் புரிந்துகொண்டு அதற்கேற்ற முறையில் மருந்துகளை எடுத்துக்கொள்ளுங்கள்.
- சர்க்கரைநோய், ரத்த அழுத்தம், தைரோய்ட், மனநோய்கள் ஆகியவற்றுக்குத் தொடர்ந்து மாத்திரை எடுத்துக்கொள்பவர்கள், குறிப்பிட்ட கால அளவில் மருத்துவமனைக்குச் சென்று சர்க்கரை அளவு, ரத்த அழுத்தம், சிறுநீரகச் செயல்பாடு, கல்லீரல் செயல்பாடு ஆகியவற்றைப் பரிசோதனை செய்து அதற்கேற்ப மருத்துவர்கள் கொடுக்கும் மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.




நடிப்பு: அதிதி பாலன், அஞ்சலி வரதன், கவிதா பாரதி, லட்சுமி கோபால்சாமி, பிரதீப் அந்தோணி.
ஒளிப்பதிவு: ஷெல்லி காலிஸ்ட்
இசை: பிந்து மாலினி, வேதாந்த் பரத்வாஜ்
தயாரிப்பு: ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ்
இயக்கம்: அருண் பிரபு புருஷோத்தமன்

அருவிக்கு மிகவும் அழகான குடும்பம். அன்பான அம்மா, அக்கறையான தந்தை, நட்பான தம்பி, பாசத்துக்குரிய தோழிகள். இப்படி சந்தோஷ வானில் சிறகடித்துப் பறக்கும் அருவியின் வாழ்க்கையில், திடீரென்று பேரிடியாக வந்து இறங்குகிறது, எய்ட்ஸ் என்னும் கொடூர வியாதி. எந்த தவறும் செய்யாமல் இப்படியொரு நோயின் பிடியில் சிக்கும் அருவியை இந்த சமூகம் தவறானவளாகவே பார்க்கிறது. ஆசையாய் வளர்த்த அவளது குடும்பம் கூட, நடத்தை கெட்டவள் என்ற பட்டம் கொடுத்து, வீட்டை விட்டே அவள் துரத்தப்படுகிறாள். பிறகு இந்த சமூகத்திலுள்ள அழுக்கு மனிதர்களின் காம இச்சைகளுக்குப் பலியாகிறாள். பிறகு வேதனையின் உச்சக்கட்டத்தில், திருநங்கை தோழி ஒருவரிடம் அடைக்கலமாகிறாள்.

மரணம் தன்னை நெருங்குவதை உணரும் அருவி, இந்த சமூகத்தின் மீது தனது அழுத்தமான கேள்விக்கணைகளை வீசிச் செல்வதுதான், பரபரப்பான க்ளைமாக்ஸ். அருவி வேடத்தில், அதிதி பாலன். இனி அவரை, அருவி அதிதி என்றே அழைக்கலாம். அந்த அளவுக்கு அருவியாகவே வாழ்ந்து அசத்தியிருக்கிறார். தோழிகளுடன் சின்னச்சின்ன குறும்பு, வீட்டில் சின்னச்சின்ன சேட்டை, தோள் பையை இறுக்கிப் பிடித்துக்கொள்கிற கரம், கோபம் வந்தால் தலைமுடியை அள்ளிச்செருகும் குணம் என, பதின்ம வயது பெண்ணின் அத்தனை மேனரிசங்களையும் அட்டகாசமாகப் பதிவு செய்திருக்கிறார். போலீஸ் விசாரணையில் அவ்வப்போது அரும்பும் வெறுப்புப் புன்னகை, 'வெளியில போடா' என போலீசையே தூரத்தும் துணிச்சல் என, அருவி பொங்கிப் பெருவெள்ளமாக மாறும்போது வியக்க வைக்கிறார்.

100 படங்களில் நடித்தது போன்ற அனுபவத்தை, தன் முதல் படத்திலேயே கொடுத்திருக்கிறார் அதிதி பாலன். தமிழ் சினிமாவில் விருது கொடுத்து வரவேற்க வேண்டிய நம்பிக்கை வரவு. தொலைக்காட்சி நிகழ்ச்சியை, அருவி தான் கேட்கும் கேள்விக்கான தளமாகத் தேர்வு செய்வதும்; அந்த நிகழ்ச்சியை கிண்டல் செய்வதுடன், அதன் வழியாக இந்தச் சமூகத்தை அவள் சாடுகின்ற ஒவ்வொரு காட்சியும் கைதட்டலை அள்ளுகிறது. இன்று வியாபாரமாகி விட்ட வாழ்க்கைச் சூழலை ஒரே டேக்கில் மூச்சுவிடாமல் அருவி என்கிற அதிதி பேசும்போது, தியேட்டரில் எழுந்து நின்று கைதட்டுகிறார்கள்.

ஒரு அப்பாவியிடம், 'நீ மாவோயிஸ்டா? எந்த பேட்ச், எந்த குரூப், எங்கே டிரெய்னிங்?' என்று கேள்வி கேட்கும் அரசையும், அதிரடி கேள்விக்கணைகளால் துளைத்தெடுக்கிறது படம். டி.வி தொகுப்பாளர் லட்சுமி கோபால்சாமி, நிகழ்ச்சி இயக்குனர் கவிதா பாரதி, துணை இயக்குனர் பிரதீப் அந்தோணி, திருநங்கை அஞ்சலி வரதன், போலீஸ் அதிகாரி முகமது அலி பாக் என, அனைவரும் அந்தந்த கேரக்டர்களாகவே மாறியிருக்கிறார்கள். பிந்து மாலினி, வேதாந்த் பரத்வாஜின் பின்னணி இசை, கதையை நம் இதயத்திற்குள் ஆழமாக இறக்கி வைக்கிறது. ஷெல்லி காலிஸ்டின் ஒளிப்பதிவு அருவியின் அழகையும், வாழ்க்கையையும் துல்லியமாகப் பதிவு செய்திருக்கிறது. குறிப்பாக, படத்தின் காட்சிகளுக்கான வண்ணங்கள் சிறந்த தேர்வு.

அருவியின் நோய் பற்றிய சஸ்பென்சைக் காப்பாற்றுவதற்காக, ஆரம்பத்தில் அதை மறைப்பதால், அருவிக்கு என்னாயிற்று? அவள் ஏன் வீட்டிலிருந்து துரத்தப்படுகிறாள் என்பதில் ரசிகர்களுக்கு குழப்பம் ஏற்படுகிறது. அத்தனை தீர்க்கமான அருவிக்குள் சிகரெட் பழக்கமும், மதுப்பழக்கமும் எப்படி நுழைகிறது என்பதற்கு விளக்கம் இல்லை. தன்மீதான பாலியல் வன்முறைக்கு அருவி எதிர்ப்பு காட்டினாளா என்பது குறித்தும் தெளிவுபடுத்தவில்லை. க்ளைமாக்சில் அத்தனைபேரும் திருந்துவது, அக்மார்க் சினிமாத்தனம். இதுபோன்ற குறைகள் இருந்தாலும், அருவி, தமிழ்ச் சினிமாவில் பாய்ந்தோடும் பேரருவி.

## அருவி குழுவுக்கு ரஜினி பாராட்டு

சமீபத்தில் வெளியாகி வரவேற்பை பெற்றுவருகிறது அருவி படம். அருண் பிரபு புருஷோத்தமன் இயக்கினார். அதீதி பாலன் கதையின் நாயகியாக நடித்தார். அருவிக்கு பல பக்கங்களிலுமிருந்து பாராட்டுக்கள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த படம் ரஜினிகாந்திற்கும் நன்றாக பிடித்து விட்டது. படத்தை பார்த்ததும், இயக்குனரை தொலைபேசியில் அழைத்து பாராட்டினார். பின்னர் தனது வீட்டிற்கு தயாரிப்பாளர், இயக்குனர், அதீதி பாலனை வரவழைத்து பாராட்டினார். இயக்குனருக்கும், அதீதி பாலனிற்கும் தங்க சங்கிலி பரிசளித்தார். அருவி தன்னை சிரிக்க வைத்தது, அழ வைத்தது, யோசிக்க வைத்தது என்றுள்ளார் ரஜினிகாந்த். தமிழ் சினிமாவின் முக்கிய இயக்குனராக வருவார் என அருண் பிரபு புருஷோத்தமனை பாராட்டினார். அதீதியின் நடிப்பையும் பாராட்டி, தொடர்ந்து நல்ல படங்களில் நடிக்க வேண்டுமென கூறினார். இயக்குனர் தயாரித்து வரும் படங்கள் பற்றிய விபரத்தையும் கேட்டறிந்து கொண்டார்.

## ஜனனியை அழகாக காட்ட வேண்டுமாம்!

தமிழ் சினிமாவில் அவ்வளவாக வாய்ப்பு கிடைக்காமல் தவித்து வந்த ஜனனி ஐயருக்கு இந்த வருட முடிவு நன்றாகவே அமைந்துள்ளது. பலூன், விதி மதி உல்டா என இரண்டு படங்கள் வெளியாகியுள்ளன. பலூனில் சிறிய காட்சியில்தான் வருகிறார். ஆனாலும் முக்கிய காட்சியென்பதால் ஓகே சொன்னேன் என்கிறார். பாலாவின் "அவன் இவன்"தான் ஜனனி நாயகியாக நடித்த முதல் படம். பாலாவின் இயக்கத்தில் நடித்ததை மறக்க முடியாதென்கிறார். அதுபோல, கௌதம் வாசுதேவ் மேனன் படத்தில் நடிக்கவும் ஆசையுள்ளதாம். "உங்கள் படத்தில் என்னை ஹீரோயினாக நடிக்க வைத்து நிறைய லைக்ஸ் வாங்கித் தாருங்கள்" என பகிரங்கமாகவே கேட்டுள்ளார். கௌதம் வாசுதேவ் மேனன் தனது படங்களில் நாயகிகளை அழகாக காட்டுவார். கௌதமின் படங்களில் ஜனனி ஐயர் நடிக்க விரும்புவதற்கு இதுதானாம் காரணம்!

## காமசூத்ரா நாட்டில் முத்தத்திற்கு தடையா?

காமசூத்ரா எழுதப்பட்ட நாட்டில் முத்தக்காட்சியுடன் ஒரு படம் வரலாமா என்ற பயத்துடன் இருப்பதாக நடிகர் அரவிந்த்சாமி கூறியுள்ளார். "இந்தியாவில் 2000 வருடங்களின் முன்னர் காமசூத்ரா எழுதப்பட்டது. அது பாலுணர்வு சம்பந்தப்பட்ட இலக்கியம். அதே நாட்டில் 2000 வருடம் கழித்து முத்தக்காட்சியுடன் ஒரு படம் வெளியானால், தணிக்கை பிரச்சனை வருமா என பயப்பட வேண்டியுள்ளது. சில கமர்ஷியல் படங்களில் பெண்களிற்கு எதிரான வன்முறைகள் அப்பட்டமாக படமாக்கப்பட்டுள்ளன. மக்களிடம் சகிப்புதன்மை குறைந்து வருகிறது. கார்ட்டூன், சினிமா, இலக்கியம் அனைத்திலும் கருத்து சுதந்திரம் ஒடுக்கப்படுகிறது. படைப்பாளிகள் கைது, கொலை மிரட்டல் என தொடர்ந்து கொண்டிருக்கிறது. இது நல்லதல்ல" என்றார்.

## அடா சர்மாவின் ஆபாச ஆடை!

அடா சர்மா தெலுங்கு சினிமாவில் மிக பிரபலம். ஐயிற்றம் நடிகைகளில் முன்னணியில் இருக்கிறார். சிம்புவின் "இது நம்ம ஆளு" படத்திலும் குத்தாட்டம் போட்டிருந்தார். சமீபத்தில் தனது ருவிற்றர் பக்கத்தில், நடன வீடியோ ஒன்றை பதிவேற்றியிருந்தார். அவர் அணிந்திருந்த ஆடையே அரைகுறையாகத்தான் இருந்தது. நடனத்தின்போது அது விலகி ஆபாசமாக இருந்தது. இதையடுத்து ருவிற்றரில் பலரும் அவரை கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.



# வண்ணத் திரை

## காஜலின் நிர்வாண படம்

தமிழ் சினிமாவில் இப்பொழுதும் முன்னணி நாயகியாக விளங்குகிறார் காஜல் அகர்வால். தமிழின் முன்னணி நாயகர்களின் முதல் தேர்வில் இருப்பவர், தற்போது குயின் படத்தின் ரீமேக்கில் நடித்து வருகிறார். கல்யாண்ராம் ஜோடியாக எம்.எல்.ஏ என்ற தெலுங்கு படத்திலும் நடித்து வருகிறார். இந்த நிலையில் காஜல் அகர்வால் மேலாடை அணியாத புகைப்படம் ஒன்று சமூக வலைத்தளங்களில் பரவலாகி வருகிறது. இது இந்த படங்களில் எடுக்கப்பட்ட படம் அல்லவென விசமறிந்தவர்கள் சொல்கிறார்கள். சில மாதங்களின் முன் பத்திரிகையொன்றிற்கு காஜல் மேலாடை அணியாம் போஸ் கொடுத்ததாக செய்தி வெளியாகியிருந்தது. அந்த புகைப்படமாக இருக்கலாமென்கிறார்கள்.

## பிந்து மாதவி ஒருபடி மேலே!

பிக்பாஸில் கலந்துகொண்ட ஹரிஷ் கல்யாணும், பிந்து மாதவியும் சமீபத்தில் ஒன்றாக கோயிலுக்கு சென்றிருந்தனர். ஹரிஷ் எனது நல்ல நண்பர் என்றும் சமீபத்தில் பிந்து மாதவி கூறியிருந்தார். புகழேந்தி என்ற நான் படத்தில் பிந்து மாதவி கமிட்டாகியுள்ளார். ஹரிஷ் கல்யாணும், இன்னொரு பிக்பாஸ் பிரபலமுமான ரைசாவும் இன்னொரு படத்தில் கமிட்டாகியுள்ளனர். பிந்து மாதவி, ரைசா இருவரில் யார் உங்களிற்கு நெருக்கமான நண்பியென ஹரிஷிடம் கேட்டதற்கு, "இருவருமே நல்ல நண்பிகள்தான். ஆனால் பிந்து ஒரு படி மேலே. அவருடன் அதிக நாள் பழகியுள்ளேன். அதனால் அவர் நெருக்கமான தோழி" என பதிலளித்துள்ளார்.

## வந்திட்டிருக்கார் அர்ஜுன் ரெட்டி!

அர்ஜுன் ரெட்டி தெலுங்கு படத்தின் மூலம் தமிழர்களிற்கும் அறிமுகமானவராகி விட்டார் விஜய் தெவரகொன்டா. இந்த ஆண்டில் பெரும் வெற்றிபெற்ற தெலுங்குப்படத்தில் அர்ஜுன் ரெட்டியும் ஒன்று. விஜய் தெவரகொன்டாவின் நடிப்பு பரவலாக பாராட்டப்பட்டது. கடந்த வருடம் வெளியான பெல்லி சூப்புலு தான் இவர் நாயகனாக நடித்த முதல் படம். அதுவும் மெஹா ஹிட். இந்த வெற்றிகளை தொடர்ந்து மூன்று தெலுங்கு படங்களில் நாயகனாக நடிக்கிறார். இதற்குள் தமிழிலும் அறிமுகமாகவுள்ளார். அரிமாநம்பி, இருமுகன் படங்களிற்கு பின்னர் ஆனந்த சங்கர் இயக்கவுள்ள படத்தில் விஜய் தெவரகொன்டாதான் நாயகன். தனது ருவிற்றர் பக்கத்தில் "வந்திட்டிருக்கேன்" என விஜய் தெவரகொன்டா பதிவிட்டுள்ளார்.

## அஞ்சலி நடிக்க வந்து பத்தாண்டு!

அஞ்சலி சினிமாவிற்கு வந்து இந்த ஆண்டுடன் பத்து ஆண்டுகளாகியுள்ளது. இப்போதைக்கு சினிமாவில் இருந்து ஒதுங்கும் எண்ணமில்லையென கூறியுள்ளார். நடிகையாகவும், நட்சத்திரமாகவும் இன்னும் என்னை உயர்த்திக்கொள்வேன். இதற்காக இன்னும் சில வருடங்கள் கடுமையாக உழைப்பேன் என்றுள்ளார். வெளியாகியுள்ள பலூன் திரைப்படம் தெலுங்கில் 100 இற்கும் அதிகமான தியேட்டர்களில் ரிலீசாகிறது. இது அஞ்சலியை இன்னும் உற்சாகமாக்கியுள்ளது. அவரது உடல் எடையை குறைத்தால் இன்னும் ஒரு ரவுண்ட் வரலாமென நெருக்கமானவர்கள் சொன்ன அறிவுரையை கேட்டு, உடல் எடையை குறைக்க பயிற்சிகளை ஆரம்பித்துள்ளார்.

## இந்த ஆண்டின் சிறந்த படம் விக்ரம் வேதா

இணையத்தளங்களில் படங்களை பற்றிய தகவல்களை கொடுப்பதில் மிவிஞ்ரிபி இணையத்தளம் முக்கியமானது. 2017ம் ஆண்டிற்கான சிறந்த பத்து இந்திய திரைப்படங்களை பட்டியலிட்டுள்ளது. பத்தாம் இடத்தில் "தி கிரேட் பாதர்" (மலையாளம்), ஒன்பதாம் இடத்தில் "மெர்சல்", எட்டாம் இடத்தில் "ஜாலி எல்.எல்.பி 2" (இந்தி), ஏழாம் இடத்தில் "டாய்லெட் ஏக் பிரேம கதா" (இந்தி), ஆறாம் இடத்தில் "தி காஸி அட்டாக்" (இந்தி), ஐந்தாவது இடத்தில் "இந்தி மீடியம்" (இந்தி), நான்காவது இடத்தில் "சீக்ரெட் சூப்பர்ஸ்டார்" (இந்தி), மூன்றாமிடத்தில் "அர்ஜுன் ரெட்டி" (தெலுங்கு), இரண்டாமிடத்தில் பாகுபலி 2, முதலாமிடத்தில் விக்ரம் வேதா என்பன பட்டியல்படுத்தப்பட்டுள்ளன. மாதவன், விஜய் சேதுபதி நடித்த விக்ரம் வேதா தமிழில் பெரு வரவேற்பை பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.



## அமலாபாலுடன் சினேகா


பொலிவுட்டிலிருந்து தமிழ், தெலுங்கிற்கு வந்தவர் சினேகா உல்லால். தமிழில் ஒரு சில படங்களிற்கு பின்னர் வாய்ப்பு கிடைக்கவில்லை. அதனால் மும்பைக்கே மூட்டை கட்டினார். இப்பொழுது நீண்ட இடைவெளியின் பின்னர் மீண்டும் நடிக்க வருகிறார். சரண்தேஜ் இயக்கும் தெலுங்குப்படமொன்றில் ஒப்பந்தமாகியுள்ளார். இவருடன் இன்னொரு நாயகியாக அமலாபாலும் நடிக்கிறார். சர்ச்சைக்குரிய விசயமொன்றை படமாக்குகிறார்களாம். தமிழ், இந்தியிலும் படம் செய்ய திட்டமிட்டுள்ளனர்.

## நிமிர்ந்து பார்க்க வைக்கும் விஜயகாந்த் மகன்

விஜயகாந்த் மகன் சண்முக பாண்டியன் நடிக்கும் மதுரவீரன் படத்தின் ஓடியோ ரிலீஸ் சமீபத்தில் நடந்தது. இதில் விஜயகாந்த் கலந்துகொண்டு பேசினார். "என் மகன் மிக உயரமாக இருக்கிறான், நிமிர்ந்து பார்த்துதான் பேச வேண்டியிருக்கிறது என்கிறார்கள். என் மகனை பற்றி யாரும் குறை கூறவில்லை" என்றார். பின்னர் பேசிய பிரேமலதா விஜயகாந்த், "இந்த கதையை நான்தான் முதலில் கேட்டேன். எனக்கு கதை பிடித்திருந்தது. கதையை பற்றி கேப்டனிடம் சொன்னதும், உடனே தான் கதை கேட்க வேண்டுமென்றார். அதற்கு காரணம், படத்தில் ஜல்லிகட்டு பற்றிய கதையுள்ளது. ஜல்லிக்கட்டிற்காக இளைஞர்கள் போராடினார்கள். கண்டிப்பாக இந்த படம் வெற்றிபெறும்" என்றார்.

## சினிமா கிரிக்கெட்டில் குழப்பம்!

இந்திய அளவில் சினிமா நட்சத்திரங்களிற்கு இடையில் நடத்தப்படும் சிசிஎல் கிரிக்கெட் போட்டியில் கோலிவுட் சார்பில் விளையாடும் விக்ராந்த், விஷ்ணு ஆகியோர் விலகுவதாக அறிவித்துள்ளனர். போட்டியின் போது அவர்களிற்கு மரியாதை கொடுக்கப்படாததையடுத்தே இந்த முடிவை எடுத்ததாக முதலில் அறிவித்தனர். இதுபற்றி விஸ்ணு பின்னர் விளக்கமளித்தார். "இந்த முடிவை நானும் விக்ராந்தும் சேர்ந்துதான் எடுத்தோம். எம்மை நிருபிக்கும்படி ஓடியன்ஸ் கேட்டால் பரவாயில்லை. ஆனால் ஒரு சிலர் சொல்வதற்காக எம்மை நிருபிக்க வேண்டிய அவசியமில்லை. மூன்றுநாள் பயிற்சி கொடுத்துவிட்டு விளையாடுங்கள் என்றால் எப்படி முடியும்? இதுபோன்ற பல காரணங்களிற்காக விலகிவிட்டோம்" என்றார்.




# சபிக்கப்பட்ட பயணம் 1939

மருதன்

கனவொன்று உயிர்பெற்று மிதந்து வந்தது போல் இருந்தது. பிரமாண்டமாகவும் பளபளப்பாகவும் இருந்த

அந்தக் கப்பலுக்குள் தயக்கத்துடன் நுழைந்தார் 15 வயது இளம்பெண் ஜிசெலா ஃபெல்ட்மென். முதல் பெரும் பயணம் என்றாலும் அவர் நடையில் துள்ளல் இல்லை. கண்களில் பூரிப்போ நிறைவோ இல்லை. ஜிசெலாவின் தங்கை அவருக்குப் பின்னால் தயங்கித் தயங்கி வந்துகொண்டிருந்தார். அவருக்கும் பின்னால் அவர்களின் அம்மா. அவர் முகம் வெளிறியிருந்ததைக் காணும்போது ஜிசெலாவின் அச்சம் மேலும் அதிகரித்தது. அச்சங்களிலிருந்தும் துயரங்களிலிருந்தும் விடுவித்து நிம்மதியான ஓரிடத்துக்குக் கொண்டு சேர்க்கும் திறன் இருக்கிறதா இந்தக் கப்பலுக்கு?

அந்தக் கப்பலின் பெயர் எஸ்.எஸ் செயின்ட் லூயிஸ். கண்டம் விட்டுக் கண்டம் செல்லும் சொகுசுக் கப்பல் அது. ஹேம்பர்க் துறைமுகத்திலிருந்து நியூயோர்க், கானரி தீவுகள், மொராக்கோ என்று பல இடங்களுக்கு ஜெர்மனியர்களை அது அழைத்துச் சென்றிருக்கிறது. ஆனால், 13 மே 1939 அன்று அந்தக் கப்பல் ஒரு புதிய திசை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது. இது வழக்கமான மற்றுமொரு பயணம் அல்ல என்பது அந்தக் கப்பலில் பணிபுரிந்தவர்களுக்கு நன்கு தெரியும். இந்தமுறை அவர்கள் ஒரு பொறுப்புமிக்க பணியைச் செய்தாக வேண்டும். முதலில் க்யூபா செல்ல வேண்டும். பிறகு அங்கிருந்து அமெரிக்கா சென்று கப்பலில் உள்ள யூதர்களைப் பத்திரமாக இறக்கிவிட வேண்டும்.

ஜிசெலா வியப்புடன் சுற்றிப் பார்த்தபடி நடந்துகொண்டிருந்தார். பெரிய உணவுக்கூடங்கள் தென்பட்டன. ஹோட்டலில் இருப்பதைப் போன்றபெரியசொகுசு அறைகளையும் அவர் கடந்துசென்றார். இன்னும் சற்று தள்ளி ஓரிடத்தில் திரைப்படம் ஓடிக்கொண்டிருந்தது. அதைவிடவும் ஆச்சர்யம், உள்ளுக்குள்ளே ஒரு நீச்சல் குளமும் இருந்தது. இது அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்லும் கப்பலா அல்லது அமெரிக்காவேதானா?

தங்களை வழியனுப்ப வந்த உறவினர்களும் நண்பர்களும் வெடித்து அழுதது திடீரென்று நினைவுக்குவந்தது. கொஞ்சம் புதிராகவும் இருந்தது. இளகிய மனம் கொண்டவர்கள் இப்படிப்பட்ட பிரிவுத் தருணங்களில் கண் கலங்குவது இயல்புதான். ஆனால், இப்படியா பெருங்குரலெடுத்து அழுவார்கள்? ஒரு சிலர் என்றால் பரவாயில்லை, கப்பலில் உள்ள மற்றவர்களின் உறவினர்களும்கூட ஒன்றுபோலவே அழுதுகொண்டிருந்தது ஏன்? இனி இவர்களைக் காணவே முடியாது என்று நினைத்து இறுதிவிடை கொடுத்து அனுப்பிவிட்டார்களா?

இந்தக் கப்பலுக்குள் நுழைந்து பார்த்திருந்தால் அவர்கள் நிச்சயம் கலங்கியிருக்க மாட்டார்கள் என்று தோன்றியது. மாறாக, அவர்களுக்குப் பொறாமைதான் தோன்றியிருக்கும். இருள் படர்ந்துகிடக்கும் ஜெர்மனியிலிருந்து நம்மையும் ஒரு கப்பல் மீட்டெடுக்குமா என்று அவர்கள் ஏங்க ஆரம்பிப்பார்கள். யார் கண்டது? இந்தக் கப்பல் எங்களை இறக்கிவிட்ட பிறகு மீண்டும் ஜெர்மனி திரும்பி மேலும் பல ஜெர்மனியர்களை அழைத்துவரலாம். அந்தக் கப்பலில் என் உறவினர்களும் நண்பர்களும் இருக்கலாம். இதே போன்ற இன்னொரு கப்பல் போலந்திலிருந்து என் அப்பாவையும் கொண்டுவந்து அமெரிக்காவில் சேர்க்கலாம். எல்லாக் கவலைகளையும் மறந்துவிட்டு ஒரு புதிய வாழ்வை அமெரிக்காவில் மீண்டும் தொடங்கலாம். நிச்சயம் அம்மாவின் முகம் மீண்டும் மலரும்.

ஜிசெலாவின் அம்மா பெர்லினிலேயே தனக்கும் தன் இரு மகள்களுக்கும் சேர்த்து க்யூபாவுக்கான விசாவை முன்கூட்டியே வாங்கி வைத்திருந்தார். அமெரிக்கா செல்வதற்கான விசாவை க்யூபா சென்றபிறகுதான் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். அவருடைய கைப்பையில் பத்து ஜெர்மனிய மார்க்குகள் இருந்தன. தன்னுடைய உள்ளாடையில் இருநூறு மார்க்குகளை அவர் மறைத்து வைத்திருந்தார். இது அவருக்கும் ஜிசெலாவுக்கும் மட்டுமே தெரிந்த ரகசியம். அமெரிக்காவில் புது வாழ்வைத் தொடங்குவதற்கு இது ஒரு முதலீடாக இருக்கட்டும்.

ஜெர்மனி யூதர்களுக்கு விடை கொடுக்க ஆரம்பித்து வெகுகாலம் ஆகியிருந்தது. 'இனி இது என் தாய்நாடல்ல, நான் ஓர் அகதி' என்பதை உணர்ந்த மறுகணமே யூதர்கள் வெளியேற ஆரம்பித்துவிட்டார்கள். அப்படி வெளியேறாவிட்டால் என்ன நடக்கும் என்று அவர்களுக்குத் தெரியும். 28 அக்டோபர் 1938 அன்று நள்ளிரவு ஜிசெலாவின் வீட்டுக் கதவைத் தட்டி உள்ளே புகுந்த நாஜிக்கள் ஜிசெலாவின் அப்பாவைத் தரதரவென்று இழுத்துச் சென்றுவிட்டனர். அவர் யூதராக இருந்தது முதல் குற்றம் எனில், இரண்டாவது குற்றம் அவர் போலந்து நாட்டுக்காரராகவும் இருந்தது. "ஜெர்மனி ஜெர்மானியர்களுக்கானது மட்டுமே. யூதர்களுக்கு இடமில்லை" என்று சொல்லி அவரைக் கையோடு போலந்துக்கு நாடு கடத்தினர். அதற்குப் பிறகுதான் நாஜிக்கள் தங்கள் தவற்றை உணர்ந்துகொண்டனர். யார் வேண்டுமானாலும் யூதர்களை விரட்டியடிக்க முடியும். ஹிட்லர் விரட்டுபவர் அல்லர்; அழிப்பவர். யூதர்கள் இல்லாத ஜெர்மனியல்ல, யூதர்கள் இல்லாத பூமிப்பந்தே அவர் விரும்புவது.

1939 தொடங்கும்போதே ஜெர்மனியின் எல்லைகளை இழுத்து மூடும்படி உத்தரவு பிறப்பித்துவிட்டார் ஹிட்லர். கிட்டத்தட்ட அதே சமயத்தில் ஜெர்மனியை ஒட்டியுள்ள நாடுகளும் தங்களுடைய எல்லைகளை அடைத்துக்கொண்டுவிட்டன. ஹிட்லரின் நோக்கம், யூதர்கள் தப்பிவிடாமல் பிடித்து அவர்களை வதை முகாம்களில் அடைத்து அழிப்பது. என்னதான் காவல் பலப்படுத்தப்பட்டிருந்தாலும் யூதர்கள் அங்கும் இங்குமாகச் சந்துகளைக் கண்டுபிடித்து நழுவிக்கொண்டுதானிருந்தார்கள். 1938 முதல் 1939 வரை இரு ஆண்டுகளில் மட்டும் ஐம்பது சதவிகித யூதர்கள் ஜெர்மனியிலிருந்து தப்பிவிட்டனர். இப்படித்தப்பியோடும் யூதர்கள் அருகிலுள்ள நாடுகளில்தான் அடைக்கலம் புகுந்தனர். தொடக்கத்தில் வாசலைத் திறந்து அவர்களை வரவேற்ற நாடுகள், பின்னர் தங்கள் அணுகுமுறையை மாற்றிக்கொண்டன. ஜெர்மனிய யூதர்கள் ஜெர்மனியின் பிரத்தியேகப் பிரச்னையல்லவா? எனவே, வருபவர்கள் எல்லோரையும் அனுமதிப்பதற்குப் பதில் ஒரு வரையறையை நிர்ணயித்துக்கொண்டு இத்தனை தலைகள் மட்டுமே என்று எல்லையை இழுத்துப் பிடித்துக்கொண்டன பல நாடுகள்.


குஸ்தாவ் ஷ்ரோடர்


ஜிசெலா ஃபெல்ட்மென்

அதே கப்பலில் ஜெரால்ட் கிரான்ஸ்டன் என்னும் ஆறு வயதுச் சிறுவனும் தன் அப்பாவுடன் அமர்ந்திருந்தான்.

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

ஜெரால்டுக்கு க்யூபாவும் தெரியாது, அமெரிக்காவும் தெரியாது. யூதர்கள், அகதிகள், நாஜிக்கள் ஒன்றுக்கும் பொருள் தெரியாது. இந்த ஊர் வேண்டாம், நாம் வேறிடம் போகலாம் என்று அப்பா கைபிடித்து அழைத்துச் சென்று புனித லூயிஸ் கப்பலில் ஏற்றி விட்டபோது, ஜெரால்ட் கண்கள் விரிய ஆச்சரியப்பட்டான். கப்பலில் கிடைத்த வகை வகையான தின்பண்டங்களும் மாலை நேரங்களில் நடைபெற்ற நடனங்களும் திரையிடப்பட்ட சினிமாக்களும் ஜெரால்டைக் கவர்ந்திழுத்தன. இரண்டு வாரங்கள் இந்தக் கப்பலில் சென்றாக வேண்டும் என்று அப்பா சொல்லியிருந்ததை நினைத்து அவன் வருந்தினான். இன்னும் சில வாரங்கள் கூடுதலாக இதில் இருக்கமுடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

மொத்தம் அந்தக் கப்பலில் 900க்கும் அதிகமான ஜெர்மனிய யூதர்கள் இருந்தனர். கப்பலின் கப்டன் குஸ்தாவ் ஷ்ரோடர் பயணிகளின் உணர்வுகளை நன்கு அறிந்துவைத்திருந்தார். இது சாதாரணப் பயணமல்ல, பாவம் யூதர்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தப்பிவந்திருக்கிறார்கள், இவர்களிடம் இதமாக நடந்து கொள்ளுங்கள் என்று பணியாளர்களுக்கு அவர் அறிவுறுத்தியிருந்தார். வெள்ளிக்கிழமைகளில், கப்பலில் யூதர்கள் பிரார்த்தனை செய்துகொள்ளவும் ஏற்பாடுகள் செய்திருந்தார். நீச்சல் குளங்களில் குழந்தைகளும் பெரியவர்களும் தங்கள் கவலைகளை மறந்து நீந்திக்கொண்டிருப்பதைக் கண்டு மகிழ்ந்தார். ஒரு ஜெர்மனியரான அவர் இதில் எதுவொன்றையும் ஜெர்மனியின் மண்ணில் அனுமதித்திருக்க முடியாது. மீறினால் தண்டனை உறுதி என்று அவருக்குத் தெரியும். இது ஜெர்மனியக் கப்பல். ஆனால், இதைச் செலுத்திக் கொண்டிருப்பவர் ஹிட்லரல்ல, நான். என் கட்டுப்பாட்டில் இருக்கும்வரை யூதர்கள் இங்கே மனிதர்களாக மட்டுமே நடத்தப்படுவார்கள். அதனால் தான், வழிபாட்டுக்கு யூதர்கள் ஒன்று கூடும்போது வரவேற்பறையில் மாட்டப்பட்டிருந்த ஹிட்லரின் உருவப்படத்தை அகற்றிவைத்தார் குஸ்தாவ். வேறோரிடத்தில் இருந்த ஹிட்லரின் மார்பளவுச் சிலை துணி கொண்டு மூடப்பட்டிருந்தது.

மே 27ம் திகதி கப்பல் க்யூபாவை வந்தடைந்தது. ஜெரால்ட்டின் அப்பா மூட்டை முடிச்சுகளோடு தயாரானார். ஜிசெலாவின் குடும்பம் கப்பலை விட்டுப் பிரிய மனமில்லாமல் எழுந்து கொண்டது. கப்பலில் இருந்த எல்லோருடைய மனநிலையும் கிட்டத்தட்ட இதுதான் ஒருபெரிய இடைவெளிக்குப் பிறகு சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும், மிக முக்கியமாக இயல்பாகவும் அவர்களால் கப்பலில் வாழமுடிந்தது. இந்த வாழ்க்கை அமெரிக்காவில் கிடைக்க வேண்டும் என்பதே அவர்கள் அத்தனை பேரின் ஒற்றைப் பிரார்த்தனை.

க்யூப அதிகாரிகளுடன் உரையாடி விட்டுத் திரும்பிய குஸ்தாவின் முகம் இறுகிக் கிடப்பதைப் பார்த்ததும் பயணிகளின் கனவு சட்டென்று வடிந்துபோனது. "காத்திருங்கள், அனுமதி கிடைக்கும்" என்று அமைதிப்படுத்தினார் குஸ்தாவ். அடுத்த ஏழு நாள்களும் அவர்கள் அமைதியாகத்தான் காத்திருந்தனர். இறுதிவரை அமெரிக்க விசா கிடைக்கவேயில்லை. "அப்பா, எப்போது இறங்குவோம்" என்றான் ஜெரால்ட். நீச்சல்குளமும் திரைப்படமும் நடனமும் அலுக்க ஆரம்பித்துவிட்டது ஜிசெலாவுக்கு. ஏதேனும் சிக்கலா? பலர் அழ ஆரம்பித்துவிட்டனர். குஸ்தாவ் நிதானமிழக்காமல் பேசினார். "சிக்கல் தான். க்யூபா நம்மைத் தரையிறங்க அனுமதிக்கவில்லை. அமெரிக்காவிடமிருந்து விசா பெறுவது சாத்தியமில்லை என்று சொல்லிவிட்டார்கள். பயப்பட வேண்டாம். நாம் நேராக அமெரிக்காவுக்கே சென்று விசா பெற்றுக் கொண்டுவிடலாம். நம்முடைய அடுத்த நிறுத்தம் ஃபுளோரிடா."

பயணம் ஆரம்பமானது. அதுவரை இருந்த உற்சாகம் காணாமல் போய் விட்டதை உணர்ந்தார் ஜிசெலா. அம்மா மட்டுமன்று, விதிவிலக்கில்லாமல் எல்லோருடைய முகங்களும் வாடிப்போயிருந்தன. குழந்தைகள் எங்கிருந்து, என்ன தெரிந்து கொண்டார்களோ தெரியவில்லை, அவர்களுடைய கூச்சலும்கூடக் குறைந்து விட்டது. நேரத்தைப் பிடித்துப் பிடித்துத் தள்ளியபடி ஒரு வழியாக அமெரிக்காவை வந்தடைந்தது கப்பல். மீண்டும் அனைவரும் உற்சாகத்துடன் தயாரானார்கள். வழக்கம்போல் குஸ்தாவ் முதலில் இறங்கி அமெரிக்க அதிகாரிகளுடன் உரையாடினார். அப்பா, நம்மை மீண்டும் வீட்டுக்கே



அனுப்பி விடுவார்களா' என்று மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டிருந்தான் ஜெரால்ட். எல்லோருக்கும் சேர்த்தே பதிலளித்தார். பேச்சுவார்த்தை முடிந்து திரும்பிவந்த குஸ்தாவ். "அமெரிக்கா நம்மை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை."

கட்டுப்படுத்தமுடியாமல் பலர் பெருங்குரலில் அழ ஆரம்பித்தனர். குழந்தைகள் பெற்றோர்களைக் கட்டிப்பிடித்துக்கொண்டு வீறிட்டு அலறினார்கள். குஸ்தாவ் அவர்களை ஆற்றுப்படுத்த முடியாமல் தவித்துக்கொண்டிருந்தார். ஓவென்று கத்தியபடி எங்கிருந்தோ ஓடிவந்த ஒருவர் தன் மணிக்கட்டைக் கீறிக்கொண்டு துடிதுடிக்கக் கீழே விழுந்தார். பீய்ச்சியடிக்கும் ரத்தத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தான் ஜெரால்ட். ஜிசெலா வெறித்த விழிகளுடன் இடிந்துபோய் அமர்ந்திருந்தார்.

"ஏன் அமெரிக்கா ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டது? யூதர்களை ஹிட்லர் வதைத்துக் கொண்டிருப்பது அவர்களுக்குத் தெரியாதா? எங்களுடைய வீடுகளை நாஜிக்கள் ஆக்கிரமித்துக் கொண்டதும், கடைகளைச் சூறையாடியதும், குடியுரிமைகளை ரத்து செய்ததும், சொந்த நாட்டிலேயே அகதிகளாக மாற்றியதையும் அமெரிக்கா அறிந்து வைத்திருக்கவில்லையா?

ஃபிராங்க்ளின் ரூஸ்வெல்ட்டை மனிதாபிமானமிக்க தலைவர் என்றல்லவா உலகம் புகழ்கிறது? அவரால் ஏன் ஒரேயொரு கப்பலைக்கூட அனுமதிக்க முடியவில்லை? நேரடியாக அவருக்குக் கடிதம் எழுதியும்கூட ஏன் பதிலில்லை? ஹிட்லர் ஒரு சர்வாதிகாரி என்பது தெரிந்ததுதான். அவருக்கு வெறுப்பு அரசியல் என்பது இயல்பானதாக இருக்கிறது. ஆனால், ஜனநாயகத்தை உயர்த்திப்பிடிக்கும் அமெரிக்கா ஏன் மனிதர்களை வெறுக்கவேண்டும்? உயிர்தப்பி நிராயுதபாணிகளாக வந்து நிற்கும் எளிய மக்களை வெளியில் தள்ளிப் பூட்டு போடுபவர்களால் எப்படி ஜனநாயகம் குறித்துப் பேசமுடிகிறது? நாங்கள் அந்நியர்கள் என்பதால் ஜெர்மனி எங்களை வேட்டையாடுகிறது. நீங்கள் அந்நியர்கள், அதனால் நீங்கள் வேட்டையாடப்படுவதை நாங்கள் வேடிக்கை மட்டுமே பார்ப்போம் என்கிறதா அமெரிக்கா? ஒருவேளை நாங்கள் கொல்லப்பட்டால் இந்த இருவரின் கரங்களிலும் ரத்தக்கறை கிட்டத்தட்ட சமமாகப் படிந்திருக்கும் அல்லவா?"

குஸ்தாவுக்கும் புரியவில்லை. அவர் மீண்டும் கப்பலை ஐரோப்பாவை நோக்கித் திருப்பினார். ஆனால், ஜெர்மனிக்குத் திரும்பிப்போக அவர் விரும்பவில்லை. புறப்பட்டு ஒரு மாதம் கழிந்தபிறகு ஜூன் 17ம் திகதி அங்குமிங்கும் சுற்றிவிட்டு, கடைசியில் பெல்ஜியத்தில் உள்ள ஆன்ட்வெர்ப் துறைமுகத்தை வந்தடைந்தார். பெல்ஜியம் அவர்களைத் திருப்பியனுப்பவில்லை. பயணிகள் தரையிறங்குவதற்கு அனுமதித்தது. "யூதர்கள் மீண்டும் ஜெர்மனிக்குத் திருப்பியனுப்பப்பட மாட்டார்கள்" என்றும் உறுதியளித்தது. பெல்ஜியம் போக, பிரான்ஸ், நெதர்லாந்து, பிரிட்டன் ஆகிய நாடுகளும் விரிவான பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு யூத அகதிகளைத் தங்களுக்குள் பங்கிட்டு ஏற்றுக்கொள்ள முன்வந்தன. 288 பேர் பிரிட்டனுக்குச் சென்றனர். 224 பேரை பிரான்ஸும், 214 பேரை பெல்ஜியமும், 181 பேரை நெதர்லாந்தும் ஏற்றுக்கொண்டன. ஜிசெலாவின் குடும்பமும் ஜெரால்டின் குடும்பமும் பிரிட்டனைத் தேர்ந்தெடுத்தன. குஸ்தாவ் நியாயமான மனத் திருப்தியுடன் காலியான செயின்ட் லூயிஸ் கப்பலை ஜெர்மனிக்குக் கொண்டுசென்று சேர்த்தார்.

இருந்தும் சபிக்கப்பட்ட பயணம் என்றே வரலாறு இந்நிகழ்வை நினைவில் வைத்திருக்கிறது. காரணம், பிரிட்டனுக்குச் சென்றவர்கள் மட்டுமே பாதுகாப்பாக இருந்தனர் என்பதுதான். மற்ற நாடுகளை ஹிட்லர் போரிட்டு ஆக்கிரமித்துக்கொண்டபோது யூதர்கள் மீண்டும் நாஜிக்களால் சிறைப் பிடிக்கப்பட்டனர். அவர்களில் பலர் வதைமுகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். செயின்ட் லூயிஸ் கப்பலைச் சேர்ந்த மொத்தம் 254 யூதர்கள் போரிலும், விவரிக்கமுடியாத வதைகளாலும் கொல்லப்பட்டனர். அமெரிக்கா அன்று கப்பலை அனுமதித்திருந்தால் இந்த 254 மரணங்களைத் தவிர்த்திருக்க முடியும். அமெரிக்கா ஏற்க மறுத்த அகதிகள் அல்லது அமெரிக்காவால் மறைமுகமாகக் கொல்லப்பட்ட அகதிகள் என்று இவர்கள் இன்று நினைவுகூரப்படுகிறார்கள். பின்னர் யூதர்கள் தங்களுக்கென்று ஒரு தாய்நாட்டை உருவாக்கிக்கொண்ட போது அவர்களை அமெரிக்கா ஆதரித்ததும் இன்றுவரை அந்த ஆதரவு தொடர்வதும் நமக்கெல்லாம் தெரிந்ததுதான். ஆனால், இந்த ஆதரவு யூதர்களுக்கு மட்டும்தான், அகதிகளுக்கு அல்ல. சபிக்கப்பட்ட பயணங்கள் தொடர்ந்துகொண்டேயிருக்கின்றன.

உயிர் தப்பி, கப்பலில் வந்து சேரும் அகதிகளையெல்லாம் திருப்பியனுப்பிக் கொண்டிருக்கும் இன்றைய உலகைக் கண்டால் ஹிட்லர் நிச்சயம் பெருமிதம் கொள்வார். ஹிட்லருக்குப் பிடித்தமான ஓர் உலகில்தான் நாம் அனைவரும் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

**சொந்தங்கள் வருவார்கள்**

## இன்ஜின் ஓயிலில் இத்தனை விசயமா!

# இயந்திரத்தின் ஆயுளை தீர்மானிக்கும் இன்ஜின் ஓயில்!




நமதுஉடலில் ஓடும் ரத்தம் போன்றது வாகனங்களின் இன்ஜின் ஓயில். இன்ஜினில் உள்ள உலோகங்கள் ஒன்றோடு ஒன்று உரசும் போது மசகுத்தன்மை (Viscosity) இல்லையென்றால், உலோகம் விரைவாகத் தேய்வதுடன் கீறல்களும் விழுந்துவிடும். உலோக உரசலின்போது ஏற்படும் வெப்பத்தால், இன்ஜின் உருகி தனது வடிவத்தை இழந்து, சிறிது நேரத்திலேயே செயலிழந்துவிடும். இதைத்தான் இன்ஜின் 'சீஸ்' ஆகிவிட்டது என்கிறோம்.

உரிய அளவு ஓயில் இருக்கும்போது, உலோக உராய்வு முற்றிலும் தவிர்க்கப்படுவதுடன், உராய்வால் ஏற்படும் வெப்பத்தையும் இந்த ஓயில் கடத்திவிடுகிறது. இன்ஜினுக்குள் ஏற்படும் உராய்வுகள், வெப்பமடைதல் போன்றவற்றைக் குறைப்பதே இன்ஜின் ஓயிலின் முதன்மையான பணி. உடலின் ரத்த நாளங்களில் அடைப்பு ஏற்பட்டால், எப்படி ஹார்ட் அட்டாக் வருகிறதோ, அதேபோல இன்ஜின் ஓயில், இன்ஜினுக்குள்ளே சீராகச் செல்லவில்லை என்றால், இன்ஜினுக்கு 'அட்டாக்' வந்து சீஸ் ஆகிவிடும்.

இன்ஜின் ஓயிலிலும் பல வகைகள் இருக்கின்றன. மேலும், அவற்றுக்கான விதிமுறைகளும், பயன்பாட்டுக்கு ஏற்ப வித்தியாசங்களும் இருக்கும். இன்ஜின் ஓயிலுக்கான விதிகளை நிர்ணயிக்கும் அமைப்புகள் பல இருக்கின்றன. அவற்றில் SAE (Society of Automotive Engineers) என்பது ஒரு சர்வதேச அமைப்பு. இதன் வழிகாட்டுதலின்படிதான், இன்ஜின் ஓயிலின் கிரேட் தீர்மானிக்கப்படுகிறது.

இன்ஜின் ஓயிலின் பணி மற்றும் மசகுத்தன்மையின் அளவு ஆகியவற்றுக்கு ஏற்ப, ஐந்து ஐந்தாக 0 முதல் 25 வரை (W) குளிர்கால கிரேடிங்கும், பத்து பத்தாக 20 முதல் 60 வரை (S) கோடை கால கிரேடிங்கும் வகை பிரிக்கப்படுகின்றன. இதில், சிங்கிள் கிரேட் மற்றும் மல்ட்டி கிரேட் என இரு வகைகள். சாதாரண பயன்பாட்டுக்கு சிங்கிள் கிரேட் ஏற்றது.

நம்நாட்டின் மிதமான பருவநிலைக்கு, மல்ட்டி கிரேட் சரியானது. இங்கு அதிகளவில் பயன்பாட்டில் இருக்கும் கார்களுக்கான ஓயில் கிரேட் 5W30 / 10W40 அல்லது 15W40 / 20W50 ஆகியவைதான். W-வுக்கு முன்பாக இருக்கும் நம்பர், குறைவான வெப்பநிலையைக் (குளிர்காலம்) குறிப்பிட்டால், W-வுக்குப் பின்பு இருக்கும் நம்பர், அதிகபட்ச வெப்பநிலையைக் (கோடைக்காலம்) குறிப்பிடுகிறது. எனவே, இன்ஜின் இயங்கும்போது அடர்த்தியாக இருக்கும் ஓயில், இன்ஜின் செயல்படாதபோது திரவ நிலைக்கு மாறிவிடும்.



உலக அளவில் API (American Petroleum Institute) மற்றும் EACA (European Automobile Manufacturers Association) அமைப்புகள்தான் ஓயில் கிரேட் நிர்ணயம் செய்வதில் மிகப் பழைமையானவை. இலங்கையில் விற்பனை செய்யப்படும் இன்ஜின் ஓயில்களில், அமெரிக்காவின் API விதிகள்தான் பெரும்பாலும் பின்பற்றப்படுகின்றன. இது பெரும்பாலும் பெட்ரோல் இன்ஜின்களுக்கே பொருந்தும் என்றாலும், டீசல் இன்ஜின்களுக்கு என பிரத்யேகமான விதிகளையும் கொண்டுள்ளது API. ஸ்பார்க் இக்னீஷன் இன்ஜின்களுக்காக API SL அல்லது API SM கம்ப்ரஷன் இக்னீஷன் இன்ஜின்களுக்காக API CH4 அல்லது API CI4 விதிகளும் தற்போது புழக்கத்தில் இருக்கின்றன.

கார்களுக்கான ஓயில்களில், உராய்வைக் குறைக்கக்கூடிய அடிட்டிவ்கள் அதிகளவில் இருக்கின்றன. எனவே, இதை மோட்டார் சைக்கிள்களில் பயன்படுத்துவது, கிளட்ச் சிலிப் ஆவதற்கு வழிவகுக்கும். தவிர, ஓயில் விஷயத்தில் எப்போதுமே வாகனத் தயாரிப்பாளர் பரிந்துரைக்கும் கிரேடை மட்டும் பயன்படுத்த வேண்டும். கிரேடை மாற்றினால் ஓயில் ஃப்லிம், இன்ஜின் வடிவமைப்புக்கு ஏற்ப உருவாகாது. இதனால், இன்ஜினின் பெர்ஃபாமென்ஸ் பாதிக்கப்படுவதுடன், நாளடைவில் அது செயலிழப்பது உறுதி.

இருசக்கர வாகனங்களில் பயன்படுத்தப்படும் இன்ஜின் ஓயில் மற்றும் அதன் விதிகளைப் பார்க்கலாம்.

ஜெ.எ.சொ (JASO - Japanese Automotive Standards Organization) என்பது இன்ஜின் ஓயிலுக்கான ஜப்பானிய அமைப்பு. High Revving பெர்ஃபோமென்ஸ் இன்ஜின்களுக்குப் பெயர் பெற்ற ஜப்பான், ஜெ.எ.சொ விதிகளை இருசக்கர வாகனங்களுக்கு ஏதுவானதாகவே அமைத்திருக்கிறது. எனவே, தென்னாசிய சந்தையிலுள்ள மோட்டார் சைக்கிள் இன்ஜின் ஓயில்கள், அமெரிக்காவின் API SL அல்லது API SM விதியுடன் சேர்த்து, JASO MA / JASO MA2 அல்லது JASO MB விதிகளைப் பின்பற்றியே தயாரிக்கப்படுகின்றன. இவற்றில் JASO MA / JASO MA2 என்பது, அதிக உராய்வுகளைக்கொண்ட வெட் கிளட்ச் பைக்குக்கும், JASO MB என்பது, குறைவான உராய்வுகளைக்கொண்ட ஸ்கூட்டருக்கும் பொருந்தும். எனவே, பைக்கின் ஓயிலை ஸ்கூட்டரிலும், ஸ்கூட்டரின் ஓயிலை பைக்கிலும் மாற்றுவது, நாம் இன்ஜினுக்கு செய்யும் மிகப்பெரிய தீங்கு. இன்ஜின் ஓயில்களின் செயல்பாட்டை அதிகரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அடிட்டிவ்களை தற்போது பார்க்கலாம்.

Detergent / Dispersant இன்ஜினின் உட்புறத்தைச் சுத்தமாக வைத்திருப்பதே இதன் பணி.

Viscosity Index Improvers எந்த பருவநிலையில் இயங்கினாலும், இன்ஜின் ஓயிலின் மசகுத்தன்மையைக் குறையவிடாமல் இவை பார்த்துக் கொள்ளும்.

Anti-Wear Agents கார்/டூவீலரை அதிக நாள்கள் பயன்படுத்தாமல் வைத்திருக்கும்போது, இன்ஜின் வடிவமைப்புக்கு ஏற்ற ஓயில் ஃபிலிம் முழுமையாக இருப்பதற்கான சாத்தியங்கள் குறைவு. எனவே, உலோகங்கள் உரசும் வாய்ப்பும் தானாக அமைந்துவிடுகின்றன. இதனைத் தவிர்க்கும் பொருட்டு, Zinc Dialkyl Dithio Phosphate அல்லது Phosphorous-Sulphur ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட Anti-Wear Agents, இன்ஜின் ஓயிலில் கலக்கப்படுகின்றன.

Friction modifiers உலோகங்கள் உரசுவதால் ஏற்படும் அதிக உராய்வைக் கட்டுப்படுத்தி, மைலேஜை அதிகரிப்பதுதான் இதன் வேலை. இதற்காக Graphite, Molybdenum போன்றவை, இன்ஜின் ஓயிலில் சேர்க்கப்படுகின்றன.


Corrosion Inhibitors / Alkaline Additives காற்றும், எரிபொருளும் கலந்த கலவை எரியூட்டப்படும்போது, நீர் மற்றும் அசிட் ஆகியவை உற்பத்தி ஆகின்றன. இவை இன்ஜினில் நீடித்தால், அதன் உட்புறத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அரித்து, இறுதியில் அதனைத் துருப்பிடிக்கச் செய்துவிடும். இப்படி நடக்கவிடாமல் செய்வதே இதன் பணி.

Antioxidants இன்ஜினுக்குள்ளே இருக்கும் ஓயிலின் நச்சுத்தன்மை, இறுக்கத்தின் அளவு, மாசு பொருள்களின் உருவாக்கம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதே இதன் நோக்கம்.

அடுத்த இதழில் இன்ஜின் ஓயில் வகைகளைப் பற்றிப் பார்ப்போம்!

# கிரீஸில் ஒரு சாண்டில்யன் கதை

**உலகம் சுற்றி பார்ப்போம் 12**



விடுதிக்கு திரும்பியபின் இரவு இணையத்தளங்களில் வழக்கம் போல செய்திகளை வாசித்தபோது ஒரு அதிர்ச்சியான செய்தியை அறிந்துகொள்ள முடிந்தது. அன்று துருக்கியில் ஏற்படவிருந்த ஒரு இராணுவ புரட்சி ஒடுக்கப்பட்டதாகவும் சில நூறு பேர் இறந்ததாகவும் ஓரிரு ஆயிரம் பேர்கள் காயப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆட்சியிலிருக்கும் எர்டகான் கட்சிக்குள் ஒரு காலத்தில் இணைந்திருந்து துருக்கியில் பலமான பொருளாதார சமூகசேவை இயக்கமாக வளர்ந்து தாய்க்கட்சியுடன் பிரிந்துவிட்ட "ஹிஸ்மெத்" தலைவர் குலென் என்பவரால் அப்புரட்சி இயக்கப்பட்டதாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

நவீன துருக்கியின் சுமார் நூறு ஆண்டுகளின் நான்காவது இராணுவ புரட்சியான அது முறியடிக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான உயர்பதவிகளில் இருந்தவர்கள் உள்ளே தள்ளப்பட்டார்கள், இன்னும் அது தொடர்ந்து கொண்டிருக்கிறது.

கிரீஸுடன் அரசியல்ரீதியில் நீண்டகாலமாக பல பிரச்சினைகளால் ஒன்றுபட்டிருக்கும் நாடு துருக்கி என்பதாலும் ரோடோஸ் தீவு அதற்கு மிக அருகில் இருப்பதாலும் நான் இதை முக்கியமாக குறிப்பிடுகிறேன்.

அத்துடன் எங்கள் பிரயாணத்தில் ஒருசில நாட்களுக்கு துருக்கியிலிருக்கும் மார்மாரிஸ் பிராந்தியத்துக்கு போகும் எண்ணத்தையும் நடந்த இராணுவ புரட்சியினால் கைவிட வேண்டியதாயிற்று. இதே பிரதேசத்தில்தான் அந்த நாட்களில் துருக்கிய ஜனாதிபதி எர்டகான் விடுமுறையில் இருந்தார். துருக்கியின் பாராளுமன்றம் மற்றும் முக்கிய இடங்கள் விமானத் தாக்குதலுக்குட்படுத்தப்பட்ட போது ஜனாதிபதி தப்பிவிட்டதற்குக் காரணமும் அவர் தலைநகரில் இல்லாமல் வெளியேறி விட்டதாகவும் இருக்கலாம்.

1830 இல் தன்னை ஆக்கிரமித்திருந்த ஒத்தமான் சாம்ராஜ்யத்திலிருந்து விடுதலை பெற்ற நாடு கிரீஸ். சுமார் 1300 களில் துருக்கிய பிராந்தியங்கள் ஒன்றிலிருந்து [அனதோலியா] ஆரம்பித்து சுமார் 600 வருடங்கள் சுற்று வட்டத்திலிருந்த நாடுகளையும் சில ஐரோப்பிய நாடுகளையும் தனக்குள் அடக்கிய சாம்ராஜ்யம்தான் ஒத்தமான் சாம்ராஜ்யம்.

முதலாம் உலகப்போரின் போது வீழ்ச்சியடைந்த ஒத்தமானிய சாம்ராஜ்யம் 1922 இல் துருக்கியை இழந்த பின் 1923 இல் பிறந்த நாடுதான் இன்றைய துருக்கி.

ரோடோஸைப் பொறுத்தவரை ஒத்தமானிய ஆட்சிக்காலம் அதன் சகல பாகங்களிலும் கலாச்சாரம், கட்டிடக்கலைகள் ஒட்டிக் கிடக்கிறக்கிறது. எனவே அந்த நிலைமைக்கான போரைப் பற்றி குறிப்பிடுவது அவசியம்.

ரோடோஸ் கோட்டைக்குள் இருக்கும் குறுகலான, சிக்கலான சந்துப்பாதைகளையும் அவைகளின் இரு பக்கமும் இருக்கும் உயரமான ஆங்காங்கே சிதிலமடைந்திருக்கும் பண்டைக்கால மதில்களைப் பற்றியும் ஏற்கனவே குறிப்பிட்டது ஞாபகமிருக்கும் என்று எண்ணுகின்றேன். இக் கோட்டையின் பழைமையும், விசேடமான உள்ளீடுகளும் மிகவும் முக்கியமானதால் இவை ஐநாவின் யுனெஸ்கோ அமைப்பினால் உலகத்துக்குப் பொதுவான கலாச்சார பொக்கிஷமாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக அந்த அமைப்புக்கள், கட்டடங்களில் எவ்வித மாற்றங்களையும் எவரும் இஷ்டப்படி செய்ய அனுமதியில்லை.

இவைகளில் பெரும்பான்மையானவை 14 முதல் 16ம் நூற்றாண்டுகளில் கட்டியெழுப்பப்பட்டவை. புனித யோவானின் படையினரால் பாவிக்கப்பட்ட கட்டடக்கலையும், துருக்கிய ஒத்தமான் சாம்ராஜ்ஜியத்தினரால் பாவிக்கப்பட்ட கட்டடக்கலையையும் இக் கோட்டைக்குள் ஒன்றாக காணலாம். அதாவது பலவகைகளிலும் மேற்கும் கிழக்கும் இக்கோட்டைக்குள் ஒன்றுக்குள் ஒன்றாக கலந்து கிடக்கிறது. சுமார் 35 மத்திய கால கிறீஸ்தவ தேவாலயங்களும் பல பள்ளிவாசல்களும் அடுத்தடுத்து காணப்படுகின்றன.

1309 இல் தங்களிடமிருந்து புனித யோவானின் படையினரால் பிடுங்கியெடுக்கப்பட்ட ரோடோஸை திருப்பியெடுக்க ஒத்தமானிய படைகள் 1480 இல் முயற்சி செய்து அங்கிருந்த பலமான கோட்டை அரணை தகர்க்க முடியாததால் தோற்றுப் போயின. ஆனாலும் அச்சமயத்தில் ஒத்தமானிய சாம்ராஜ்யத்தின் வேகமான வளர்ச்சிக்கு மத்தியதரைக்கடல், ஏஜியன் கடல் மற்றும் அதையொட்டிய பிராந்தியங்களிலும் தொல்லை கொடுத்து கொண்டிருந்த புனித யோவானின் படையினரின் மையமாக இருந்து வந்த ரோடோஸை கைப்பற்றும் குறிக்கோளில் இருந்து மட்டும் மாறவில்லை.

மேற்கொண்டு இப்போரின் விபரங்களை நான் அறிந்து கொண்டவரை சொல்ல வேண்டுமானால் எனக்கு சரித்திரக்கதைகள் எழுத சாண்டில்யனைப் போன்ற திறமை வேண்டுமென்று தோன்றுகிறது.

என்னால் முயன்றவரை நான் விபரங்களை கீழே எழுதும்போது எனக்குள் கடல்புறா, கடல்ராணி, ஜலதீபம் போன்ற நாவல்களில் கடற்போர்களின் விபரிப்புகள் சினிமாப் படங்கள் போலத் தெரிகின்றன என்றால் மிகையல்ல. அத்தனை சுவாரஸ்யமானவை ஒத்தமானிய அரசின் போர்களும், புனித யோவானின் படைகளின் போர்த்தந்திரங்களும்.

ஒத்தமானிய அரசனின் நோக்கத்தை அறிந்து கொண்ட புனித யோவானின் படையின் உயர்குரு ரோடோஸின் கோட்டையை மேலும் பலப்படுத்த ஆரம்பித்தார் வரவிருக்கும் அடுத்த தாக்குதலை சமாளிக்க. கோட்டை மதிகள் 150 அடிகளுக்கு உயர்த்தப்பட்டு 24 அடிகள் தடிமனாக்கப்பட்டன.

தீவைச்சுற்றி 30 பலமான கோட்டைகளும், பாதுகாப்பு அரண்களும் கட்டப்பட்டு அவைகளுக்கிடையே இலகுவான முறையில் தொடர்புகள் கொள்ள புறாக்கள் பழக்கப்பட்டன. அத்துடன் அடையாள வெடிகளுக்கான பீரங்கிகளும் ஆங்காங்கே ஸ்தாபிக்கப்பட்டன. துறைமுகத்தை பொறுத்தவரை அவைகளின் அமைப்பு பிறைகள் போன்று உருவாக்கப்பட்டது.

ஒத்தமானிய சுல்தான் சுலைமான் 1522 இல் தனது முக்கிய தளபதி முஸ்தபா பாஷாவுடன் நேரடியாக ரோடோஸ் முற்றுக்கையில் ஈடுபட்டார். 1480 தாக்குதலில் சுல்தான் மெஹ்மத் 70 000 பேர்கள் கொண்ட படையுடன் போரிட்டு தோல்வியடைந்ததால் சுலைமான் 100,000 பேர்கள் கொண்ட படையுடனும் நவீனரக பீரங்கிகள் உட்பட புதியபோர் ஆயுதங்களுடனும், வெடிமருந்து தொழில்நுட்பங்களுடனும் வந்து ரோடோஸுக்கு வெளியே தங்கினார்.

டோரோஸின் துறைமுகங்களை செயலிழக்கச் செய்ததன் மூலம் கோட்டைக்குள்ளிருப்பவர்களுக்கு எவ்வித வெளி உலகத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன. புனித யோவானின் படையினரோ சுமார் 7,500 பேர்கள் மட்டுமே.

புனித யோவானின் படையினரின்





தொடர்ச்சி 24-ம் பக்கம்

# 2018 புத்தாண்டு ராசிபலன்கள் எளிய பரிகாரங்களுடன்!

ஜோதிட ரத்னா சிங்காரவேலர்



நிகழும் ஹேவிளம்பி வருடம், மார்கழி மாதம் 17ம் தேதி, திங்கட்கிழமை, தட்சிணாயனம் ஹேமந்த ருது, வளர்பிறையில் சதுர்த்தசி திதியில், சமநோக்கு கொண்ட மிருகசீரிடம் நட்சத்திரம், ரிஷப ராசி, கன்னி லக்கினத்தில், சுப்பிரம் நாமயோகம், வணிசை நாமகரணம், நேத்திரம், ஜீவனம் கூடிய சித்தயோக நன்னாளில் சூரிய உதயத்தை அடிப்படையாகக் கொண்ட நேரம் நள்ளிரவு மணி 12க்கு 1.1.18 ம் ஆண்டு பிறக்கிறது. எண் ஜோதிடப் படி சந்திரனின் ஆதிக்கத்தில் (2+0+1+8=2) இந்த ஆண்டு பிறப்பதால் மக்களிடையே வீடு, மனை, வாகனம் வாங்க வேண்டுமென்ற எண்ணம் வரும்.

சுக்கிரனின் வீடான ரிஷப ராசியில் இந்த ஆண்டு பிறப்பதால் வாகன உற்பத்தி அதிகரிக்கும். கம்ப்யூட்டர், கார், டி.வி., ஃபிரிஜ், ஏ.சி மற்றும் சமையலறைச் சாதனங்களின் விலை குறையும். காய்கறி விலை குறையும். நகரத்தைக் காட்டிலும் நகரத்தை ஒட்டியிருக்கும் பகுதிகள் நவீனமாகும். காணி தொடர்பான கடுமையான சட்டங்கள் வரலாம். கைம்பெண் மற்றும் விவாகரத்து வாங்கியவர்கள் சமூகத்தில் சாதித்துக் காட்டுவார்கள். பெரிய பதவியிலும் அமர்வார்கள். ஆபரணங்கள் விலை கட்டுப்பாட்டுக்குள் வரும். தங்கம் இறக்குமதி அதிகரிக்கும். வெள்ளி விலை உயரும். கண்ணாடி, சிமென்ட், மின்னணுச் சாதனங்கள், செங்கல், மணல் உள்ளிட்ட கட்டுமானப் பொருள்களின் விலை உயரும்.

30.8.18 முதல் 28.12.18 வரை துலாம் ராசியில் சுக்கிரன் வக்ரமாகி அமர்வதால், கலைத்துறையில் இருப்பவர்களுக்குள் ஒற்றுமை குறையும். வரதட்சணைக் கொடுமை, பாலியல் பலாத்காரம் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரிக்கும். மட்டக்களப்பு உள்ளிட்ட நகரங்கள் மற்றும் மலைப்பகுதி நகரங்கள் பெருமழையால் பாதிக்கும். தங்க நகைத் திருட்டு அதிகரிக்கும். சைபர் க்ரைம் அதிகமாகும். செப்டம்பர் மாதம் வரை துலாம் ராசியில் குரு இருப்பதால் வியாபாரிகளைக் கட்டுப்படுத்த புதிய சட்டம் வரும்.

இந்த வருடம் முழுக்க தனுசில் சனி இருப்பதால், புதிய அரசியல் கட்சிகள் உதயமாகும். கோயில் விழாக்களின் போது தீ விபத்துகளுக்கு வாய்ப்பு உண்டு. புதனின் லக்கினத்தில் இந்த ஆண்டு பிறப்பதால், கல்வித் துறை மேம்படும். புதிய பாடத்திட்டங்கள், தேர்வு முறைகள், மதிப்பெண் முறைகள் நடைமுறைக்கு வரும். ஆசிரியர்களுக்கு சம்பளம் உயரும்.

10.3.18 முதல் 2.5.18 வரை சனியுடன் செவ்வாய் சேர்ந்திருப்பதால் வாகன விபத்துகள் அதிகரிக்கும். அரசியலில் அதிரடி ஆட்சி மாற்றங்கள் இருக்கும். நிலநடுக்கம் உள்ளிட்ட இயற்கைச் சீற்றங்கள் அதிகரிக்கும். அரசியல் தலைவர்கள் பாதிக்கப்படுவார்கள். வங்கி, ரயில்வே ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வார்கள். மின்சாரம் மற்றும் தீ விபத்துகள் அதிகரிக்கும். பிளாஸ்டிக் பொருள்களின் பயன்பாடு குறையும். ஆட்சியாளர்களுக்கு எதிர்ப்பு அதிகரிக்கும்.

3.5.18 முதல் 30.10.18 வரை செவ்வாயும் கேதுவும் சேர்ந்திருப்பதால், ராணுவம் மேலும் நவீனமாகும். ராணுவத்தில் பெரிய பொறுப்பில் உள்ள அதிகாரிகள் மாற்றப்படுவர். சொத்து, சைபர் க்ரைம், முன்விரோதம் சம்பந்தப்பட்ட வழக்குகள் அதிகரிக்கும். உணவுப் பயிர்களை வினோதமான கிருமிகள் தாக்கும்.

மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு, கல்வியில் மாற்றங்கள், அரசியலில் திடீர் திருப்பங்களைத் தருவதாகவும், மக்களிடையே சுயநம்பிக்கையை விதைப்பதாகவும் அமையும்.

## மேஷம்

**அசுவினி, பரணி கிருத்திகை 1ம் பாதம்**

சோதனைகளையும் சாதனைகளாக மாற்றுபவர்களே! உங்கள் ராசிக்கு தன ஸ்தானத்தில் சந்திரன் நிற்கும் இடத்தில்



புத்தாண்டு பிறப்பதால், வரவேண்டிய பணம் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். மதிப்பு கூடும்.

2.10.18 வரை குருபகவான் 7ல் அமர்ந்து ராசியைப் பார்ப்பதால், ஆரோக்கியம் மேம்படும். திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். வாழ்க்கைத் துணைவர் பக்கபலமாக இருப்பார். தந்தை வழியில் ஆதரவு பெருகும். ஆனால், குரு பகவான், 14.2.18 முதல் 10.4.18 வரை, விசாக நட்சத்திரம் 4ம் பாதத்தில் அதிசார வக்கிரத்தில் செல்கிறார்; 3.10.18 முதல் வருடம் முடியும் வரை, ராசிக்கு 8ல் சென்று மறைகிறார். ஆகவே, சிறிய விஷயங்களையும் போராடித்தான் முடிக்கவேண்டி இருக்கும். குடும்பத்தில் சலசலப்பு, பணப் பற்றாக்குறை, கடன் சுமை ஏற்படும். விலையுயர்ந்த பொருள்களின் மீது அதீத கவனம் தேவை.

வருடம் பிறக்கும்போது ராசிநாதன் செவ்வாய் 7ல் இருப்பதால், தம்பதிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். வாழ்க்கைத்துணையின் ஆரோக் கியத்தில் கவனம் தேவை. உடன்பிறந்தவர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும். சொத்துகள் வாங்குவது விற்பதில் வில்லங்கம் ஏற்பட்டு நீங்கும்.

உங்கள் ஜீவனாதிபதியும் லாபாதியுமான சனி பகவான் வருடம் முழுவதும் 9ம் இடத்திலேயே தொடர்வதால், தன்னம்பிக்கை கூடும். பெரிய பதவிகளில் இருப்பவர்களின் அறிமுகம் கிடைக்கும். தடைப்பட்ட சுபநிகழ்ச்சிகள் அடுத்தடுத்து நடைபெறும். புதிய பொறுப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். பிற மொழி பேசுபவர்களால் வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும். மகளின் திருமணத்தை விமரிசையாக நடத்தி முடிப்பீர்கள். தந்தையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

புத்தாண்டின் தொடக்கத்தில் சூரியன், பகை கிரகமான சனியுடன் இணைந்திருப்பதால், பிள்ளைகளின் உயர்கல்வி, உத்தியோகம், திருமணம் சம்பந்தப்பட்ட கவலைகள் வந்து போகும். பூர்வீகச் சொத்துப் பிரச்னையில் பொறுமை அவசியம். 10.3.18 முதல் 2.5.18 வரை சனியும் செவ்வாயும் சேர்ந்திருப்பதால், தந்தை வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் தோன்ற வாய்ப்பு உள்ளது. மற்றவர்களை நம்பிப் பெரிய முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம். 2.8.18 முதல் 29.8.18 வரை சுக்கிரன் 6ல் மறைவதால், கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் எழலாம். வருடம் முழுவதும் ராகு 4லும் கேது 10லும் இருப்பதால், சிலருக்கு வீடு மாறவேண்டிய நிர்பந்தம் ஏற்படக்கூடும். தாயாரின் அறிவுரைப்படி நடப்பது மிகவும் அவசியம். அவருடைய உடல் நலனிலும் கவனம் தேவை. தொலைவில் இருக்கும் சொத்துகளைப் பராமரிப்பதில் கவனம் தேவை.

வியாபாரத்தில் புது வியூகம் அமைத்து, கூடுதல் லாபம் ஈட்டுவீர்கள். சிலர் சொந்த இடத்துக்குக் கடையை மாற்றும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரிகள் சங்கத்தில் முக்கியப் பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். உணவகம், தங்கும் விடுதி, சிமென்ட் வகைகளால் ஆதாயம் உண்டாகும். வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். ஆனால், ராகு 4ல் இருப்பதால் கூட்டுத் தொழிலில் கவனம் தேவை.

உத்தியோகத்தில் ஜீவனாதிபதி சனி சாதகமாக இருப்பதால் பாராட்டுகள் அதிகரிக்கும். புதிய அதிகாரி உங்களுக்கு ஆதரவு தருவார். எனினும், கேது 10ல் தொடர்வதால் பணிச் சுமை அதிகரிக்கும். சலுகைகள் சற்று தாமதமாகத்தான் கிடைக்கும். சிலருக்கு, பணிநிமித்தம் வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

மாணவ மாணவியர்களே, உயர் கல்வியில் அதிக மதிப்பெண்கள் பெற்று விரும்பிய பாடப்பிரிவில் சேர்வீர்கள். கலைத் துறையினரின் நீண்டநாள் கனவு நனவாகும். பெரிய நிறுவனங்களிலிருந்து வாய்ப்புகள் வரும்.

மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு, உங்களை முன்னேற வைப்பதுடன் எதிர்காலத் திட்டங்களையும் நிறைவேற்றித் தருவதாகவும் அமையும்.

**பரிகாரம்:** சிலாபத்தில் அருள் பாலித்து நிற்கும் முன்னேஸ்வரரை, பிரதோஷ நாளில் தரிசித்து நெய் தீபம் ஏற்றி வழிபடுங்கள்; நற்பலன்கள் பன்மடங்காகக் கிடைக்கும்.

## ரிஷபம்

**கிருத்திகை 2,3,4ம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2ம் பாதம்**

உழைப்பால் உயர நினைப்பவர்களே! உங்கள் சப்தமாதிபதி செவ்வாய் 6ல்



வலுவாக இருக்கும் நேரத்தில் புத்தாண்டு பிறப்பதால், நெருக்கடிகளைச் சமாளிக்கும் ஆற்றல் பிறக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் அறிமுகமும் அதனால் ஆதாயமும் உண்டாகும். சகோதரர்கள் உதவுவார்கள்.

புதன் உங்கள் ராசியைப் பார்க்கும் நேரத்தில் புத்தாண்டு பிறப்பதால், திறமையை வெளிப்படுத்த நல்ல

வாய்ப்புகள் ஏற்படும். புதியவர்களின் நட்பு உற்சாகம் தரும். பூர்வீகச் சொத்து கைக்கு வரும். வருடம் முழுவதும் ராகு 3ல் தொடர்வதால் மனதில் தைரியம் அதிகரிக்கும். பெரிய பொறுப்புகளில் இருக்கும் பழைய நண்பர்களால் சில உதவிகள் கிடைக்கும். இளைய சகோதர வகையில் நன்மைகள் ஏற்படும். வழக்குகள் சாதகமாகும். சிலருக்கு, வெளிநாட்டுத் தொடர்புடைய நிறுவனத்தில் வேலை கிடைக்கும். கடன்கள் தீரும். ஆனால், கேது 9ல் இருப்பதால் தந்தையுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும்.

புத்தாண்டின் தொடக்கத்தில் ராசிநாதன் சுக்கிரன், சூரியன் மற்றும் சனியுடன் சேர்ந்து 8ல் இருப்பதால், வீண் அலைச்சல்கள், திடீர்ப் பயணங்கள் அதிகரிக்கும். 1.1.18 முதல் 13.1.18 வரை சூரியனும் சனியும் சேர்ந்திருப்பதால், வீண்பழி ஏற்படக்கூடும். மற்றவர்களுக்காகச் சாட்சிக் கையெழுத்து போட வேண்டாம். வழக்குகளில் கூடுதல் கவனம் தேவைப்படும். 10.3.18 முதல் 2.5.18 வரை செவ்வாயுடன் சனி சேர்ந்திருப்பதால், பணம் கொடுக்கல், வாங்கல் விஷயத்தில் ஏமாற்றம் ஏற்படக்கூடும். கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. 3.5.18 முதல் 30.10.18 வரை செவ்வாயுடன் கேது சேர்ந்திருப்பதால் தந்தைவழி சொத்துகளில் சிக்கல்கள் ஏற்படலாம்.

30.8.18 முதல் 28.12.18 வரை சுக்கிரன் 6ல் சென்று மறைவதால், சிறுசிறு விபத்துகள், வீட்டுப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். சிறு அளவில் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும். வருடம் முழுவதும் அஷ்டமச் சனி தொடர்வதால், குடும்பத்தினருடன் அனுசரித்துச் செல்லவும். உங்கள் பொறுப்புகளை நீங்களே முன்னின்று முடிப்பது நல்லது. முக்கிய ஆவணங்களில் கையெழுத்து போடும் முன்பாக சட்ட நிபுணர்களின் ஆலோசனையைக் கேட்பது அவசியம்.

ஆண்டின் தொடக்கம் முதல் 2.10.18 வரை குருபகவான் 6ல் மறைந்து சகட குருவாக இருப்பதால், ஒரே நாளில் பல வேலைகளையும் சேர்த்துப் பார்க்கவேண்டி இருக்கும். கணவன் மனைவிக்கு இடையில் அனுசரணை தேவை. 14.2.18 முதல் 10.4.18 வரை, விசாக நட்சத்திரம் 4ம் பாதத்தில் அதிசார வக்கிரத்திலும்; 3.10.18 முதல் வருடம் முடியும் வரை குரு உங்களுடைய ராசிக்கு 7ம் வீட்டிலும் அமர்ந்து ராசியைப் பார்ப்பதால் உங்களுடைய திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். வருமானம் உயரும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். அடகிலிருந்த நகை, பத்திரங்களை மீட்க வழி பிறக்கும்.

வியாபாரிகளே! புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். டெண்டர்கள் மற்றும் அரசாங்க விஷயங்களில் பல முறை யோசித்து முடிவெடுக்கவும். பழைய பாக்கிகளைப் போராடித்தான் வசூலிக்க வேண்டி இருக்கும். பங்கு தாரர்களால் பிரச்னைகள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உத்தியோக ஸ்தானாதிபதி சனி 8ல் இருப்பதால், எதிலும் ஸ்திரமற்ற நிலையே காணப்படும். வேலைவிஷயத்தில் அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். சக ஊழியர்களின் விஷயத்தில் தலையிட வேண்டாம். சிலருக்கு உத்தியோகம் தொடர்பான வழக்குகளை எதிர்கொள்ள நேரிடும்.

மாணவ மாணவியர்களே, பாடங்களில் கூடுதல் கவனம் செலுத்தவும். கலைத் துறையினரே, கிடைக்கும் வாய்ப்பைத் தவறாமல் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு பல சோதனைகளைத் தந்தாலும், திட்டமிட்டுச் செயல்படவேண்டியதன் அவசியத்தை உணர்த்துவதாக அமையும்.

பரிகாரம்: சுவாதி நட்சத்திர நாளில், சித்தாண்டி முருகப்பெருமானை வணங்கி வாருங்கள், தீவினைகள் நீங்கி, சந்தோஷம் பொங்கிப் பெருகும்.

## மிதுனம்

**மிருகசீரிடம் 3,4ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1, 2,3ம் பாதம்**

எதையும் மறைக்காமல் பேசுபவர்களே! சுக்கிரன் உங்கள் ராசியைப் பார்க்கும் வேளையில் புத்தாண்டு பிறப்பதால், உங்கள் திறமைகள் வெளிப்படும். பிரச்சனைகளின் மூலத்தைக் கண்டறிந்து களைவீர்கள். எதிர்பார்த்த தொகை கைக்கு வரும். சிலருக்கு, சொந்தமாக வீடு வாங்கும் யோகம் உண்டாகும்.



ஆண்டின் தொடக்கம் முதல் 2.10.18 வரை குருபகவான் 5ம் வீட்டில் அமர்ந்திருப்பதால், மாறுபட்ட சிந்தனையால் செயற்கரிய வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். சுபநிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். வருமானம் உயரும். கணவன் மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். மகளுக்கு நல்ல வரனும், மகனுக்கு வெளிநாடு தொடர்புடைய நிறுவனத்தில் வேலையும் அமையும். பூர்வீகச் சொத்து கைக்கு வரும். வழக்குகளில் தீர்ப்பு சாதகமாகும். புதுப் பதவிக்கு உங்கள் பெயர் பரிந்துரை செய்யப்படும். அரசாங்க வகையில் அனுகூலம் உண்டாகும்.



ஆனால், குரு பகவான் 14.2.18 முதல் 10.4.18 வரை, விசாக நட்சத்திரம் 4ம் பாதத்தில் அதிசார வக்கிரத்தில்; 3.10.18 முதல் வருடம் முடியும் வரை, ராசிக்கு 6ம் வீட்டில் சென்று மறைந்து சகட குருவாக அமர்வதால், இனம்தெரியாத கவலைகள் வந்து போகும். கணவன் மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. உத்தியோகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

உங்கள் ராசிக்கு 12ல் சந்திரன் இருக்கும்போது புத்தாண்டு பிறப்பதால், ஆதாயமும் உண்டு அலைச்சலும் உண்டு. பணம் எவ்வளவு வந்தாலும் பற்றாக்குறை நீடிக்கும். பழைய நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். வீடு கட்டும் பணியை மறுபடியும் தொடங்க வங்கிக் கடனுதவி கிடைக்கும். புத்தாண்டின் தொடக்கத்தில் புதன் 6ல் மறைந்திருப்பதால், நரம்புச் சுளுக்கு, கழுத்து வலி, காய்ச்சல் வந்து செல்லும். செவ்வாய் 5ல் இருப்பதால், சொத்து வாங்குவதில் விற்பதில் வில்லங்கம் ஏற்பட்டு நீங்கும். சகோதரர்களை அனுசரித்துச் செல்லவும்.

ஆண்டு முழுவதும் சனி 7ல் கண்டகச் சனியாக இருப்பதால், கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. வாழ்க்கைத்துணையின் ஆரோக்கியம் சிறு அளவில் பாதிக்கப்படக்கூடும். குடும்ப விஷயத்தில் மற்றவர்களின் தலையீட்டை அனுமதிக்க வேண்டாம். வழக்குகளால் நெருக்கடி ஏற்பட்டு நீங்கும். கைப்பொருள்களை பத்திரமாகப் பார்த்துக்கொள்ளவும்.

13.1.18 வரை சூரியன் சனியுடன் சேர்ந்திருப்பதால் இளைய சகோதர வகையில் அலைச்சல் ஏற்படக்கூடும். கர்ப்பிணிப் பெண்கள் கவனமாக இருக்க வேண்டும். 10.3.18 முதல் 2.5.18 வரை செவ்வாயுடன் சனி சேர்ந்திருப்பதால், வாழ்க்கைத் துணையின் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டாலும் உடனே சரியாகி விடும். 3.5.18 முதல் செவ்வாய் கேதுவுடன் சேர்ந்திருப்பதால், மற்றவர்களை நம்பிப் பணம் கொடுத்து ஏமாற வேண்டாம். இரவில் தொலைதூரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. வருடம் முழுவதும் 2ல் ராகுவும் 8ல் கேதுவும் தொடர்வதால், பேசும்போது வார்த்தைகளில் கவனம் தேவை.

வியாபாரத்தில், சந்தை நிலவரங்களை உஷாராகக் கவனிக்கவேண்டும். பெரிய முதலீடுகள் வேண்டாம். பிரபலங்கள் வாடிக்கையாளர்களாவார்கள். வெளிநாடு, வெளி மாநிலத்துடன் வியாபாரத் தொடர்புகள் விரிவடையும். தேவையான கடனுதவி கிடைக்கும். பங்குதாரர்களை மாற்றவேண்டி வரும். பிளாஸ்டிக், கெமிக்கல், உணவு, வாகன உதிரி பாகங்களால் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சம்பளம் மற்றும் பதவி உயர்வை எதிர்பார்க்கலாம்.

மாணவ மாணவியர்களே, படிப்பிலும் போட்டிகளிலும் சாதிப்பீர்கள். நண்பர்கள் விஷயத்தில் கவனமாக இருக்கவும். மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு தடைகளை ஏற்படுத்தினாலும், உங்களை மாற்றுப் பாதையில் செல்லவைத்து வெற்றி பெறவைப்பதாக அமையும்.

பரிகாரம்: கொக்கூரில் நரசிங்க பைரவரை, தேய்பிறை அஷ்டமி திதி நாளில் சென்று வணங்கி வர நற்பலன்கள் அதிகரிக்கும்.

## கடகம்

**புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்**

மற்றவர்கள் மதிக்கும்படி நடந்துகொள்பவர்களே! உங்களுடைய ராசிக்கு லாப வீட்டில் சந்திரன் நிற்கும்போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால், சாதிக்கும் எண்ணம் அதிகரிக்கும். சவாலான காரியங்களையும் எளிதாக முடித்துக் காட்டுவீர்கள். வீட்டை விரிவுபடுத்த, தொழில் தொடங்க வங்கிக் கடன் கிடைக்கும்.



வருடம் முழுவதும் சனிபகவான் உங்களுடைய ராசிக்கு 6ம் இடத்தில் வலுவாக அமர்ந்திருப்பதால் எதிலும் வெற்றி பெறுவீர்கள். திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத் துணைவர் உங்களுடைய முயற்சிகளை ஆதரிப்பார். அயல்நாடு செல்லும் வாய்ப்பு ஏற்படும். பெரிய பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப் படுவீர்கள். வழக்கு சாதகமாகும். தொலைதூரத்திலுள்ள புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். திருமணப் பேச்சு வார்த்தை சுமுகமாக முடியும்.

ஆண்டு பிறக்கும்போது சூரியன் 6லும், புதன் 5லும் அமர்ந்திருப்பதால் அரசு காரியங்கள் சுலபமாக முடியும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். ஆனால், சுக்கிரன் 6ல் மறைந்திருப்பதால், வாகன விபத்து, சளித் தொந்தரவு, அலர்ஜி, தொண்டை வலி வந்து போகும்.

வருட ஆரம்பத்திலிருந்து 2.10.18 வரை உங்கள் ராசிக்கு 6 மற்றும் 9ஆம் இடங்களுக்கு உரிய குருபகவான் 4ல் இருப்பதால், எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடு, தாயின் உடல் நலனில் சிறியளவில் பாதிப்புகள் ஏற்படலாம். சொத்து வாங்குமுன் வழக்கறிஞரிடம் கலந்து ஆலோசிக்கவும். பொதுவாக எந்தச் சொத்து வாங்கினாலும் வாழ்க்கைத் துணைவரின் பெயரில் வாங்குவது நல்லது.

14.2.18 முதல் 10.4.18 வரை, விசாக நட்சத்திரம் 4ம் பாதத்தில் அதிசார வக்கிரத்தில் செல்வதாலும்; 3.10.18 முதல் வருடம் முடியும் வரை உங்கள் ராசிக்கு 5ம் வீட்டில் குரு அமர்வதாலும் புதிய எண்ணங்கள் செயல் வடிவம் பெறும். குடும்ப வருமானத்தை உயர்த்துவீர்கள். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். மகன் அல்லது மகளுக்கு, தடைப்பட்ட திருமணம் கூடிவரும். மகனின் உயர்கல்வி, உத்தியோகம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் நல்ல விதத்தில் முடியும். பூர்வீகச் சொத்துப் பிரச்னை முடிவுக்கு வரும்.

1.1.18 முதல் 13.1.18 வரை சூரியனும், சனியும் 6ல் அமர்ந்திருப்பதால், பிள்ளைகளால் இருந்துவந்த பிரச்னைகள் நீங்கும். வழக்கில் நல்ல தீர்ப்பு கிடைக்கும். சொந்த ஊரில் மரியாதை கூடும். பணபலம் அதிகரிக்கும். 10.3.18 முதல் 2.5.18 வரை உள்ள காலகட்டத்தில் செவ்வாயுடன் சனி சேர்வதால், மறைமுக எதிரிகளை இனங்கண்டறிந்து ஒதுக்குவீர்கள். 3.5.18 முதல் 30.10.18 வரை செவ்வாயுடன் கேது சேர்வதால், வாழ்க்கைத்துணைக்கு மருத்துவச் செலவுகள் வந்து போகும். பிள்ளைகளால் அலைச்சல் ஏற்படக்கூடும். 1.1.18 முதல் 13.1.18 வரை சுக்கிரன் 6ல் மறைவதால், குடும்பத்தில் சலசலப்பு இருக்கும். வருடம் முடியும் வரை உங்கள் ராசிக்குள் ராகுவும், 7ல் கேதுவும் இருப்பதால் முன்கோபம், மன சஞ்சலம் வந்து செல்லும். கணவன் மனைவிக்குள் ஈகோ பிரச்னைகள் வரக்கூடும்.

வியாபாரத்தில் விளம்பர யுக்திகளால் பழைய சரக்குகளை விற்றுத் தீர்ப்பீர்கள். திடீர் லாபம் அதிகரிக்கும். புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். அயல்நாட்டுத் தொடர்புடனும் வியாபாரம் செய்வீர்கள். பதிப்பகம், கன்ஸ்ட்ரக்ஷன், மூலிகை வகைகளால் லாபம் அடைவீர்கள். உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும்.

மாணவ மாணவியர்களே, நீங்கள் எதிர்பார்த்த நிறுவனத்தில் உயர்கல்வியைத் தொடருவீர்கள். கலைத்துறையினரே, அரசால் கௌரவிக்கப்படுவீர்கள்.

மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு, உங்களின் நீண்ட காலக் கனவுகளை நனவாக்குவதாக அமையும்.

**பரிகாரம்:** முள்ளியவளை காட்டு விநாயகரை, சதுர்த்தி திதி நாளில் தரிசித்து வணங்கி வாருங்கள்; கிரக தோஷங்கள் நீங்கி, நன்மைகள் அதிகரிக்கும்.

– தொடரும்

# புலிகளின் பகுதியில் நடந்த கிளைமோர் தாக்குதலை நடத்தியது யார்?

## இராணுவம் இல்லையென்பது பொட்டம்மானிற்கு நன்கு தெரியும்!

பீஷ்மர்

**2001**இல் மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் ஒருவர் மீது குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது, அதில் அந்த முக்கியஸ்தர் கொல்லப்பட்டார் என கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தேன். இதில் ஒரு சிறு திருத்தம். அந்த தாக்குதலில் அவர் கொல்லப்பட வில்லை. காலொன்றை இழந்தார்.

ஏன் நடந்தது இது?

கிழக்கிற்கு வந்த கருணா தலைமையிலான படையணிகள் வழக்கமான தமது நிர்வாகத்தையே ஏற்படுத்தினார்கள். ஆனால் புலிகளின் சிவில் நிர்வாக நடைமுறைகள் கிழக்கிற்கு வந்தபோது, கருணா அதை விரும்பவில்லை, குழப்புவதில் குறியாக இருந்தார் என்பதை கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தேன்.


காவல்துறை, நிதிதுறை, புலனாய்வுத்துறை சம்பந்தப்பட்ட விவகாரங்களில் எப்படியான குழப்பங்கள் நடந்தன என்பதையும் குறிப்பிட்டிருந்தேன். இதில் புலனாய்வுத்துறை விவகாரங்களில்தான் அதிக சிக்கல் நீடித்தது. மற்றைய துறைகளை விட புலனாய்வுத்துறைதான் முக்கியமானது என்பது புலிகளிற்கும் தெரியும், கருணாவிற்கும் தெரியும். ஏதாவது இரகசிய நடவடிக்கைகள் செய்வதென்றாலும் புலனாய்வுத் துறையினர்தான் செய்வார்கள்.



**இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன 63**



இதில் வட்டமிடப்பட்டவர்தான் தேவன்



ரமணன்

ஏனைய பிரிவினர் செய்வதில்லை. இரண்டு தரப்பும் வெளிப்படையாக மோதிக்கொள்ளாத வரையிலும் புலனாய்வுத்துறைதான் இரகசியமாக மோதிக்கொள்வார்கள். பலமான புலனாய்வு கட்டமைப்பை வைத்திருப்பவர்கள்தான் இந்த மறைமுக போரில் வெற்றியடையலாம்.

2001 இல் இருந்து மட்டக்களப்பை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க பொட்டம்மானும், கருணாவும் இரகசிய போரில் ஈடுபட்டனர். இது வெளியுலகத்திற்கு தெரியாது. தனக்கு நம்பிக்கையான ஒரு புலனாய்வு கட்டமைப்பை உருவாக்க பொட்டம்மான் முயற்சித்தார். அதை உடைத்து, தனக்கான கட்டமைப்பை உருவாக்க கருணா விரும்பினார்.

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் பல புலனாய்வு கட்டமைப்புக்கள் இயங்கின. பொட்டம்மானின் கீழ்இயங்கிய புலனாய்வுகட்டமைப்பில் பல அங்கங்கள் இருந்தன. உள்ளக பாதுகாப்பு, வெளியக புலனாய்வு என பிரதான அங்கங்கள் இருந்தாலும், வெளியக புலனாய்வின் கீழ் பல அணிகள் இயங்கின. ஒவ்வொரு பொறுப்பாளரின் கீழும் ஒரு புலனாய்வு வலையமைப்பு இருந்தது. உதாரணமாக, கொழும்பில் கூட நான்கைந்து பொறுப்பாளர்களின் கீழ் வலையமைப்புக்கள் இருக்கும். ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டிருக்காது.

இப்படி மட்டக்களப்பில் பல பொறுப்பாளர்களின் கீழ் வலையமைப்புக்கள் இயங்கின. மட்டக்களப்பிற்குரிய வலையமைப்புக்கள் மட்டுமன்றி, தென்னிலங்கைக்குமான வலையமைப்புக்களும் மட்டக்களப்பில் இருந்துதான் இயங்கின. தென்னிலங்கைக்கும் மட்டக்களப்பிற்கும் தரைவழி தொடர்பு தடங்கலின்றி இருந்ததே இதற்கு காரணம். தென்னிலங்கைக்கு வெடிமருந்துகள், ஆயுதங்கள், தற்கொலை அங்கிகள், தற்கொலை படையாளிகளுக்கான வாகனங்கள் எல்லாம் மட்டக்களப்பில் இருந்துதான் கொண்டு செல்லப்பட்டன.

புலிகளின் கொழும்பு நடவடிக்கை மையமாக மட்டக்களப்பு இயங்கியதென்று சொல்லலாம். விடுதலைப்புலிகளின் புலனாய்வுத்துறை முக்கியஸ்தராக இருந்தவர் நியூட்டன். கொழும்பு நடவடிக்கைகளிற்கு பொறுப்பாக இருந்தவர். நீண்டகாலமாக இவர் மட்டக்களப்பில்தான் தங்கியிருந்தார். பின்னர் கொழும்பில் நடந்த “இரகசிய ஒப்ரேசன்” ஒன்றில் பாதுகாப்பு பிரிவினரால் தூக்கப்பட்டிருந்தார்.

கிழக்கு படையணிகள் வன்னியில் நின்ற சமயத்திலும் புலிகளின் புலனாய்வு கட்டமைப்பு கிழக்கில் இருந்தது. அப்போது ரெஜினோல்ட் என்பவர் மட்டக்களப்பில் பொறுப்பாக இருந்தார். கருணா மட்டக்களப்பிற்கு திரும்பியதும், தன்னுடன் நெருக்கமாக இருந்த புலனாய்வுத் துறையினரை அழைத்து தொடர்ச்சியாக கலந்துரையாடல் நடத்தினார். கருணாவிடமும் ஒரு புலனாய்வு கட்டமைப்பு இருந்தது. அதன் பொறுப்பாளராக ரமணன் இருந்தார். கீர்த்தி, நீலன், பிரபா போன்றவர்கள் புலனாய்வுத்துறை கட்டமைப்பின் கீழ் மட்டக்களப்பில் இயங்கி வந்தனர்.

புலனாய்வுத்துறை கட்டமைப்பில் 2001இலேயே குழப்பங்கள் ஆரம்பித்தன. மட்டக்களப்பில் செயற்படும் புலனாய்வுத்துறை கட்டமைப்புக்கள் தனது கண்காணிப்பின் கீழ் செயற்பட வேண்டுமென கருணா அடம்பிடிக்க ஆரம்பித்தார். ஆனால்பொட்டம்மான் அதற்கு சம்மதிக்கவில்லை. ஆனாலும் அடிக்கடி மட்டக்களப்பிலுள்ள புலனாய்வு போராளிகளை சந்திப்பிற்கு அழைத்து, தனது கட்டளையின் கீழ் செயற்பட வேண்டுமென கருணா அறிவுறுத்திக் கொண்டேயிருந்தார்.

இதேவேளை, புலனாய்வுத்துறையின் கீழ்செயற்பட்ட போராளிகளில் கிழக்கு போராளிகளை அடையாளம் கண்டு, அவர்களுடன் தொடர்பேற்படுத்தி, வடக்கிலுள்ளவர்களின் சொற்படி நடக்க தேவையில்லையென்ற கருத்தையும் ஏற்படுத்த தொடங்கினார்கள். இதற்கு ஓரளவு பலனும் கிடைத்தது. முன்னர் குறிப்பிட்ட ரெஜினோல்ட் உள்ளிட்ட சில பொறுப்பாளர்கள் தம்மால் புலனாய்வுத்துறை கட்டமைப்பிற்குள் செயற்பட முடியாதென விடுதலைப்புலிகளின் தலைமை செயலகத்திற்கு தனித்தனியாக கடிதங்கள் அனுப்பினார்கள்.

இது புலிகளிற்குள் பெரும்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

குழப்பத்தை ஏற்படுத்தியது. அப்போது தலைமைசெயலகத்திற்கு பொறுப்பாக இருந்தவர் தேவன். பிரபாகரனின் பாதுகாப்பு பிரிவிற்கு பொறுப்பாக இருந்தவர். அவரை பற்றிய சிறு குறிப்பொன்றை தந்துவிட்டு, கிழக்கு பிரச்சனையை தொடர்கிறேன்.

இம்ரான் பாண்டியன் படையணி தளபதியாகஇருந்தவர் கடாபி(ஆதவன்). இம்ரான் பாண்டியன் படையணிதான் பிரபாகரனது பாதுகாப்பிற்கு பொறுப்பாக இருந்தது. அதனால் இரகசியம் பேணுவது முக்கியமானது. விடுதலைப்புலிகளிடம் புலனாய்வு அமைப்பொன்று இருந்தாலும், இம்ரான் பாண்டியன் படையணியும் தனியாக ஒரு புலனாய்வு அமைப்பை உருவாக்கினார்கள். இர்ட்ணம் மாஸ்ரர்தான் இதன் பொறுப்பாளர். பிரபாகரனின் பாதுகாப்பில் அக்கறையாக இருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், இம்ரான் பாண்டியன் படையணியில் கடுமையான நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. பாதுகாப்பு பிரிவில்இருப்பவர்கள் தவறு செய்தால், வீடு செல்லப்போகிறோம் என்றால், இந்த புலனாய்வுத்துறையின் கீழிருந்த சிறைச்சாலையில் அடைத்து விடுவார்கள். இருட்டறை, கம்பிக்கூடு போன்ற பயங்கர நடைமுறைகள் அங்கிருந்தன. இதனால் போராளிகள் உடல்ரீதியாக கடுமையான பாதிப்புக்களை சந்திக்க ஆரம்பித்தனர்.

பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சைக்காக செல்ல, இது டொக்ரர் அன்ரியின் (எழுமதி கரிகாலன்) பாதுகாப்பு, விமான எதிர்ப்பு அணி, தரை கரும்புலிகள், விக்டர் கவச எதிர்ப்பு படையணி, ராங்கி அணி, விடுதலைப்புலிகள் வாங்கும் எந்த புதியரக கனரக ஆயுதமானாலும் அது கடாபியின் கீழ்தான் வரும், ஏனைய படையணிகளிற்கான கனரக ஆயுத பயிற்சி என பலபிரிவுகளிற்கு கடாபி பொறுப்பாக இருந்தார். இந்த சிறை சம்பவத்துடன் அவரை வேறு பொறுப்பிற்கு மாற்றினார் பிரபாகரன். புலிகளிற்குள் இந்தவகையான நடவடிக்கைக்கு 'காற்று இறக்கல்' என்ற சொல் பாவிக்கப்படும். புதிய போராளிகளிற்கு பயிற்சியளிப்பதற்கு பொறுப்பாக கடாபி நியமிக்கப்பட்டார். தேவன் திருகோணமலைக்கு மாற்றப்பட்டார்.

இந்த தேவன் தலைமை செயலகத்திற்கு பொறுப்பாக இருந்த சமயத்தில்தான் மட்டக்களப்பில் இருந்து ரெஜினோல்ட் உள்ளிட்ட சிலரது கடிதம் வந்தது. இது புலனாய்வுத்துறை சம்பந்தப்பட்ட விசயம். இந்த இடத்தில் புலிகளின் தலைமைசெயலகம் பற்றிய சிறு விளக்கம் தர வேண்டும். அனைத்து போராளிகளின் பதிவும், ஆயுதங்களின் பதிவும் தலைமைசெயலகத்தில் இருக்கும். சில இரகசிய செயற்பாட்டில் இருக்கும் போராளிகள் பற்றிய விபரம் தலைமை செயலகத்தில் இருக்காது. அதேபோல, புலிகள் புதிதாக ஏதாவது இரகசிய ஆயுதங்கள் இறக்குமதி செய்து பாவனையில் வைத்திருந்தால், அதுவும் பதிவிற்கு வராது. புலிகள் 1996 இல் SPG 9 என்ற ராங்கி எதிர்ப்பு ஆயுதத்தை இறக்குமதி செய்ததாக முன்னர் குறிப்பிட்டிருந்தேன். கிட்டத்தட்ட இரண்டரைவருடங்கள்தலைமை செயலக பதிவிற்கு அது செல்லவில்லை. அதுபோல, ஆயுத களஞ்சியங்களில் உள்ள ஆயுதங்களின் விபரமும் இருக்காது. படையணி மாற்றப்படும் போராளிகள் தலைமைச்செயலகம் சென்று, அங்கிருந்தான் செல்வார்கள். ஆனால் தலைமைசெயலகமாக யாரையும் இடமாற்றம் செய்யவோ, படையணி மாற்றம் செய்யவோ முடியாது. அமைப்பிற்குள் நடக்கும் மாற்றங்களை பதிவு செய்வார்கள் அவ்வளவுதான். ஆனால் போராளிகளின் பிரச்சனைகளை, கருத்துக்களை தலைமைசெயலகத்திற்கு எழுதினால், சம்பந்தப்பட்டவர்களுடன் கதைத்து முடிவெடுப்பார்கள்.

மட்டக்களப்பு புலனாய்வுத்துறை முக்கியஸ்தர்கள் ரெஜினோல்ட் தலைமையில் தலைமை செயலகத்திற்கு கடிதம் எழுதியதும், அது பெரிய குழப்பமாகியது. தலைமைசெயலகம் இதில் நடவடிக்கை எடுக்க முடியாது. மட்டக்களப்பிலுள்ள தலைமை செயலக பொறுப்பாளரை தொடர்பு கொண்டு, ரெஜினோல்ட் ஆட்களுடன் பேசி காரணத்தை அறிய சொன்னார்கள். மட்டக்களப்பு தலைமை செயலக பொறுப்பாளர் உடனே ரெஜினோல்ட் ஆட்களை அழைத்து என்ன பிரச்சனையென விசாரித்தார். ரெஜினோல்ட் ஆட்கள் ஒரே வார்த்தையில் பதில் சொன்னார்கள் 'நாங்கள் அம்மானின் கட்டளையின் கீழ் செயற்படவே விரும்புகிறோம்' என.

தலைமை செயலகத்தில் இருப்பவர்கள் அடிக்கடி இப்படியான பிரச்சனைகளை சந்திப்பது வழக்கம்தான். 'இந்த தளபதியின் கீழ் செயற்படமாட்டேன். அந்த தளபதியின் கீழ்தான் செயற்படுவேன்' என போராளிகள் சொல்வது சகஜம்தான். ஆனால் மட்டக்களப்பில் நடந்தது வேறு வகை. ஒரு பின்னணி சக்தியின் துணையுடன் போராளிகள் ஆட்டுவிக்கப்பட்டனர்.

இந்த விடயம் பிரபாகரன், பொட்டம்மானிடமும் சென்றது. அவர்களிடம் இரண்டு தெரிவுகள் இருந்தன. ஒன்று பிரச்சனையை கிளப்புகிறார்கள் என ஒரேயடியாக வீட்டுக்கே அனுப்பிவிடலாம். அப்படி நடந்தால் அது கருணாவையும் சீண்டும். கருணா நீண்ட நாளுக்கு ஒழித்து பிடித்து விளையாட முடியாது.

இரண்டாவது தெரிவு விட்டு பிடிப்பது. ரெஜினோல்ட் ஆட்களின் விருப்பபடி, புலனாய்வுதுறை நிர்வாகத்திலிருந்து விலகி, கருணாவின் கீழ் செயற்பட அனுமதிப்பது. இப்படி செய்தால், கிழக்கு சிக்கல் உடனடியாக வளராது.

புலிகள் இரண்டாவதையே தெரிவு செய்தனர்.

ரெஜினோல்ட் ஆட்கள் விரும்பிய படி கருணாவின் கீழ்செயற்படலாமென புலிகள் அனுமதித்தனர். கிட்டத்தட்ட பதினேழு வரையான புலனாய்வுதுறை போராளிகள் இந்த சமயத்தில் கருணாவின் கீழ் சென்றனர். பதினேழு பேர் என்பது புலனாய்வு செயற்பாட்டில் பெரிய தொகை. ஆனால், புலிகளிற்கு அது பெரிதாக இடிக்கவில்லை. காரணம், அதில் பெரும்பாலானவர்கள் புதியவர்கள். நீண்டகாலம் இயக்கத்தில் இருந்தவர்களும் புலனாய்வு செயற்பாட்டில் கில்லாடிகள் கிடையாது. புலனாய்வு செயற்பாட்டில் இரண்டு வகையானவர்கள் இருப்பார்கள். ஒன்று, நுணுக்கமாக திட்டமிட்டு பின்னணியில் இருந்து அதை செயற்படுத்தபவர்கள். மற்றையது, இப்படி நுணுக்கமான திட்டமிடும் திறமைகள் இல்லாவிட்டாலும், துணிந்து அதை செய்யும் ஆற்றல். புலனாய்வுத்துறையிலிருந்து வெளியேறியவர்கள் பெரும்பாலானவர்கள் இந்த வகையானவர்கள்தான்.

ரெஜினோல்ட் தலைமையில் புலனாய்வுத்துறையிலிருந்து ஒரு அணி வெளியேறியதும், பொட்டம்மான் நீலன் தலைமையில் புதிய நிர்வாக கட்டமைப்பொன்றை உருவாக்கினார். நீலன் எற்கனவே மட்டக்களப்பில் புலனாய்வுதுறையின் வேறொரு வேலையாக நின்றவர்.

ரெஜினோல்ட் தலைமையில் சென்றவர்களை வைத்துகருணா தனக்கு கீழ் இன்னொரு புலனாய்வு அணியை உருவாக்கினார். ஏற்கனவே ரமணனின் கீழ் ஒரு புலனாய்வு அணி இருக்க, ரெஜினோல்ட்டின் கீழ் இன்னொரு அணி உருவாக்கப்பட்டது. இரகசிய நடவடிக்கைகள் செய்வதற்காக உருவாக்கப்பட்ட அணி அது!

*2001ம் ஆண்டு.* புல்லுமலையில் ஒரு கிளைமோர் தாக்குதல் நடந்தது. புலனாய்வுத்துறை பொறுப்பாளர்களில் ஒருவராக இருந்த அற்புதன் மாஸ்ரரின் மீது அந்த தாக்குதல் நடந்தது. அற்புதன் மாஸ்ரர் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர். ரெஜினோல்ட் அணி வெளியேறிய பின்னர், அற்புதன் மாஸ்ரர்தான் மட்டக்களப்பு விவகாரங்களை கவனிக்க (நீலனின் கீழ்தான் செயற்பட்டவர்) பொட்டம்மானால் நியமிக்கப்பட்டவர். அற்புதன் மாஸ்ரர் மீதான தாக்குதல் இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணியால் நடத்தப்பட்டதென, புலிகளின் தலைமைக்கு கருணாவின் தகவல் மையத்திலிருந்து அறிவிக்கப்பட்டது.

**ரெஜினோல்ட் தலைமையில் சென்றவர்களை வைத்து கருணா தனக்கு கீழ் இன்னொரு புலனாய்வு அணியை உருவாக்கினார். ஏற்கனவே ரமணனின் கீழ் ஒரு புலனாய்வு அணி இருக்க, ரெஜினோல்ட்டின் கீழ் இன்னொரு அணி உருவாக்கப்பட்டது. இரகசிய நடவடிக்கைகள் செய்வதற்காக உருவாக்கப்பட்ட அணி அது!**


பொட்டம்மான் - வை.கோ - பிரபாகரன் (மணலாற்று காட்டுக்குள்)

கவனத்திற்கு சென்றது. இது பற்றி பிரபாகரனிற்கு ஒரு அறிக்கை அனுப்பினார். அறிக்கையை படித்த பிரபாகரன், அந்த சிறைச்சாலையை உடனடியாக இடிக்க சொன்னார். அப்போது தலைமைசெயலக பொறுப்பாளராக இருந்த தேவனிடம் அதை கண்காணிக்குமாறும் உத்தரவிட்டிருந்தார்.


தேவன் இம்ரான்பாண்டியன் படையணியிலிருந்து வளர்ந்தவர். கடாபியை மீறி சிறையை உடைக்க விரும்பவில்லை. கடாபியும் உடைக்க விரும்பவில்லை. அதனால் சிறை உடைக்கப்படாமலேயே இருந்தது. இதை அறிந்த பிரபாகரன், பிரபாகரன், தேவன் இருவரையுமே அவர்களின் பொறுப்பிலிருந்து நீக்கினார். 2001 வரை விடுதலைப்புலிகள் அமைப்பின் மிக சக்தி வாய்ந்த நபராக இருந்தவர் கடாபி. பிரபாகரனது

புல்லுமலை புலிகளின் முழுமையான கட்டுப்பாட்டு பிரதேசம். அங்கு அதற்கு முன்னரும் இராணுவத்தின் கிளைமோர் தாக்குதல் நடக்கவில்லை. பின்னரும் நடக்கவில்லை.

அற்புதன் மாஸ்ரர் மீதான தாக்குதலின் பின்னணி என்னவென்பது புலிகளில் இரண்டு தளபதிகளிற்கு தெரியும். ஒன்று கருணா. மற்றையது பொட்டம்மான்! (தொடரும்)


கு.நக்கீரன்
உளவள ஆலோசகர்





# மனமே நலமா?

## உங்கள் சந்தேகங்களை கேளுங்கள்



பெண் (26)
வற்றாப்பளை

**கேள்வி: எனக்கு திருமணமாகி 9 மாதங்கள் ஆகிறது. கணவரில் அன்பாகத்தான் இருக்கிறேன். எனக்கு அடிக்கடி கோபம் வருகிறது. சட்டென எரிந்து விழுந்து பேசுகிறேன். திருமணமான போது இப்படியில்லை, இப்போதுதான் எனது இயல்பு மாறிவிட்டது என்கிறார் கணவர். தன்னில் சலிப்பு வந்துவிட்டதால்தான் அப்படி நடக்கிறேன் என்றும் கூறுகிறார். அவர் அப்படி சொல்வது எனக்கு கவலையாக உள்ளது. இதை நான் அறிந்து செய்வதில்லை. மாற்ற விரும்புகிறேன். என்ன செய்யலாம்?**

**பதில்:** அன்புத் தங்கையே! உங்கள் கடிதத்தைப் படிக்கும் பொழுது எனக்கு திடீரென வடிவேலுவின் நினைப்பு வந்துவிட்டது. அதாவது "என் நெத்திக்கு நேரே என் விரலை நீட்டி உனக்கு இது தேவையா?" என்று வடிவேலு கேட்பது ஞாபகத்திற்கு வருகின்றது. என்ன செய்ய? கோபிக்க வேண்டாம் சகோதரி!

மனித உளவியலின் அடிப்படையே மனிதரின் எண்ணங்களின், (உள்ளத்தின்) பரிணமிப்புக்களே நடத்தையில் வெளிப்படுகின்றது எனும் தெளிவில் இருந்து பிறந்தது தானே. உண்மையில் மனிதனின் சிந்தனையை மாற்றாமல் நடத்தையை மாற்றுவது என்பது முடியாத காரியம் என உளவியளாலர்கள் சுட்டிக்காட்டிவிட்டனர். அதாவது சிந்தனை நடத்தையை விட மேலானது என்பதுதான் உண்மை. அதாவது நடத்தையில் இருந்து நடத்தையை மாற்ற முடியாது. சிந்தனையில் இருந்து நடத்தையை மாற்ற முடியும் என்பதுதான் உளவியல்.

அந்த வகையில் பார்க்கையில் உங்களின் மடலில் உங்களுக்கு அடிக்கடி கடுமையான கோபம் வருவதாகவும், ஆட்களுடன் எரிந்து விழுவதாகவும் கூறியுள்ளீர்கள். ஆட்களுடன் எரிந்து விழும் நடத்தை என்பது என்பது ஒரு உடலியல் சலீர் நடத்தையே ஆகினும், இங்கே கோபம் எனும் உணர்வுடன் இணைந்ததாகவே உள்ளது. உண்மையில் நீங்கள் கூறுவது போல் இது ஒரு பழக்கம் என்று சாதாரணமாகக் கூறிவிட முடியாது.

உங்களின் ஆழ்மனம் எனும் பகுதியினுள் புதையுண்டு கிடக்க கூடிய ஏதோ ஒரு விடயம்தான் இத்தகைய நிலைப்பாட்டிற்கு காரணமாக இருக்கலாம். ஆழ்மனதுள் புதைந்துள்ள அந்த விடயம் உங்களுக்குத் தெரிந்த அல்லது தெரியாதஒன்றாகஇருக்கலாம்.

முக்கியமாக இளமைக் காலத்தில் ஏற்பட்ட எதிர்மறையான ஏதாவது விடயங்கள், அது உங்களுக்கு நடந்தவீவாயகவோ, அல்லது வேறு யாருக்கும் நடந்தவையாகவோ இருக்கலாம். உங்களை அறியாமலே உங்களின் ஆழ்மனதில் புதைக்கப்பட்டு இருக்கலாம். இவற்றின் வெளிப்பாடக அடிக்கடி உங்களை அறியாத கோபம் மற்றும் எரிச்சல் மற்றும் ஆட்களுடன் சண்டையாக கதைத்தல் என்பவை இதனுடன் தொடர்புபட்டவையாகக் கருதப்படலாம். எனவே நீங்கள் உடனடியாக ஒரு நல்ல மனநல ஆலோசகரை சந்தித்துக் கதையுங்கள். உண்மையில் தொடர்ச்சியான உளவளத் துணையால் உங்களின் (ஆழ்மனப் பிரச்சினையை) அல்லது அடிக்கடி எரிச்சல்பட்டு சண்டையிடுவதன் காரணத்தைக் கண்டறிந்து அதில் இருந்து வெளியேறுவதற்கான பயிற்சிகளை பெற முடியும். தொடர்ச்சியான பயிற்சிகளின் விளைவாக உங்களின் திடீர் கோபம் மற்றும் அதனுடன் இணைந்த எரிச்சலான நடத்தைக் கோலத்தில் ஒரு பொருத்தமான மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

எது எப்படியாக இருந்தாலும் உங்களுக்கு உள்ள நடத்தைக் கோலம் தொடர்பாக நீங்கள் வழிப்புணர்வுடன் இருப்பதே மிகப் பெரிய விடயம் இப்பிரச்சினையில் இருந்து வெளியேற வேண்டும் எனும் அவா. எனவே "நல்ல தொடக்கம் பாதி வெற்றி" எனும் முது மொழிக்கு இணங்க பயமின்றி தொடருங்கள் வெற்றியும் உங்களுடையதே. ●

---

19-ம் பக்க தொடர்ச்சி...

அடித்தளமாக கடவுள் விசுவாசமும் தேர்ந்த இராணுவத் தொழில் நுட்பமும் விளங்கின. தலைமைக்குருவும் அதன் கீழ்படி நிலையில் அமைக்கப்பட்ட தட்டுவீரர்களாக அப்படை இயங்கியது. அவ்வீரர்கள் கடவுளுக்கு சேவை செய்பவர்கள் என்று நிர்ணயிக்கப்பட்டு குடும்ப வாழ்வைத் துறந்தவர்களாக இருந்தார்கள். எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் படையினரிடம் மிக உயர்ந்த கட்டுப்பாடு இருந்தது.

ஆனி மாதத்தில் சுல்தானின் படைகளின் முதல் பகுதி 400 போர்க்கப்பல்களுடன் முஸ்தபா பாஷாவின் தலைமையில் வந்திறங்கியபோதே தயாராக இருந்த புனித யோவானின் படையினர் முதல் அணியில் வந்த போர்க்கப்பல்களை மூழ்க வைத்தார்கள்.

சுலைமானின் படையில் சில ஆயிரம் பேர்கள் முதல் வாரத்திலேயே கொல்லப்பட்டார்கள். கோட்டைக்குள் தயாராக இருந்த புனித யோவானின் படைகளின் தாக்குதல் அத்தனை உக்கிரமாக இருந்தது.

ஒத்தமானியப் பீரங்கிப் படைகள் விடாமல் தங்கள் நவீன பீரங்கிகளால் தாக்கினார்கள். சில இடங்களில் கோட்டை மதில் ஓரளவு உடைந்தது. ஆனாலும் உள்ளே புகுமளவுக்கு எங்கேயுமே வழி கிடைக்கவில்லை. எனவே இரகசியமாகச் சுரங்கப் பாதைகளை உண்டாக்கி உள்ளே




The Ottoman Empire Under Suleiman I the Magnificient, 1580

புகுவதிலும் சுல்தானின் படையினர் ஆரம்பித்தனர்.

அதை எதிர்பார்த்திருந்த புனித யோவானின் படையினர் ஏற்கனவே இத்தாலியச் சுரங்கப் பொறியியலாளரான கபிரியேல்தடினி என்பவரை தங்களிடம் வேலைக்கமர்த்தியிருந்தார்கள். போரில் ஈடுபட முடியாத சிறுபிள்ளைகளை அரணில் ஆங்காங்கே காது வைத்து அடுத்த பக்கத்தில் சுரங்கம் தோண்டுவதை அறிந்து எதிரிகளை வீழ்த்தும் முறையை தடினி பாவித்தார். அவருடைய பிரத்தியேக திறமையினால் எங்கெங்கே சுரங்கத்துக்கான முயற்சிகள் நடக்கின்றன என்பதை மதிலின் உட்பாகத்திலிருந்து கணித்து அவைகளை எதிர்கொள்ள முடிந்தது.

மூன்று மாதங்களாக தொடர்ந்து தாக்கியும் ரோடோஸ் அரணை அசைக்க முடியவில்லை. விளைவாக தனது பால்ய நண்பனும், பல போர்களில் வெற்றியெடுத்து தந்தவனுமான முஸ்தபாபாஷாவை போர்த் தலைமையிலிருந்து விலக்கினார் ஒத்தமானிய அரசன் சுலைமான்.

காலம் கடந்து கொண்டிருந்தது ரோடோஸுக்கும் உலகுக்கும் இருந்த சகல தொடர்புகளையும் சுலைமான் தனது முற்றுக்கையின் மூலம் வெட்டிவிட்டான். வருடக் கடைசி மாதத்தில் புனித யோவானின் படையினரில் நான்கில் ஐந்து பகுதியினர்தான் மிச்சமிருந்தார்கள். போருக்கு தேவையான உபகரணங்கள், உள்ளே இருப்பவர்களுக்கு தேவையான உணவு மற்றும் பொருட்கள் எவையுமே வெளியிலிருந்து கொண்டு வரப்பட இயலவில்லை.

மார்கழி 11 13 திகதிகளில் போர் நிறுத்தமொன்று ரோடோஸின் வேண்டுகோளுக்கு இணங்க உண்டாக்கப்பட்டுப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்தன. ஆனால், புனித யோவானின் படைகளின் கோரிக்கைகளுக்கு உட்படாத சுலைமான் மீண்டும் ஆக்ரோஷமாக கோட்டையை தாக்க ஆரம்பித்தார்.

கோட்டை மதில்கள் தகர்க்கப்பட்டன. புனித யோவானின் படைகளின் சேதம் மேலும் அதிகரித்தது. நகர மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கி அவர்கள் சுலைமானிடம் சரணடைய ஒத்துக்கொண்டார்கள்.

புனித யோவானின் படையினர் பனிரெண்டு நாட்களுக்குள் ரோடோஸிலிருக்கும் தமது போர்த்தளபாடங்கள், சமய சின்னங்களுடன் ரோடோஸை விட்டு வெளியேற வேண்டும் என்று ஒத்தமானிய சுல்தான் கண்ணியமாக அனுமதித்தான்.

சுமார் இருநூறு ஆண்டுகளாக ரோடோஸில் கோலோச்சி ஒத்தமானிய சாம்ராஜ்யத்தின் விஸ்தரிப்புக்கு தலையிடியாக இருந்துவந்த புனித யோவானின் படையினர் இதன் மூலம் பெரும் வீழ்ச்சியை அடைந்தனர்.

மிச்சமிருந்த அவர்களுடைய சிறிய படை அதன்பின் மால்டாவில் தம்மை ஸ்தாபித்துக் கொண்டனர்.

[தொடரும்]

முன்கதை: ஸ்பெயின் நாட்டில் இருக்கும் மர்கோஸ் தீவிரவாதக் கும்பலைப் பிடிக்க வருகிறார் நாகராஜ். வில்லியம் கொடுத்த தகவல்படி, கால்பந்தாட்ட மைதானத்தில் ஒரு வீரனைச் சுட முயன்ற ஷாசா என்ற பெண்ணைத் தேடிக் கிளம்பியபோது, பலூன்களைப் பறக்கவிட்டபடி ஓர் ஊர்வலம் செல்கிறது.















தொடரும்...







# மந்திரம்... தந்திரம்!

## உடைத்தும் முழுமையாகும் தீக்குச்சி!

'உடைத்த தீக்குச்சியை மந்திரம் போட்டு முழுதாக மாற்றிக் காட்டுகிறேன். பார்க்கிறீங்களா?' என உங்கள் நண்பர்களுக்கு சவால்விட்டு, ஓர் அசத்தல் மஜிக் செய்யத் தயாரா?

நான்காக மடிக்கப்பட்ட கைக்குட்டையை விரித்து, நண்பர்களிடம் காட்டுங்கள்.

அதை மேசை மீது விரித்துவைத்து, இரண்டு நண்பர்களை அருகில் அழையுங்கள். தீப்பெட்டியில் இருந்து ஒரு தீக்குச்சியை எடுத்து, கைக்குட்டையின் மையத்தில் வைக்கச் சொல்லுங்கள்.

'இந்தத் தீக்குச்சியை கைக்குட்டையால் மூடப்போறேன். நல்லாப் பார்த்துக்கங்க. என் கையில் வேற தீக்குச்சி இல்லை' எனச் சொல்லி, உங்களின் இரண்டு கைகளையும் விரித்துக் காட்டுங்கள்.

பிறகு, ஒரு கையால் கைக்குட்டையில் இருக்கும் தீக்குச்சியைப் பிடித்துக் கொண்டு, இன்னொரு கையால் மூடுங்கள். கைக்குட்டை மூடிய குவிந்த விரல்களோடு நண்பர்களிடம் திரும்புங்கள். 'கைக்குட்டையின் உள்ளே, தீக்குச்சி இருக்கானு தொட்டுப் பாருங்க' எனச் சொல்லுங்கள்.

அவர்கள் தொட்டுப்பார்த்து, இருப்பதாகச் சொல்வார்கள். 'சரி, அந்தக் குச்சியை உடையுங்க' எனச் சொல்லுங்கள். துணிக்குள் இருக்கும் குச்சியை உடைப்பார்கள்.

'இப்போ பாருங்க. மந்திரம் போட்டு குச்சியை முழுசாக்கறேன்" எனச் சொல்லி, 'ஜிங்கிலி பிங்கிலி புஸ்கா' எனச் சொல்லுங்கள்.

கைக்குட்டையை மேசை மீது விரித்துக் காட்டுங்கள். வாவ்... உடைந்த தீக்குச்சி முழுசாகவே இருக்கும்.

'வேற குச்சியை மறைச்சுவெச்சிருந்து, மாத்திட்டதா டவுட் வரலாம். இன்னொரு முறை செய்வோம். ஒரு குச்சியில் பேனாவால் மார்க் பண்ணுங்க" எனச் சொல்லுங்கள்.

நண்பர்கள் தீக்குச்சியில் மார்க்செய்த பிறகு, மீண்டும் கைக்குட்டையால் மூடி, உடைக்கச் சொல்லுங்கள். விரித்துக் காட்டுங்கள். அட, மார்க் செய்த தீக்குச்சி முழுதாக இருக்கும்.

ரகசியம் இதுதான். கைக்குட்டையின் நான்கு முனைகளிலும் கொஞ்சம் மடித்துத் தையல் போட்டிருக்கும். ஏற்கெனவே, அதற்குள் ரகசியமாக இரண்டு தீக்குச்சிகளை நுழைத்து வையுங்கள். கைக்குட்டையை மடிக்கும்போது, முனையில் மறைந்து இருக்கும் குச்சியை உடைப்பதற்கு ஏற்ப கைக்குள் கொண்டுவர வேண்டும். நண்பர்கள் வைத்த குச்சியை நைசாக உள்ளங்கையில் வைத்துக்கொள்ள வேண்டும். அவ்வளவுதான்.யூ

### ம(த)ந்திர டிப்ஸ்!

கைக்குட்டையை விரித்துக்காட்டும்போது, முனைக்குள் மறைந்திருக்கும் தீக்குச்சிகள், புடைத்துக்கொண்டு தெரிந்துவிடக் கூடாது. எனவே, இடைவெளி சரியாக இருக்கும்படி மடித்துத் தைக்கப்பட்ட கைக்குட்டையில் குச்சியை மறைக்கவும். கைக்குட்டையின் நிறமும் அடர்த்தியாக இருக்க வேண்டும்.

கையோடு சேர்ந்து கைக்குட்டையை மடிக்கும்போது, மறைத்து இருக்கும் குச்சிப் பகுதி வரும் வகையில், லாகவமாகவும் வேகமாகவும் மடிக்க வேண்டும். நண்பர்கள் வைத்த தீக்குச்சியை உள்ளங்கைக்குள் மறைத்துக் கொள்ளும்போதும், மீண்டும் கைக்குட்டைக்கு கொண்டு வரும்போதும் கவனமாக இருங்கள். பயிற்சி மிக முக்கியம். இல்லையென்றால், உங்கள் தந்திரம் அம்பலம் ஆகிவிடும்.

### கலக்கலா கலர் அடி!


என்னைப் பார்த்து கீழே உள்ள படத்துக்கு கலர் அடிங்க!




### புதிரோடு விளையாடு!

#### உடைந்த துண்டு எது?

இந்தப் பெட்டியின் உடைந்த துண்டு எது?







### வித்தியாசங்கள் 10

இரண்டு படங்களுக்கும் இடையே உள்ள 10 வித்தியாசங்களைக் கண்டுபிடிங்க!

### பழங்களில் சுடோகு!

எண்களால் சுடோகு போடுவது போல பழங்களில் சுடோகு போடலாம். மேல் இருந்து கீழ், வலம் இருந்து இடம், ஒரே பழம் வரக் கூடாது.



## மாணவர் பூங்கா



### ஏன் தெரியுமா?

மின்சாரம் செப்புக் கம்பியின் வழியே செல்லும்போது, காந்தப் புலம் உருவாகும் என்பதை அலெக்ஸாண்டர் ஃப்ளெமிங் கண்டுபிடித்தார். அதனை ஒரு சோதனை மூலம் அறிவோம்.

தேவை: பெரிய பற்றரி 1, செப்புக் கம்பி 20 சென்டிமீட்டர், சேஃப்ட்டி பின் 2, ரப்பர் பாண்ட் 2, வட்டமான காந்தம் 1.

செய்முறை: முதலில், பற்றரியின் இரு முனைகளிலும் இரண்டு சேஃப்ட்டி பின்களை வைத்து, ரப்பர் பாண்டால் இணைக்கவும்.

அடுத்து, செப்புக் கம்பியை ஒரு ரூபாய் நாணயம் அளவுக்கு வட்டமாகச் சுற்றவும். கம்பியின் இரு முனைகளும் நேராக இருக்கும்படிச் செய்யவும். காந்தத்தை பற்றரியின் நடுப் பகுதியில் வைக்கவும். அதை இன்னொரு ரப்பர் பாண்டால், கீழே விழாமல் பிணைக்கவும்.

அடுத்து, கம்பியின் இரு முனைகளையும் தீட்டிக்கொண்டு, சேஃப்ட்டி பின்னின் இரு துளைகளிலும் நுழைக்கவும். அப்போது, கம்பி வேகமாகச் சுழல்வதைக் காணலாம்.

இது ஏன்? கம்பியின் வழியே மின்சாரம் பாய்வதால், காந்தப்புலம் உருவாகிறது. அது, கீழே இருக்கும் காந்தத்தில் உள்ள காந்தப்புலத்தின் காரணமாகச் சுற்றுகிறது.


தீபன் ஸ்ரோர்ஸ்
A9 சாலை, கனகறாயன் குளம்,
புளியங்குளம்.
அன்பர்கள்,நண்பர்கள், வாடிக்கையாளர்
அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கின்றோம்.
அத்துடன் உங்களுக்குத் தேவையான
அனைத்துப் பொருட்களையும்
மலிவாக இங்கே பெற்றுக் கொள்ளலாம்.
உரிமையாளர்
K.டிலக்ஸ்சன் (0776172244)
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
இனிய புது வருட
வாழ்த்துக்கள்


யாழ் புகையிரத நிலையத்துக்கு
அருகாமையில்
சகல வசதிகளுடனும்
அதி உயர்தர வலம்புரி ஹோட்டல்.
அன்பர்கள்
நண்பர்கள்
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
இனிய புது வருட
வாழ்த்துக்கள்
Green Grass
The Valampuri


நோர்சி மீடியா நிறுவனத்தின்
❖ தீபம் தொலைக்காட்சி
❖ தீபம் வார இதழ்
❖ தீபம் இணையத்தளம் (www.deepamtv.asia)
ஆகிய ஊடகங்களில் உங்கள் பிரதேச செய்திகள், ஆலய நிகழ்வுகள், விளையாட்டு நிழ்வுகள்
போன்றவை இடம்பெறவேண்டுமெனில்
தொடர்புகளுக்கு
தீபம்
989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு
நல்லூர், யாழ்ப்பாணம்.
(கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிடத்தொகுதி)
தீபம் 24x7




**முறைமையான சாரத்தியத்தை கற்றுக்கொள்ள**
**எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்**

**சாரத்திய அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு தேவையான ஆவணங்கள்**

- ✓ தேசிய அடையாள அட்டை
- ✓ மருத்துவச்சான்றிதழ் (தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம்)
- ✓ பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் (மூலப்பிரதி)
- ✓ திருமண அத்தாட்சிப் பத்திரம் (மூலப் பிரதிபெண்களுக்கு மட்டும்)
- ✓ சாரதி அனுமதிப்பத்திரம் (வைத்திருந்தால்)

**வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும்.**
**(கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)**

- ✓ விண்ணப்பதாரி, கட்டணங்களை தவணை முறை அடிப்படையில் செலுத்த முடியும்.
- ✓ எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புக்களும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.
- ✓ எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- ✓ எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.
- ✓ விரைவில் எழுத்துப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத்தரப்படும்.

**25.12.2017 தொடக்கம் 25.01.2018 வரை பதிவினை மேற் கொள்வோருக்கு விசேட கழிவுக் கட்டணம் வழங்கப்படும்**



## தலைமைக் காரியாலயம்

இல. 57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HOTLINE 0777226247
☎ 0212217678 / 0776140361
sasikadrivingSchool@gmail.com
sasikalearners.com

## கிளை நிறுவனங்கள்

**வேலணை**
வங்களாவடிச் சந்தி, வேலணை
☎ 0212215472 / 0703013012

**மல்லாகம்**
கே.கே.எஸ் வீதி
☎ 0212243393 / 0703013014

**சங்கானை**
ஒடக்கரை வீதி, சங்கானை
☎ 0212251664 / 0703013016

**யாழ்ப்பாணம்**
இல.281C, மணிக்கூட்டுக்
கோபுரவீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212228004

இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி,